இந்திய இலக்கியச் சிற்பிகள்

பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார்

நிர்மலா மோகன்



பண்டிதமணி
மு. கதிரேசன் செட்டியார்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
பட உதவி : நேஷனல் மியூசியம், புது தில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

பண்டிதமணி
மு. கதிரேசன் செட்டியார்

நிர்மலா மோகன்

சாகித்திய அகாதெமி

Pandithamani Mu. Katheresan Chettiar :
Monograph in Tamil By Nirmala Mohan
Sahitya Akademi, New Delhi, 2006. Rs. 25/-

முதல் பதிப்பு : 2006
ISBN- 81-260-2201-9

சாகித்திய அகாதெமி
தலைமை அலுவலகம் :
இரவீந்திர பவன், 35, பெரோஸ் ஷா சாலை,
புது தில்லி 110 001.

விற்பனை

'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டடம்,
டாக்டர் அம்பேத்கர் வீதி, பெங்களூர் 560 001.

443, குணா காம்ப்ளக்ஸ் (பழைய எண் 363)
அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கொல்கத்தா 700 053.

172, மும்பய் மராத்தி கிரந்த ஸங்கிரஹாலய சாலை,
தாதர், மும்பய் 400 014.

விலை : ரூ. 25.00

கணிப்பொறி அச்சு : ஸ்ரீ ஸ்ரீனிவாசா டிசைன்ஸ், சென்னை.
அச்சு : M.L. பிரிண்ட்ஸ், சென்னை

பொருளடக்கம்

முன்னுரை

சாகித்திய அகாதெமியின் 'இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை'யில் நான் எழுதும் மூன்றாவது நூல் இது. ஏற்கனவே கி.வா. ஜகந்நாதன், சோமலெ ஆகிய இருவரைக் குறித்தும் இவ்வரிசையில் நூல்கள் எழுதியுள்ளேன். இருவருள் முன்னவர், தமிழ்த்தாத்தா உ.வே.சா.வின் நன்மாணவர்; அண்மையில் நூற்றாண்டு கண்ட தமிழ்ச் சான்றோர். பின்னவர், உலகம் சுற்றிய தமிழர்; பயண இலக்கியத்தில் முத்திரை பதித்தவர். இப்போது இவ்வரிசையில் பண்டிதமணி மு. கதிரேசனாரைப் பற்றி நூல் எழுதும் வாய்ப்பைப் பெற்றது வாழ்வில் எனக்குக் கிடைத்த பெரும்பேறு ஆகும். பண்டிதமணி இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு மாமணியாய் தமிழுக்குத் தோன்றிய தவமணி; நகரத்தார் மரபில் பிறந்த அருமணி; 'ஊருக்கு உழைத்திடல் யோகம்' என்ற நெறியில் நின்ற அருள்மணி; உருக்கும் திருவாசகத்திற்கு உள்ளொளியுடன் உண்மை உரை கண்ட உயர்மணி; 'மகாமகோபாத்தியாய', 'பண்டிதமணி', 'சைவ சித்தாந்த வித்தகர்', 'முதுபெரும் புலவர்' என்றாற் போல் உயரிய பட்டங்கள் பல பெற்ற புகழ்மணி; தமிழிலும் வடமொழியிலும் பழுத்த புலமை பெற்ற பொன்மணி; நயமும் நகைச்சுவையும் கொலு வீற்றிருக்கும் நன்மணி. பண்டிதமணியின் பல்வேறு பரிமாணங்களைப் புலப்படுத்தும் வகையில் எழுதப் பெற்ற சிறு நூல் இது.

இந்நூலினை உருவாக்கும் முயற்சியில் எனக்கு உற்றுழி உதவியோர் பலர். அவர்களுள் புலவர் ஆ.பழநி, பேராசிரியர் த.மணி, பெரியவர் சி.இராம. நாகப்பர் ஆகியோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். வழக்கம் போல் இந்நூலாக்க முயற்சியிலும் எனக்குத் 'தோன்றிய துணை'யாய் விளங்கிய என் அன்புக் கணவர் பேராசிரியர் இரா.மோகனுக்கும் நெஞ்சார்ந்த நன்றியறிதலை உரித்தாக்குகிறேன்.

1

வாழ்க்கைச் சித்திரம்

"இப் பெருந்தகையாளரை நாடு நன்கறியும். ஏழு மாதங்கூடப் பள்ளிக்கூடத்தில் கல்வி பயிலாமல், பன்னிரண்டு ஆண்டுகள் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்து, தமிழ்ப் பணி ஆற்றிய தனிச்சிறப்பு இவர்க்கு உரியது... முயற்சியும் மன உறுதியும் இருக்குமானால் உடல் ஊன–முற்றவர்களும் உயர்நிலையை அடைய இயலும் என்பதற்குக் கதிரேசனாரின் வாழ்க்கை எடுத்துக்காட்டாகும்."

- சோமலெ*

பிறப்பும் வளர்ப்பும்

*'**பூ**ங்குன்றம்' என்னும் பெயரைக் கேட்டவுடன் நம் நினைவுக்கு வருபவர்கள் இரண்டு பேர். ஒருவர், 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாடிய சங்கச் சான்றோர் கணியன் பூங்குன்றனார்; மற்றொருவர், 'பண்டிதமணி' என்று அனைவராலும் போற்றப்படும் மகாமகோபாத்தியாய, முதுபெரும் புலவர் மு.கதிரேசன் செட்டியார்.+ 'பூங்குன்ற நாடு' என்பது பாண்டிய நாட்டின் உட்பகுதிகளுள் ஒன்றாக விளங்குவது ஆகும். இந்நாடு 25 கிராமங்களைக் கொண்டதாகும். அவற்றுள் ஒன்றுதான் மகிபாலன்பட்டி. இவ்வூர் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் 96 ஊர்களுள் ஒன்றாக விளங்குகிறது. மணிமுத்தாறு என்னும் ஆறு இவ்வூரைச் சூழ்ந்து எல்லாப் பக்கங்களிலும் பாய்ந்ததால், இவ்வூர் இயற்கை வளம் நிரம்பியதாக - செல்வச் செழிப்பு மிக்கதாக - விளங்கியது.*

** பண்டிதமணி, ப. 9.*

+ இனி இவர், இந்நூல் முழுவதும் 'பண்டிதமணி' என்ற சிறப்புப் பெயராலேயே குறிப்பிடப் பெறுவார்.

எனினும், புறவுலகத்தோடு தொடர்பு கொள்வதற்கான போக்குவரத்து வசதிகளோ, அஞ்சல் நிலையமோ, மருத்துவ மனைகளோ இல்லாத சிற்றூராகவும் இருந்தது. இத்தகைய மகிபாலன்பட்டியில், தன வணிகராக விளங்கிய முத்துக்கருப்பன் செட்டியாருக்கும், அவரது துணைவியார் சிவப்பி ஆச்சிக்கும் 1881-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பதினாறாம் நாள் வெள்ளிக்கிழமையன்று, திருவாதிரை நட்சத்திரத்தில் ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குக் 'கதிரேசன்' எனப் பெயர் சூட்டினர் பெற்றோர். இக்கதிரேசன் தான் பின்னாளில் தமிழ்கூறு நல்லுலகால் மகாமகோபாத்தியாய, சைவ சித்தாந்த வித்தகர், முதுபெரும் புலவர், பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் எனப் போற்றப் பெற்றவர் ஆவார்.

திண்ணைப் பள்ளியில் பயிலல்

பண்டிதமணி, பிறந்து இரண்டு ஆண்டுகள் வரை உடல்நலத்தோடு இருந்தார்; மூன்றாம் வயதில் இளம்பிள்ளை வாத நோய் அவரைத் தாக்கியது. அதனால் ஏழு வயது வரை பெற்றோர் அவரைப் பள்ளிக்கு அனுப்பவில்லை. அதன் பின்னர், அவரைத் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தனர். செட்டி நாட்டுத் திண்ணைப் பள்ளிகளில், படிப்பு என்பது அரிச்சுவடி, எண் சுவடிப் படிப்புத்தான்; 'திரைகடல் ஓடி திரவியம் தேடிய' செட்டி நாட்டுப் பெருமக்கள், இப்படிப்பு போதும், பிற தேவையில்லை எனக் கருதுபவர்கள். அதனால் ஏழு மாதம் வரை தான் பண்டிதமணி, திண்ணைப் பள்ளியில் பயின்றார். தம் இளமைக் காலக் கல்வி அனுபவத்தைப் பற்றிப் பண்டிதமணி கூறுவது வருமாறு :

"யான் ஆறேழ் ஆண்டு அகவை உடையனாக இருக்கும்பொழுது தான், திண்ணைப் பள்ளிக்கூடத்திலே கல்வி பயின்றேன். அப்பள்ளியிலே பாடமாகவுள்ள ஆத்திசூடி, உலகநீதி முதலிய சிறு நூல்களை யான் பயில நேர்ந்தபோது, அச்சிறு சிறுவாக்குகளின் அழகு என் நெஞ்சத்தைக் கொள்ளை கொண்டது. 'ஆ! இவைகள் எத்துணை அழகாகவும் இனிமையாகவும் அமைக்கப்பட்டுள்ளன!' என்று அடிக்கடி வியப்படைவேன். அவற்றில் ஏதோ ஒரு தெய்வத்தன்மை அமைந்திருப்பதாகவே எனக்குத் தோன்றிற்று. மேலும், அவற்றின் பொருள்களும் எனக்குத் தெளிவாகவே

புலப்பட்டன. அவற்றை ஆர்வத்தோடு ஒரு சில திங்களிலேயே கற்று மனப்பாடஞ் செய்து கொண்டேன். அதன்பின்னர் இவ்வினத்துப் பொருள்கள் இன்னும் இவ்வுலகில் உள்ளன என்பதும் அறிந்தேன்; அவற்றைப் பெற்றுப் பயிலுதல் எத்துணை இன்பமாக இருக்கும் என்று எண்ணினேன். அக்காலத்தே நூல்கள் கிடைப்பதே அருமை. திருத்தொண்டர் புராணம், கம்ப ராமாயணம், சிற்சில பிள்ளைத்தமிழ் இவைகளே அவ்விளம்பருவத்தே என் கைக்குக் கிடைத்தன. அவற்றை ஆர்வத்தோடே ஓதினேன். அப்பெருநூல்களும் தஞ்செய்யுட் பொருளை இளைஞனாகிய எனக்கு உலோவாது அளித்தன. திருத்தொண்டர் புராணம், கம்ப ராமாயணம் போன்ற நூல்களின் உயரிய செய்யுட்களும், ஆசிரியரின் உதவியின்றியே யான் பயின்ற பொழுதும், பழம்பாடம் போன்று எனக்கு விளக்கமாகப் பொருள் புலப்பட்டது." (மேற்கோள் : சோமலெ, பண்டிதமணி, பக்.22-23).

பண்டிதமணியின் இக்குறிப்பு, அவரது அறிவாற்றலையும், படிப்பில் அவருக்கு இருந்த ஆர்வத்தையும் உணர்த்தி நிற்கின்றது. எனினும் உடற்குறை காரணமாகவும், குடும்பச் சூழல் காரணமாகவும் பண்டிதமணியால் தொடர்ந்து பள்ளிக்குச் சென்று படிக்க இயலவில்லை.

இலங்கையில் பணியாற்றல்

பொருள் ஈட்டுவதற்காகச் சிறு வயதிலேயே - தம் பதினோராம் வயதிலேயே - இலங்கைக்குச் சென்றார் பண்டிதமணி. கம்பளை - நுவரேலியா வழியில் உள்ள இரட்டைப் பாதைத் தோட்டத் தொழிலாளருக்கு அரிசி, புடவை முதலியவற்றை விற்று வந்த வியாபார நிலையத்தில் அவர் வேலை பார்த்து வந்தார். மூன்று ஆண்டுகள் அங்கே தங்கிப் பணிபுரிந்தார். இந்நிலையில் தந்தையார் இறந்ததால், பண்டிதமணி மீண்டும் தாய்நாட்டிற்குத் திரும்பி வந்து சேர்ந்தார். பதினான்கு வயதிலேயே குடும்பப் பொறுப்பினை ஏற்றார்; மூன்று வயதில் அவரைத் தாக்கிய இளம்பிள்ளை வாத நோய் இப்போது மீண்டும் தாக்கத் தொடங்கியது. அதன் காரணமாக அவரது இடக்காலும், இடக்கையும் வலிமை இழந்தன. ஊன்றுகோல் இல்லாமல் நடக்க இயலாத நிலை ஏற்பட்டது.

அரசன் சண்முகனாரிடம் இலக்கண நூல்களைப் பயிலல்

சிறுவயதில் இளம்பிள்ளைவாத நோயால் தாக்கப்பட்டு உடல் நலிந்திருந்தாலும், பண்டிதமணி ஒருபோதும் தம் உள்ளம் நலியாதவர். அவர் பள்ளிக்குச் சென்று படிக்கவில்லை. எனினும், தாமாகவே முயன்று, பல நூல்களையும் கற்றுத் - தெளிந்தார். அவர் தம் அறிவுக்கு எட்டாத பல்வேறு நூல்களின் கருத்துக்களைத் தக்க புலவர்களின் துணையுடன் பயின்றார். 'சான்றோர் சான்றோர் பாலர் ஆப; சாலார் சாலார் பாலர் ஆகுபவே' (புறம் 218) என்னும் புறநானூற்றுப் பாடலுக்கு ஏற்ப, பண்டிதமணியுடன் நட்புரிமை பூண்டொழுகிய சான்றோர் பலர் ஆவர். 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பதற்கு ஏற்ப. பண்டிதமணியின் இல்லத்தை நாடி வந்த சான்றோர்களுள் சோழவந்தான் அரசன் சண்முகனார், கந்தசாமிக் கவிராயர், சுந்தரேசுவையர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

மதுரைக்கு அருகில் உள்ள சோழவந்தான் என்னும் ஊரைச் சேர்ந்தவர் அரசன் சண்முகனார். பரிமேலழகர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், அடியார்க்கு நல்லார் போன்ற பண்டை உரையாசிரியர்களோடு ஒப்ப வைத்து மதிக்கத்தக்க நுண்மாண் நுழைபுலம் படைத்த சான்றோர் அவர்; தொல்காப்பியம் முதலான பழந்தமிழ் நூல்களின் நுணுக்கங்களை ஆராய்ந்து உணர்த்துவதில் ஆற்றல் வாய்ந்தவராக விளங்கியவர் அவர்; எனினும் அக்காலத்துத் தமிழ் உலகம் அவரை உள்ளவாறு அறிந்து போற்றவில்லை; இப்புலவர் பெருமான் வறுமையால் நலிந்தபோது, பண்டிதமணி அவரது அருமையை உணர்ந்து, தம்மாலான பொருள் உதவி புரிந்தார்; இலங்கையில் இருந்து அவர் பொருளுதவி பெறவும் துணையாக இருந்தார் பண்டிதமணி.

இவ்விருவர்தம் சந்திப்பே ஒரு சுவையான நிகழ்ச்சியாக அமைந்துள்ளது. ஒருமுறை, பண்டிதமணி சிகிச்சை பெறுவதற்காகப் பொன்னமராவதியில் உள்ள மருத்துவ மனைக்குச் சென்றிருந்தார். அப்போது மருத்துவர் வெளியே சென்றிருந்தார். பணியாள் போலக் காட்சி தந்து சட்டை-யின்றியும் குடுமியோடும் ஒருவர் மருத்துவமனையில் நின்று கொண்டிருந்தார். பண்டிதமணி அவரைப் பார்த்து, "ஐயா, கொஞ்சம் தண்ணீர் கொண்டு வர முடியுமா?" என்று வினவ,

அவர் உடனே சென்று, தண்ணீர் கொண்டு வந்து பணிவுடன் கொடுத்தார். பிறகு, அவரை நோக்கி, "இட்டிலி கொண்டு வருக" என்றார் பண்டிதமணி. அவர் உடனே சென்று இட்டிலியும் கொண்டு வந்து கொடுத்தார். இந்நிலையில் மருத்துவர் வேணுகோபால் நாயுடு மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தார். "யான் அறிமுகப்படுத்தி வைக்கும் முன்னரே, பெரும் புலவர்களாகிய நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் தெரிந்து கொண்டு விட்டீர்களே!" என்று அவர் சொன்ன பிறகே, தமக்குப் பரிவுடன் பணிவிடை செய்த அந்த அடக்கம் நிறைந்த அன்பர்தான் சோழவந்தானைச் சேர்ந்த மகாவித்துவான் அரசன் சண்முகனார் என்பதைப் பண்டிதமணி அறிந்து கொண்டார். அன்று தொடங்கி, இருவரும் மிக நெருங்கிய நண்பராயினர். பண்டிதமணியின் புலமைக்கு இவர்தம் நட்பு உறுதுணையாக அமைந்தது. அரசன் சண்முகனாரது நட்பினைத் தாம் பெற்ற பெரும் பேறாகக் கருதிப் போற்றினார் பண்டிதமணி. அவரால் தாம் அடைந்த நன்மையை நினைவு-கூர்ந்து பலரிடத்தும் போற்றிக் கூறியுள்ளார் பண்டிதமணி.

"இலக்கியங்களாகிய செய்யுள்கட்கு இயல்பாகவே யான் பொருளுணர்ந்து கொண்டேன் எனினும், இயனூலாகிய தொல்காப்பிய முதலிய நூல்களோ, சேனாவரையர் முதலியவர்களின் உரைகளோ, என் அறிவிற்கெட்டாத ஆழமுடையனவாக இருந்தன. என் அறிவிற்கியலும் துணையும், அந்நூல்களை யான் பிறர் உதவியின்றிப் படித்தேன். பற்பல செய்திகள் எனக்கு விளங்காப் புதிராகவே இருந்தன; எண்ணிறந்த ஐயங்கள் தோன்றின. இவ்வியல் நூல்களை ஐயந்திரிபறக் கற்றாலன்றிப் புலமை நிரம்பியதாகாதெனவும் அறிந்து கொண்டேன். அந்நூலின் பெயரறிவார்கூட அக்காலத்தே அரியராயினர். அவற்றைக் கற்க ஆசிரியர் வேண்டுமே! ஆசிரியர் எங்கே கிடைப்பார்? இவ்வாறு இயனூல் கற்ற ஆசிரியரை யான் அவாவியிருந்த காலத்தே, திருவருளின் உதவியால் சோழவந்தான் அரசன் சண்முகனாரை யான் காண நேர்ந்தது. அவருடன் அளவளாவி நட்புரிமையும் கொண்டேன். அப்புலவர் பெருமானும், யானும் ஒத்த தகுதியுடைய நட்புரிமையே கொண்டிருந்தோம் எனினும், அவர் எனக்கு ஆசிரியரே ஆவார். அவருடைய நுண்மாணுழை புலத்தையும், இயனூலறிவையும் உணர்ந்து யான் பெரிதும் வியந்தேன். இவர் என்னோடு என்னில்லத்திலேயே பற்பல

செவ்விகளில் பன்னாள் உடனுறைந்து இயனூலறிவில் எனக்குள்ள குறையைப் போக்கினர். இப்புலவர் பெருமானின் நட்புக் கிடைத்ததன் பயனாகத் தொல்காப்பிய முதலிய இயல்நூல்களும் எனக்கு இலக்கியம் போன்று இன்புற்றுப் பயிலும் 'இனிய நூல்களாயின" (மேற்கோள் பொ.வே.சோமசுந்தரனார், பண்டிதமணி, பக்.17-18).

எனவே, 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே' என்னும் புறநானூற்றுப் பாடல் கருத்துக்கேற்ப, நுண்மாண் நுழைபுலம் பெற்ற புலவரது நட்பினைப் பெற்றுக் கல்வி கற்றவர் பண்டிதமணி என்பது விளங்கும். மேலும் புலவராக மட்டுமன்றிப் புலவர்க்கு உதவி புரியும் புரவலராகவும் திகழ்ந்தார் அவர் என்பதையும் அறிய முடிகின்றது.

மு.ரா.கந்தசாமிக் கவிராயருடன் ஏற்பட்ட தொடர்பு

அரசன் சண்முகனார் மூலமாகப் பண்டிதமணி பெற்ற பிறிதொரு நண்பர் மு.ரா.கந்தசாமிக் கவிராயர். அவர், மதுரையில் இருந்த 'வித்தியாபானு' என்னும் அச்சகத்தின் உரிமையாளர்; 'குமண சரித்திரம்' முதலான பல நூல்களின் ஆசிரியராகவும் விளங்கியவர். அவர்தம் நட்பைப் பெற்ற பண்டிதமணி, 'வித்தியாபானு' இதழில் அவ்வப்போது சில கட்டுரைகளை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியாரின் அறிமுகம்

பண்டிதமணி, மதுரைக்குச் செல்லும் பொழுதெல்லாம் மு.ரா.கந்தசாமிக் கவிராயரைச் சந்திப்பது வழக்கம். இங்ஙனம் ஒருமுறை கவிராயரது இல்லத்திற்குச் சென்றபோது அறிமுகமானவர்தான் வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார். 'இராவ் சாகிபு', 'முதுபெரும் புலவர்', 'தமிழ்ப் பெருங்கவி' என்றெல்லாம் போற்றப்பட்ட அவரது புலமையைக் கண்ட பண்டிதமணி அவருடனும் நெருங்கிய நட்புக் கொண்டார். ஐப்பசி மாதந்தோறும் இராமாயண ஏடு படித்தல் என்பது செட்டி நாட்டில் பின்பற்றப்பட்டு வந்த ஒரு வழக்கம். செட்டி நாட்டு மக்கள் இராமாயணக் கதையையும், கம்பன் காப்பியச் சுவையையும் உணரும் வகையில், வெ.ப.சுப்பிரமணிய முதலியாரின் கம்பராமாயண சாரப் பதிப்பினை வாங்கவும், வாசிக்கவும் பண்டிதமணி ஏற்பாடு செய்தார்.

மறைமலையடிகளின் நட்பினைப் பெறல்

1906-ஆம் ஆண்டு, பண்டிதமணி அரசன் சண்முகனாரிடமிருந்து ஓர் அறிமுகக் கடிதம் பெற்று, நாகப்பட்டினம் சென்று, மறைமலையடிகளைச் சந்தித்தார்; அவருடைய நட்பையும் பெற்றார். இருவரது நட்பும் வளர்பிறை போல் வளர்ந்தது; இருவரிடையே பல காலம் கடிதப் போக்குவரத்தும் இருந்தது. மறைமலையடிகள் பண்டிதமணிக்கு எழுதிய முதல் கடிதத்தில் தம் நட்பு தொடர்ந்து செழித்து வளர வேண்டுமென வேண்டியுள்ளார். "தங்களை நேரில் அளவளாவப் பெற்றக்கால், தங்கள் அரும்பெருங் குணமாட்சியும், சிவபத்திப் பெருந்திறமும், செந்தமிழ்ப் புலமையும் என்னுள்ளத்தில் மிகப் பதிந்து மகிழ்வுறுத்தின. தங்களை நண்பராகப் பெற்ற எனது புண்ணியத்தினையே மிக வியந்து நமது நட்பின் கெழுதகைமை எழுமை எழு பிறப்பும் செழிப்புறுக வெனத் திருவருளை வேண்டி வழுத்துகின்றேன்" (சோமலெ, பண்டிதமணி, ப.38) என்னும் கடிதக் குறிப்பு, மறைமலையடிகள், பண்டிதமணி மீது கொண்டிருந்த பெருமதிப்பினைப் புலப்படுத்துகிறது.

ஞானியார் அடிகளிடம் சொற்பொழிவுக் கலையினைக் கற்றல்

அக்காலத்தில் தலைசிறந்த சொற்பொழிவாளர் என அனைவராலும் பாராட்டப் பெற்றவர் திருப்பாதிரிப் புலியூர் மடத்துத் தலைவரான ஞானியார் அடிகள். இவர் சைவ சாத்திரப் புலமையும், இலக்கண அறிவும், பழுத்த மெய்ஞ்ஞானமும் வாய்க்கப் பெற்றவர். மறைமலையடிகள் மூலம், ஞானியார் அடிகளைச் சந்தித்தார் பண்டிதமணி. அவருடன் நட்புக் கொண்டபின் ஞானியார் அடிகளாரின் பல சொற்பொழிவுகளைக் கேட்கும் வாய்ப்பினையும் அவர் பெற்றார். அக்கால கட்டத்தில் பொது மேடைகளில் ஆங்கிலத்தில் தான் சிறந்த முறையில் சொற்பொழிவாற்ற இயலும் எனப் பலரும் கருதியிருந்தனர். ஞானியார் அடிகளாரது சொற்பொழிவுகள் வாயிலாகச் சொல் இனிமையும், கருத்தாழமும் நிறைந்த பேச்சுக்களைத் தமிழ் மொழியிலும் பேச இயலும் என்பதை உணர்ந்தார் பண்டிதமணி; தாமும் அவ்வாறு பேச வேண்டும் என்னும் எண்ணத்தை அடிகளாரது நட்பின் மூலம் பெற்றார் அவர். மேலும், ஞானியார், தாம் பேசும் ஒவ்வொரு பொழிவுக்கும்

உரிய குறிப்புகளை ஒழுங்குபடுத்தி எழுதி வைக்கும் முறையைக் கண்ட பண்டிதமணியார், தாமும் அவ்வாறே குறிப்பெடுத்து நிரல்படப் பேசும் வழக்கத்தை மேற்கொள்ளலானார்.

உ.வே.சாமிநாதையருடன் கொண்ட நட்பு

திருப்பாதிரிப் புலியூரில் ஞானியார் அடிகளைச் சந்தித்து விட்டுத் திரும்பும் வழியில், பண்டிதமணி கும்பகோணத்தில் உள்ள கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராகப் பணியாற்றிய உ.வே.சாமிநாதையரைச் சந்தித்தார். இருவரும் கலந்து உரையாடி நட்புப் பூண்டனர். பின்னர் இருவரும் பலமுறை சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றனர்; இருவரது நட்பும் வளர்ந்தது; 1903-ஆம் ஆண்டு முதலாக இருவரிடையே கடிதத் தொடர்பும் இருந்து வந்தது.

தல யாத்திரை மேற்கொள்ளல்

தன் அருமை மகனைச் 'சான்றோன்' என அறிஞர்கள் பலரும் பாராட்டுவதைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்த சிவப்பி ஆச்சியார், மகனுக்குத் திருமணம் நடைபெற வேண்டும் என்று கருதி இராமேசுவரத்திற்குத் தல யாத்திரை மேற்கொண்டார். அன்னையாருடன் சென்ற பண்டிதமணி, அதைத் தம் இலக்கிய யாத்திரையாக மாற்றிக் கொண்டார். இராமேசுவரம் செல்லும் வழியில் இராமநாதபுரத்தில் மகாவித்துவான் ரா.இராக-வையங்காரைச் சந்தித்தார்; இருவரும் விரிவாக உரையாடினர்.

இராகவையங்கார் பண்டிதமணியிடம் சீவக சிந்தாமணியில் சில கேள்விகள் கேட்க, அவற்றிற்குச் சிறந்த முறையில் விடை கூறினார் பண்டிதமணி. பண்டிதமணி கூறிய விளக்கங்களைக் கேட்டு மகிழ்ந்த இராகவையங்கார், பண்டிதமணியைப் பாண்டித்துரைத் தேவர்க்கு அறிமுகம் செய்து வைத்தார். அவரது புலமையை நன்கு உணர்ந்த பாண்டித்துரைத் தேவர், மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நடத்தும் புலவர்களுள் ஒருவராகப் பண்டிதமணியையும் ஏற்றுக் கொண்டார்.

காரைக்குடி சொக்கலிங்கனாரிடம் சைவம் பயிலல்

பண்டிதமணி, தமிழ் மொழியையும், சைவ சமயத்தையும் இரண்டு கண்களாகப் போற்றியவர். ஆதலால் தாமே முயன்று சைவ சமய சாத்திரங்களையும், சிவாகம நூல்களையும்

பயின்றிருந்தாலும், சமயத் துறையில் வல்ல பெரியார் ஒருவரது துணை கொண்டு கற்றல் வேண்டும் என்று எண்ணினார். ஆதலால், அக்காலத்தில் சைவ சமய நூல்களிலும், சைவ சமயத்திலும், சிவபெருமானிடத்தும் பேரன்பு பூண்டு சிறந்து விளங்கிய காரைக்குடி சொக்கலிங்கையா என்னும் பெரியாரை அடைந்து, அவர்பால் சைவ சமயப் பெரு நூல்களை இரண்டு ஆண்டுகள் பயின்று, அச்சமய அறிவும் நிரம்பப் பெற்றார்.

தருவை நாராயண சாத்திரியாரிடம் வடமொழி பயிலல்

தமிழ் மொழியில் உள்ள தொல்காப்பியம் முதல் உலக நீதி வரை உள்ள பல்வேறு இலக்கண, இலக்கிய நூல்களையும் கற்றுத் தேர்ந்தார் பண்டிதமணி; சிவஞான யோகிகளின் சிவஞான போதப் பேருரை முதலான தோத்திர நூல்களையும் நன்கு அறிவதற்கு வடமொழிப் பயிற்சி இன்றியமையாதது என உணர்ந்தார். ஆதலால், வடமொழியில் வல்லுநரான தருவை நாராயண சாத்திரியார் என்பவரை ஆசிரியராகக் கொண்டு ஐந்து ஆண்டுகள், அம்மொழியில் உள்ள உயர்ந்த காவியங்கள், நாடகங்கள் முதலான பல்வேறு இலக்கியங்களையும், பாணினி, வியாகரணம் முதலான பற்பல இலக்கண நூல்களையும் இனிதே பயின்றார். வடமொழி வல்லாரும், ‘இவரது புலமைக்கு முன் நாமெல்லாம் எம்மாத்திரம்?’ என்று வியக்கும் அளவிற்குப் புலமையும் பெற்றார். இப்புலமையே பண்டிதமணி பல வடமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்கும் துணை நின்றது.

‘சன்மார்க்க சபை’ நிறுவுதல்

பண்டிதமணி, மதுரைத் தமிழ்ச் சங்க உறுப்பினர் ஆன பின்னர்த் தமிழ்ச் சங்கத்து நிகழ்ச்சிகளில் பெரும்பங்கு கொண்டார்; தம் உடல் நிலையையும் போக்குவரத்து வசதியின்மையையும் பொருட்படுத்தாமல், தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும் ஒவ்வொரு கூட்டத்திலும் கலந்து கொள்ளலானார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தைப் போலத் தாம் வாழும் செட்டி நாட்டுப் பகுதியிலும் தமிழை வளர்ப்பதற்கும், சமயப் பணி புரிவதற்கும் ஒரு சங்கம் வேண்டும் என்னும் எண்ணம் அவர் உள்ளத்தில் எழுந்தது. மேலைச்சிவபுரியில்

வாழ்ந்து வந்த வள்ளல் வ.பழ.சா.பழநியப்பச் செட்டியாரைக் காணும்போதெல்லாம், பாண்டியர்கள் சங்கம் வைத்துத் தமிழ் மொழியை வளர்த்த வரலாற்றைப் பண்டிதமணி எடுத்துக் கூறினார்; சமயக் கொள்கைகள் சங்கங்கள் வாயிலாகவே பரவும் எனவும் எடுத்துரைத்தார்; தம் கூற்றுக்குச் சான்றாக, மதுரையிலும், நாகையிலும் தொடங்கப் பெற்ற தமிழ்ச் சங்கங்களை எடுத்துக் காட்டினார். இதன் பயனாக, செட்டி நாட்டிலும் தமிழ்ச் சங்கம் ஒன்றினை ஏற்படுத்த வேண்டும் என்னும் எண்ணம் பழநியப்பர் உள்ளத்தில் அரும்பியது; அவ்வெண்ணத்தின் விளைவாக, 1909-ஆம் ஆண்டு மே மாதம் 13-ஆம் நாள் மேலைச்சிவபுரியில் 'சன்மார்க்க சபை' தோன்றியது. சோழவந்தான் புலவர் மகாவித்துவான் அரசஞ்சண்முகனார் தலைமை தாங்க, மு.ரா.கந்தசாமிக் கவிராயர், சொ.வேற்சாமிக் கவிராயர், வேந்தன்பட்டிப் புலவர், வாத்தியார் என்ற சைவப் பிள்ளை ஆகியோர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அவையோர் கருத்துப்படி, இச்சபைக்கு 'மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை' என்னும் பெயர் இடப்பெற்றது. இச்சபையின் கிளை நிலையங்களாக 'கணேசர் செந்தமிழ்க் கலாசாலை' என்றொரு கலைக் கழகமும், 'தொல்காப்பியனார் புத்தக சாலை' என்றொரு நூல் நிலையமும் நிறுவப்பட்டன. திங்கள்தோறும் சொற்பொழிவுகளும் ஆண்டுதோறும் விழாக்களும் சன்மார்க்க சபையில் நடந்தன.

சன்மார்க்க சபையின் நோக்கங்கள்

நாட்டின் பல்வேறு இடங்களிலும் உள்ள அறிவு ஒழுக்கங்களில் சிறந்த புலமையாளர்களை அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்தல், கல்வியில் சிறந்த அறிஞர் ஒருவரை இச்சபையின் ஆசிரியராக அமர்த்தி, மாணவர்களுக்கு உண்டி, உடை, உறையுள் முதலியன வழங்கி நன்முறையில் கல்வி பயிற்றுவித்தல், தமிழ்,வடமொழிகளில் உள்ள சிறந்த நூல்களைத் தொகுத்துரைத்தல், கல்வி, ஒழுக்கம் போன்ற பொருள் பற்றிய கருத்துக்களை அச்சிட்டு இலவசமாக வழங்குதல், இலக்கண, இலக்கிய, சமயத் தொடர்பான இதழ்களை வருவித்துப் படிக்கத் தூண்டுதல், மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்தும் தனித்தமிழ்த் தேர்வில் சிறந்த முறையில் மாணவர்களைத் தேர்ச்சி பெறச் செய்தல் முதலியன அச்சபையின் நோக்கங்களாக அமைந்தன.

சன்மார்க்க சபை ஆற்றிய தொண்டுகளுள் ஒன்று தமிழ் நூல் வெளியீடு. பண்டிதமணியின் முதல் நூலாகிய 'நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம்' சபையினரால் இரண்டாம் ஆண்டு வெளியிடப்பட்டது; 'வடமொழியினின்றும் தமிழில் மொழிபெயர்க்கப் படாதனவற்றுள் அரியனவற்றை மொழி பெயர்த்து வெளியிடுதல்' என்பது 13-ஆம் ஆண்டில் சபையின் ஒரு புது நோக்கம் ஆயிற்று. வடமொழி வித்துவான் ஒருவர் அமர்த்தப்பட்டார். 'சுலோசனை', 'உதயன சரிதம்', 'சுக்கிர நீதி', 'மண்ணியல் சிறுதேர்' எனப் பண்டிதமணியார் மொழி பெயர்த்த நான்கு தமிழ் நூல்களும் சபையின் வெளியீடுகளாயின. 'பிரதாப ருத்திரீயம், மாலதி மாதவம், ஹிருத்ய தர்ப்பணத்திலுள்ள இரசங்களைப் பற்றிய பகுதி என்னும் இவ்வரிய நூல்களும், கௌடலீயம் என்னும் பொருள் நூலின் ஒரு பகுதியும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன' என்று 25-ஆம் ஆண்டறிக்கை கூறுகின்றது. பண்டிதமணியார் மொழிபெயர்த்து ஆக்கிய அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கௌடலீய வெளியீடு சன்மார்க்க சபை ஆதரவில் முன்னர் அவர் செய்த பணியின் தொடர்ச்சியே என்று அறிக்கைக் குறிப்பால் அறியப்படும்' (வ.சுப.மாணிக்கம், 'சன்மார்க்க சபையின் தொண்டு', சபைக் கட்டுரைகள், ப.96).

சன்மார்க்க சபையே, செட்டி நாட்டில் நிறுவப்பட்ட முதல் சபை என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் புலவர் பெருமக்கள் சபையாரால் அழைக்கப் பெற்றனர். அவர்தம் அறிவுரைகளைக் கேட்பதற்குத் தொலைவில் உள்ள மக்களும் திரண்டு வரத் தொடங்கினர். இச்சபையின் மூலமாகத் தமது இன மக்கள் கல்வியறிவு பெறுவதை அறிந்த புரவலர்கள் பலர், தத்தம் ஊரிலும் இத்தகைய சபைகள் நிறுவப்படுதல் வேண்டும் என்று விரும்பினர். அதனால் செட்டி நாட்டில் பற்பல தமிழ்க் கழகங்கள் தோன்றி அறிவொளி பரப்பின. இதற்கு முதன்முதலாக வித்திட்டவர் பண்டிதமணியே ஆவார். தம் குலப் பெரியோர்களைச் சன்மார்க்க சபையில் ஒன்று கூட்டி, அவர்கள் முன்னிலையில் சன்மார்க்க சபை போன்ற அமைப்புகளின் இன்றியமையாமையை வலியுறுத்துவாராம் பண்டிதமணி.

"தமிழ்க் கலாசாலைகள் ஊர்தோறும் நிறுவுதல் வேண்டும்; பத்து ஊர்களுக்கு ஒன்றாக எல்லா வசதிகளும் நிரம்பிய ஒவ்வொரு பெரிய நகரங்களிலும் புலவர் பெருமக்கள் அடிக்கடி வந்து அறிவுரை வழங்குதற்கேற்றனவாகக் கழகங்கள் நிறுவுதல் வேண்டும்; எடுத்துக்காட்டாக இச்சன்மார்க்க சபையை நினைவு கூர்மின். இது நிறுவப்பட்டு இரண்டாண்டுகள் ஆயின. இவ்விரண்டாண்டினுள் பிறந்த நாள் தொடங்கி யாம் கண்டறியாத எத்தனை பெரியோர்களைக் கண்டோம்; அவர் வாயிலாக எவ்வளவு நுண்பொருள்களைக் கேட்டு அறிவுப் பெருக்கம் எய்தினோம். நம் தனவணிக நகரங்களில் இச்சன்மார்க்க சபை போன்று ஒரு புது சபையேனும் தோன்றுவனவாயின் நம் மக்கள் அறிவுச் செல்வத்தை நிரம்ப எய்தி நாகரிக நிலையில் மேம்படுவாரல்லரோ? பொருளுடையார் என்று நம்மைப் பிறர் புகழ்வதினும், அறிவுடையார் என்று புகழ்வதன்றோ நமக்கு மேம்பாடு தரும்?" (மேற்கோள் : பொ.வே.சோமசுந்தரனார், பண்டிதமணி, ப.24) என்றாற் போல் எழுச்சி உரை ஆற்றிச் செட்டி நாட்டில் பல கழகங்களும், சங்கங்களும் தோன்றுவதற்கு வழி வகுத்துக் கொடுத்தார் பண்டிதமணி. 'பொருளுடைமையை விட, அறிவுடைமையே நனி நன்று' எனத் தம் மக்களுக்கு உணர்த்தி, கல்விப் பணியில் அவர்களை முனைப்புடன் ஈடுபடச் செய்ததில் பண்டிதமணியின் பங்களிப்பு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

திருமணம்

பண்டிதமணியின் உடற்குறை காரணமாக, அவருக்குப் பெண் கொடுக்க யாரும் முன்வரவில்லை. அதைப் பொருட்படுத்தாது, குடும்பப் பொறுப்பையும் தாங்கிக் கொண்டு, தம் உடன்பிறந்த மூன்று சகோதரிகளுக்கும், இரண்டு தம்பியர்க்கும் திருமணம் முடித்து வைத்தார் பண்டிதமணி.

1912-ஆம் ஆண்டு அப்போது பண்டிதமணிக்கு 32 வயது. வேகுபட்டி என்னும் சிற்றூரில் வாழ்ந்து வந்த பண்டிதமணியின் அத்தை குடும்பத்தினர் அவருக்குப் பெண் கொடுக்க முன்வந்தனர். அதற்கு ஒரு காரணமும் இருந்தது. பண்டிதமணியின் அத்தையின் மூத்த மகள் கலியாணி என்பவர். முதலில் இப்பெண்ணை அவருக்கு மணமுடிப்பதாக இருந்தது. ஏதோ ஒரு காரணத்தால் இத்திருமணம் நடைபெறவில்லை;

வேறு ஒருவருக்கு வாழ்க்கைப்பட்ட கலியாணி சில நாட்களிலேயே கணவனை இழந்தார்; கலியாணியைப் பண்டிதமணிக்கு மணம் செய்து தராத காரணத்தினால்தான் இக்குறை நேர்ந்தது எனக் கருதினர் அவரது அத்தை குடும்பத்தினர். அதனால், அக்குறையைப் போக்க, கலியாணியின் தங்கையான மீனாட்சியைப் பண்டிதமணிக்கு மணமுடித்தனர். இறைவன் திருவருளால் அவர்தம் இல்லறம் நல்லறமாக மலர்ந்தது. 'காதல் ஒருவனைக் கைப்பிடித்து, அவன் காரியம் யாவினும் கைகொடுத்து, மாதர் அறங்கள் மாட்சி பெறச் செய்து வாழ்வமடி' என்று பாரதியார் பாடியது போல் திகழ்ந்தார் மீனாட்சி அம்மையார்.

> **"கண்ணகியைக் கண்ணெதிரே கண்டதில்லை**
> **கதிர்மணியார் வீட்டிற் கண்டோம்"**
>
> **(மணம்புணர் காதை, பா.12)**

என 'ஊன்றுகோல்' காப்பியத்தில் மீனாட்சி அம்மையாருக்குப் புகழாரம் சூட்டியுள்ளார் கவியரசு முடியரசன்.

'பானை பிடித்தவள் பாக்கியம்'

'மனைத்தக்க மாண்புடையவள்' ஆக விளங்கிய மீனாட்சி அம்மையாரின் பண்பு நலன்களைக் கண்ட பன்மொழிப் புலவர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், அவ்வம்மையாரைத் 'தமிழன்னை' எனப் போற்றிப் புகழ்ந்துள்ளார். "கலை வாழ்வின் விளக்கமாகக் கதிரேசனாரைக் கண்ட நான் கலைவாழ்வின் அமைதியை அம்மையாரிடம் காணும் பேறு பெற்றவன். 'தமிழன்னை' என்ற எண்ணம் அவர்களைக் காணும்போதெல்லாம் எழுவது உண்டு. புன்னகை பூண்ட முகம், களங்கமற்ற மனம், குழவி போலும் பேச்சு, செட்டி நாட்டின் உயர்வு தோன்றும் அமைதியான கோலம், கணவனுக்கும் குழவிகட்கும் எனவே வாழ்ந்த பெருமை, விருந்தினரை மறவாத பேரன்பு, உடல் மென்மையோடு போராடும் செருக்கு. இத்தனையும் என் கண்முன்னே தோன்றுகின்றன. கலையின் இருப்பிடம் பண்டிதமணியே-யாயினும், 'பானை பிடித்தவள் பாக்கியம்' என்பதில் ஓர் உண்மை உண்டு" (மேற்கோள் : சோமலெ, பண்டிதமணி, ப.49) என்னும் தெ.பொ.மீ.யின் புகழாரம் அம்மையாரின் பண்புநலன்களை அப்படியே எடுத்துக்காட்டுவதாய் அமைந்துள்ளது.

"மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு" (குறள் 60)

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு ஏற்ப, பண்டிதமணி மேற்கொண்ட இல்லறத்தின் பயனாக விளைந்த நல்முத்துக்கள் எழுவர் ஆவர். அவர்கள் சுப்பிரமணியன், கனகசபாபதி, மாணிக்கவாசகன், தியாகராசன் ஆகிய நான்கு ஆண் மக்களும், மங்கையர்க்கரசி, மீனாட்சி, சகுந்தலை ஆகிய மூன்று பெண்மக்களும் ஆவர்.

பிழைகளைச் சுட்டிக் காட்டித் திருத்துதல்

'சீரிய கவிதை நூல்களை இயற்றுதல் நம் தமிழ் மொழிக்குச் செய்யும் சிறந்த பணி ஆகும்' என்பது பண்டிதமணியின் கருத்து. ஆதலின், தாம் மிகுதியாக அப்பணியில் ஈடுபடாவிடினும், கவிதை இயற்றவல்ல தகுதி படைத்த புலவர்கள் அச்செயலில் ஈடுபட வேண்டும் என அவ்வப்போது அறிவுறுத்துவார். அதே நேரத்தில் பிழை மலிந்த கவிதைகளைக் கேட்க நேரும்போது, 'நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே' என்று வாதாடிய நக்கீரர் போல, யாருக்கும் அஞ்சாமல் பிழைகளைச் சுட்டிக்காட்டித் திருத்த முற்படுவது பண்டிதமணியின் வழக்கம்.

பீமகவி என்னும் புலவர் முறைப்படி தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கல்லாதவராய் இருந்தும், வாய்க்கு வந்தவாறு கவிகளைப் பாடிப் பொருளீட்டி வந்தார். 'யாம் கலைமகள் அருளை நிரம்பப் பெற்றுள்ளோம்; யாரையேனும் சினந்து ஒரு பாடல் பாடுவோமாயின், உடனே அவர் வாழ்விழந்து மாள்வது திண்ணம்! அங்ஙனமே, எமக்கு நிரம்பப் பொருள் தருவாரை வாழ்த்திப் பாடுவோமாயின், அவர் மேலும் மேலும் நிதிப் பெருக்கம் எய்தி நீண்ட வாழ்நாளும் எய்துவர்' என அச்சுறுத்தியும், அறிவுறுத்தியும் பொருள் ஈட்டி வந்தார். அவர், 'கீழைச்சிவல்பட்டித் தல புராணம்' என்றொரு நூலையும், 'நீதி வழி' என்றொரு நூலையும் இயற்றினார். தேவகோட்டையைச் சார்ந்த பெருஞ்செல்வர் அரு.சோமசுந்தரம் செட்டியார் தலைமையில், அந்நூலை அரங்கேற்றலானார். அரங்கேற்றத்திற்குப் பண்டிதமணியை அழைத்திருந்தார் சோமசுந்தரம் செட்டியார். அதனால் அவ்விழாவில் கலந்து கொண்ட பண்டிதமணி, நூல் அரங்கேற்றம் முடிந்தவுடன் பீமகவியைத் தனியே அழைத்து,

அந்நூலில் உள்ள பிழைகளைச் சுட்டிக் காட்டி, 'இங்ஙனம் கவி பாடுவது தமிழ்மொழிக்கு இழுக்குத் தரும் செயல். எனவே அதைக் கைவிட வேண்டும்' என்று வேண்டினார். ஆனால், அப்புலவரோ அதற்குச் செவி சாய்க்காமல், மேலும் மேலும் பிழையுள்ள செய்யுள்களை இயற்றி வெளியிட்டார். அச்செயலைப் பொறாத பண்டிதமணி, 'கீழைச்சீவல்பட்டித் தல புராணப் பிழைகள்' என்று ஒரு நெடிய அறிக்கையை எழுதி அச்சிட்டு, செட்டு நாடு முழுவதும் பரப்பினார். அதே சமயம், தமிழறிஞர் இராமசாமிப்பிள்ளை என்பவர் 'பீமகவியாரின் நீதிவழிப் பிழைகள்' என்றோர் அறிக்கையை வெளியிட்டார். இவற்றால் மக்களுக்கு பீமகவியிடத்துக் கொண்ட அச்சம் மறைந்தது. கவியும் பின்னர் ஒருவாறு அடங்கினார்.

நாவலர் சோமசுந்தர பாரதியாருடன் நட்புக் கொள்ளல்

பண்டிதமணி பீமகவியின் கவிதைகளில் காணப்பட்ட பிழைகளைத் தொகுத்து அறிக்கை வெளியிட்டதால், அக்கவிஞர் பண்டிதமணியின் மீது மான நட்ட வழக்குத் தொடுத்தார். இவ்வழக்கில் வாதாட, ஆங்கிலமும் தமிழும் அறிந்த ஒரு வழக்கறிஞரைப் பண்டிதமணி தேடினார். நாவலர் சோமசுந்தர பாரதியார் தமிழும், ஆங்கிலமும் வல்ல வழக்கறிஞர் என்பதை அறிந்து, அவரையே தம் கட்சியை எடுத்துரைக்க ஏற்பாடு செய்து கொண்டார் பண்டிதமணி. பண்டிதமணிக்கும் சோமசுந்தர பாரதியார்க்கும் அன்று தொடங்கிய நட்பு நாற்பது ஆண்டுக்காலம் - பண்டிதமணியின் இறுதிநாள் வரை - நீடித்தது.

ஒருமுறை நாவலர் சோமசுந்தர பாரதியார் தூத்துக்குடியில் ஒரு சொற்பொழிவு ஆற்றினார். அதனைப் பத்திரிகை மூலம் படித்து அறிந்த பண்டிதமணி, அவரைப் பாராட்டிக் கடிதம் எழுதினார். தம்மைப் பாராட்டிய முதற்புலவர் பண்டிதமணியே என்றும், அதன் பயனாகவே 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்' என்ற நூல் உருவாயிற்று என்றும் நாவலர் பாரதியார் அடிக்கடி கூறுவாராம்; 1941-ஆம் ஆண்டில் பண்டிதமணிக்கு நடைபெற்ற மணிவிழாவில், "என் நெடுவாழ்க்கையில் முதலில் ஆங்கிலமின்றித் தமிழில் பேசியறியாத என்னைத் தாய்மொழியில் தமிழர் கூட்டத்தில் பேசவைத்து, அத்துறையில் ஊக்கித் தமக்கு இனியர் குழுவில்

என்னையும் சேர்த்து அன்பு காட்டி, பண்டிதமணி அவர்கள் அறிஞருலகில் எனக்கு இடம் தந்தார்கள்" (சோமலெ, பண்டிதமணி, ப.38) என்று நெஞ்சாரப் பாராட்டினாராம்.

பண்டிதமணியின் சொற்பொழிவுப் பணி

பண்டிதமணி, சமய நூற்புலமையும், தமிழ் இலக்கண, இலக்கிய அறிவும் ஒருங்கே நிரம்பப் பெற்று அறிஞர்கள் எல்லோரும் போற்றும் பேரறிஞராக விளங்கினார். எனவே, அக்காலத்தில் நடைபெற்ற மாநாடுகளிலும், இலக்கிய விழாக்களிலும் அவர் தலைமை தாங்க அழைக்கப்பட்டார். இலக்கிய மாநாடுகளிலும், சைவ சித்தாந்த விழாக்களிலும் தலைமைப் பொறுப்பேற்று, சொற்பொழிவுகள் ஆற்றினார். இவ்வகையில் சென்னை சைவ சித்தாந்த மகாசமாசத்தின் வெள்ளி விழா, கரந்தைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழா, மதுரைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழா, தூத்துக்குடி சைவ சித்தாந்த சபைப் பொன்விழா, துறையூர் மாநாட்டுத் திறப்பு விழா, பூவாளூர் சைவ சித்தாந்த சபை விழா, சென்னைத் தமிழ்ப் புலவர் மாநாடு, குறுந்தொகை மாநாடு போன்ற பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளில் பண்டிதமணி தலைமையேற்றுச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்.

> **"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
> **வேட்ப மொழிவதாம் சொல்" (குறள் 643)**

என்னும் வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப, கேட்பவர்கள் வியந்து பாராட்டும் வகையில் அவரது சொற்பொழிவுகள் இருக்கும். "பண்டிதமணியவர்கள் யாதேனுமொரு கழகத்தே சொற்பொழிவாற்றுமிடத்து,அக்கழகத்தே இவர்க்கு முன்னும் பின்னும் சொற்பொழிவாற்றும் எத்தகைய அறிஞர் பேச்சினும், தம் பேச்சு மிக்குத் தலைமைத் தன்மையுடைத்தாதலை அவையினர் நன்கு அறிந்து கொள்ளுமாறு சொற்பொழிவாற்றுந் திறமை பெற்றிருந்தார்கள்.... பண்டிதமணியவர்களின் சொற்பொழிவை ஒருமுறை கேட்டோரும், தாம் அதுகாறும் நந்தாய்மொழி கல்லாது வறிதே போக்கிய நாட்கு இரங்கி, அன்று தொட்டுத் தமிழ் நூல்களைக் கற்க முற்படுவர்" (பண்டிதமணி, பக்.34-35) என்று பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார் குறிப்பிடுவது, பண்டிதமணியின் நாவன்மையை நன்கு எடுத்துக்காட்டுவதாய் அமைந்துள்ளது.

"மேடைகளுக்கு வரும்பொழுது அவர் (பண்டிதமணி) கையில் இரண்டு அல்லது மூன்று குறிப்புப் புத்தகங்கள் இருக்கும். அக்குறிப்புகளில் சிலப்பதிகாரம், திருக்குறள், கம்ப ராமாயணம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, காளிதாசர் நூல்கள் போன்ற இலக்கியங்களிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்கள் உண்டு. வேளை வாய்க்கும் போதெல்லாம் அவ்வேடுகளைப் புரட்டிப் புரட்டித் தமது கருத்துக்களை அவர் அழகுற எடுத்தியம்பியது உண்டு" ('பண்டிதமணி கதிரேசன் செட்டியார்', சபைக் கட்டுரைகள், ப.62). என்னும் பேராசிரியர் அ.சிதம்பரநாதனின் கூற்றும் பண்டிதமணியின் சொற்பொழிவுத் திறத்தினைப் புலப்படுத்துவதாகும்.

'பண்டிதமணி' என்னும் பட்டம் பெறல்

பண்டிதமணி கதிரேசனார் தாம் தோற்றுவித்த 'சன்மார்க்க சபை'யின் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றி-னார்; பண்டிதமணியால் சன்மார்க்க சபை வளர்ந்தது; சன்மார்க்க சபையால் பண்டிதமணியின் புகழும் பரவியது. "சாலவுணர் இவராலே சபையும், அந்தச் சபையாலே இவருமுடன் வளரக் கண்டோம்" (சபைகாண் காதை, ப.25) என 'ஊன்றுகோல்' காப்பியத்தில் இதனைப் பதிவுசெய்வார் கவியரசு முடியரசன். சன்மார்க்க சபையின் பதினாறாவது ஆண்டு விழா 19.8.1925-ஆம் நாள் நடைபெற்றது. அவ்விழாவில் கலந்து கொள்ளச் சென்னையில் இருந்து டாக்டர் உ.வே.சாமிநாதையர், மதுரையிலிருந்து மகாவித்துவான் ரா.இராகவையங்கார், தூத்துக்குடியிலிருந்து சிவகுருநாத பிள்ளை, தஞ்சையிலிருந்து தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை, ஔவை சு.துரைசாமிப்பிள்ளை முதலான தமிழறிஞர்கள் வந்திருந்தனர் அவர்கள் அனைவரும் ஒன்றுகூடி, கதிரேசனாரின் புலமையையும் பண்பையும் பாராட்டும் முறையில் அவரைச் சிறப்பிக்க வேண்டும் என்று கருதினர்; உ.வே.சாமிநாதையர் தம் தலைமையுரையில் பண்டிதமணியின் பெருமையை எல்லோரும் அறியும் வண்ணம் எடுத்து மொழிந்தார்; ரா.இராகவையங்கார் கதிரேசனாரின் புலமையையும் சொல்லாற்றலையும் மொழி பெயர்க்கும் திறனையும் பாராட்டிக் கூறினார்; அதன் பின்னர் 'பண்டிதமணி' என்னும் பட்டம் அவருக்கு வழங்கப் பெற்றது. "பண்டிதர்கள் உலகிற் பற்பலர் இருப்பினும் அவருள் நம் கதிரேசனார் மணி போலத் திகழ்கின்றார். ஆதலின், உங்கள்

முன்னிலையிலே இக்கதிரேசனார்க்கு யாம் 'பண்டிதமணி' என்னும் சிறப்புப் பெயரைச் சூட்டுகின்றோம்" (மேற்கோள் : பொ.வே.சோமசுந்தரனார், பண்டிதமணி, பக்.27-28)என மொழிந்தார் உ.வே.சாமிநாதையர். அன்று முதல் கதிரேசனார்க்குப் 'பண்டிதமணி' என்னும் சிறப்புப் பெயர் இயற்பெயர் போல வழங்குவதாயிற்று.

பண்டிதமணியின் பெருமையைப் பாரறியச் செய்த பெருமக்கள்

விளக்கு ஒளிர வேண்டுமாயின், அதற்குத் தூண்டுகோல் தேவை. அதுபோல், பண்டிதமணி என்னும் விளக்கின் ஒளி எட்டுத் திக்கும் பரவுவதற்குக் காரணமாக அமைந்தவர்கள் இருவர்; ஒருவர், மேலைச்சிவபுரியில் 'சன்மார்க்க சபை'யை நிறுவிய வ.பழ.சா.பழநியப்பச் செட்டியார்; மற்றொருவர், செட்டி நாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார்.

மகிபாலன்பட்டியில் ஒரு மூலையில் தென்மொழிக் கடலிலும், வடமொழிக் கடலிலும் ஆழ்ந்தாழ்ந்து பெறலரிய முத்துக்களைக் கண்டெடுத்துத் தாமே மகிழ்ந்து கொண்டிருந்த பண்டிதமணியவர்களை உலகம் அறியும் வண்ணம் செய்தவர் வ.பழ.சா.பழநியப்பச் செட்டியார் ஆவார்; பேரறிஞர்களாக விளங்கிய பெருமக்களின் தொடர்பு பண்டிதமணிக்கு ஏற்படக் காரணமாக அமைந்தது. பழநியப்பச் செட்டியார் தொடங்கிய 'சன்மார்க்க சபை'யே ஆகும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பணியினை ஏற்றல்

1929-ஆம் ஆண்டு, அண்ணாமலை அரசர், கும்பகோணத்தில் இருந்த டாக்டர் உ.வே.சாமிநாதையரைச் சந்தித்துத் தமது பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக வரும்படி வேண்டினர்; அப்பொழுது சாமிநாதையர், "தங்கள் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இருக்கும் தகுதியுடையவர்கள் இருவர். ஒருவர், பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார். மற்றொருவர், ரா. ராகவையங்கார். அவர்கள் இருவரும் இருமொழிப் புலமை படைத்து விளங்கும் தமிழ்ப் பேராசிரியர்கள்" என்று அண்ணாமலை அரசரிடம் கூறினார். இங்ஙனம் உ.வே.சா. கூறக் கேட்ட அண்ணாமலை அரசர், பண்டிதமணியைத் தமிழாசிரியராகப் பணியில் அமர்த்த

எண்ணம் கொண்டார். இந்நிலையில் பண்டிதமணிக்கு மிகவும் வேண்டியவரான கானாடுகாத்தான் சித.வீரப்பச் செட்டியாருடன், பண்டிதமணியின் இல்லத்திற்குச் சென்று தம் கருத்தைத் தெரிவித்தார் அண்ணாமலை அரசர். அப்பொழுது பண்டிதமணி, "நான் தங்கள் பல்கலைக்கழகத்தில் ஆசிரியனாக இருக்கும் தகுதியுடையவனல்லன்" என்று மறுத்துவிட்டார். பண்டிதமணி அரசரிடம் நடந்து கொண்ட முறையும் பேசிய திறமும் அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அரசரின் உள்ளத்தில் பண்டிதமணியை எப்படியும் தமது பல்கலைக்கழக ஆசிரியராக்கிவிட வேண்டும் என்னும் எண்ணம் ஆழமாக வேரூன்றியது. பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்கு அறிவுரை கூறும் குழுவில் பண்டிதமணியை இடம்பெறச் செய்தார். பின்னர் 1934-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பண்டிதமணி அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியராகப் பதவி ஏற்றார். அப்பொழுது அவருக்கு வயது 53. 1946-ஆம் ஆண்டு வரை 12 ஆண்டுகள் அப்பல்கலைக்கழகத்தில் திறம்படப் பணியாற்றினார் பண்டிதமணி.

பண்டிதமணியின் ஆசிரியப் பணி

செய்வன திருந்தச் செய்யும் பண்டிதமணியிடம் கற்றுக் கொடுக்கும் திறனும் மிகுந்திருந்தது. வகுப்பில் ஒரு பாடலை விளக்குவதற்கு முன்னர், அந்தப் பாடலில் அமைந்த நுண்ணிய பொருள்களை, சொற்சாதுரியத்துடனும் நகைச்சுவையுடனும் முதலில் தெரிவித்து விடுவார். நயமான பகுதிகளை விட்டு விட்டு, ஏனைய பகுதிகளைத் தான் முதலில் சொல்லுவார்; கடைசியாகத் தான் பாட்டைப் படிப்பார். பாடல்களைப் படித்துப் பொருள் கூறுமுன்னர், இசையோடு பாடக்கூடிய மாணவர்களை அந்தப் பாடலை வகுப்பில் படிக்கச் சொல்வதனால், அவர் நடத்தும் பாடம் மாணவர் மனத்தில் பசுமரத்தாணி போல் பதியும்.

பண்டிதமணியின் தலைமாணாக்கர்களுள் ஒருவரான அ.சிதம்பரநாதச் செட்டியார், பண்டிதமணியின் கற்பிக்கும் திறன் பற்றிக் கூறுவது வருமாறு :

"தமிழ்ச் சிறப்பு வகுப்பு மாணவர்களாகிய நாங்கள்.. அவர்களிடத்து (பண்டிதமணியிடத்து) மிக்க பெருமதிப்பு

வைத்திருந்தோம். அதற்குச் சிறந்த காரணம், ஆற்றின் ஊற்றிலிருந்து நீர் சுரப்பது போல அவருடைய உள்ளத்திலிருந்து ஊறி ஊறி வந்த இன்னுரைகள் தாம்... பண்டிதமணி கதிரேசன் செட்டியார் மாணவர்களோடு ஆசிரியர் என்ற முறையில் மட்டும் பழகாமல், மாணவர்களுள் ஒருவரைப் போலத் தம்மைச் சில வேளைகளில் அமைத்துக் கொண்டு அளவளாவுவது உண்டு... அவரிடம் பன்னிரண்டு மாதங்கள் நான் படிக்கக் கூடிய வாய்ப்புப் பெற்றிருந்தேனாயினும் என்னுடைய வாழ்நாள் முழுதும் அவரை என் உள்ளம் கவர்ந்த ஆசிரியராக மதிப்பேன் என்பது உறுதி" ('பண்டிதமணி கதிரேசன் செட்டியார்', சபைக் கட்டுரைகள், பக்.69-70).

இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த பண்டிதமணியை ஆசிரியராகப் பெற்ற அண்ணாமலை அரசர், அவர் மீது பெருமதிப்பும் பேரன்பும் கொண்டிருந்தார்; அவர்தம் ஆற்றலையும் புலமையையும் நன்கு உணர்ந்திருந்தார். பண்டிதமணி பற்றிய அரசரின் பாராட்டு மொழிகள் இதனைப் பறைசாற்றுகின்றன. 1941-ஆம் ஆண்டு பண்டிதமணியின் மணிவிழா நடந்தது. அவ்விழாவிற்குத் தலைமையேற்றுச் சிறப்பித்த அண்ணாமலை அரசர் பண்டிதமணி குறித்துக் கூறியதாவது :

"தமது கல்வியின் மேம்பாட்டினால், தமிழ்நாடு முழுதும் புகழ் பெற்று விளங்கும் பண்டிதமணியவர்களைப் பாராட்டுவது நமக்கே பெரிய சிறப்பாகும். இப்பெருங் கல்வியாளர் தமது இலக்கிய இலக்கண அறிவு, சொல் வன்மை, ஆராய்ச்சித் திறன், மொழிபெயர்க்கும் ஆற்றல், போதனா சக்தி முதலிய சிறந்த குணங்களால் பெருமை பெற்று விளங்குகிறார்கள். இவர்கள் வடமொழியிலும், தென்மொழியிலும் நல்ல அறிவு வாய்ந்திருப்பதால் இவர்களுடைய மொழித் தொண்டு மேன்மையுறுகின்றது... பண்டிதமணியவர்களுடைய நூல் இயற்றும் ஆற்றல் ஒருபுறமிருக்க, அவர்களுடைய சொல் வன்மை அதனினும் சிறந்து விளங்குகின்றது. நயம் மிகுந்து விளங்கும் அவர்களுடைய சொற்பொழிவுகள் அறிவைப் பெருக்கும் தன்மையனவாகவும் இருக்கின்றன... மாணவர்களுக்குப் போதிப்பதன் மூலமாகவும், கற்றோர் சபையில் சொற்பொழிவுகள் இயற்றுவதன் மூலமாகவும் இவர்கள் தமிழ்நாட்டில் கல்வி பரவப் பெரிதும் உதவி வருகிறார்கள்"

(மேற்கோள் : பொ.வே.சோமசுந்தரனார், பண்டிதமணி, பக்.41-42). அண்ணாமலை அரசரின் இப்பாராட்டுரை, பண்டிதமணியின் வடமொழி - தென்மொழிப் புலமை, நூல் இயற்றும் திறன், மாணவர்களுக்குக் கற்றுத் தரும் ஆற்றல், நா வன்மை முதலான பண்டிதமணியின் அனைத்து நற்பண்புகளையும் பறைசாற்றுவதாய் அமைந்துள்ளது.

அண்ணாமலை அரசர் தம் மீது கொண்டிருந்த பேரன்பினையும் பெருமதிப்பினையும் உணர்ந்த பண்டிதமணியும், அரசரின் பெருமையை நெஞ்சாரப் பாராட்டிக் கூறினார். "இரண்டு வாரங்கள் முன்னர் நிகழ்ந்த கனம் ராஜா அவர்களின் மணிவிழாவில் அவர்கள் அழகிய மாளிகையில் உலகத்துப் பெருமக்களெல்லோரும் அடங்கியிருந்தனர். அவ்வெல்லோரையும் தம் பெருமையுள் அடக்கித் திகழும் அரசர் பெருந்தகையார் இன்று எனது இச்சிறுகுடிலில் அடங்குவார்களாயின், இதன் பெருமையைப் பற்றிச் சொல்ல வேண்டுமோ? என்பாலுள்ள பேரன்பால், இத்துணை நேரம் பன்மீன் நடுவண் பான்மதி போல் இங்கே வீற்றிருந்து என்னைப் பாராட்டி மகிழ்வித்த ராஜா அவர்களுக்கு யான் என்றும் கடமைப்பட்டவன்" (மேற்கோள் :சோமலெ, பண்டிதமணி, ப.116) என்று கூறித் தம் நன்றியுணர்வைப் புலப்படுத்தினார் பண்டிதமணி.

பண்டிதமணி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும், ஆராய்ச்சித் துறைத் தலைவராகவும் பன்னிரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். பண்டிதமணி அண்ணாமலை நகரில் பெருமதிப்புடன் பணியாற்றிய காட்சியைக் கண்ட 'குமரன்' பத்திரிகை ஆசிரியர் காரைக்குடி சொ.முருகப்பா பின்வருமாறு எழுதியுள்ளார் :

"பண்டிதமணியவர்கள் அண்ணாமலை சர்வகலாசாலையில் அரியணையில் வீற்றிருக்கும் அரசர் போன்றிருக்கிறார்கள். எத்தனையோ வித்வான்கள், எத்தனையோ மாணவர்கள், மாணவிகள், நேசர்கள், இத்தனை பேரும் பண்டிதமணியின் வாயை எதிர்பார்த்து, அச்சமும் அன்புங் கொண்டு பணி செய்யக்கூட மனங்கனிந்திருக்கிறார்களென்று கூறலாம்" (மேற்கோள் :சோமலெ, பண்டிதமணி, ப.130).

இங்ஙனம் அண்ணாமலை அரசருடனான தொடர்பு, பண்டிதமணியின் பன்முக ஆற்றலை உலகத்தவர்க்கு

உணர்த்துவதற்குப் பெரும் தூண்டுகோல் ஆயிற்று. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பண்டிதமணி ஆற்றிய பன்னிரண்டு ஆண்டுக் காலத் தமிழ்ப்பணி அவரது புகழினைக் குன்றின் மேல் இட்ட விளக்குப் போன்று உச்சி மீது ஏற்றியது.

பண்டிதமணி பேராசிரியராகப் பதவி ஏற்பதற்கு முன்னர், முதுகலை ஆங்கிலம் படித்தவர்களே அப்பதவிக்கு நியமிக்கப்பட்டு வந்தனர். ஆங்கிலம் கல்லாதவரும் பல்கலைக்கழகப் பேராசிரியப் பதவியை ஏற்று நடத்த முடியும் என்பதைச் செய்து காட்டியவர் பண்டிதமணியே ஆவார்.

செய்வன திருந்தச் செய்யும் திறன்

பெருமை மிக்க பதவிகளை ஏற்று அவற்றில் ஒரு சிறு தவறும் நிகழா வண்ணம் விழிப்புடன் செயலாற்றும் திறன் படைத்தவராக விளங்கினார் பண்டிதமணி. எந்தச் செயலைச் செய்தாலும், அதைத் தொடங்கு முன்னர், அதற்குத் தேவையான பொருள், கருவி, காலம், வினை, இடம் ஆகியவற்றை எல்லாம் நன்கு தெரிந்து கொண்டு, பின்னரே அச்செயலைத் தொடங்குவார் அவர்.

பாடத் திட்டக் குழுவுக்குச் செல்வதாக இருப்பின், அதற்கு உரிய கருத்துக்களைத் தாளில் குறிப்பெடுத்துக் கொள்வதும், அவற்றை முறைப்பட நிரல்படுத்தி வைத்துக் கொள்வதும் பண்டிதமணியின் வழக்கம். தமக்கு ஏதேனும் ஐயம் இருப்பின் அவர் தம் நண்பர்களிடத்து அதைப் பற்றி வினவி ஐயம் தீர்த்துக் கொள்வார். ஏதேனும் ஓர் ஆங்கிலச் செய்தி இன்றியமையாதது எனக் கருதினால் தம் நண்பர்களைக் கொண்டு அதைத் தமிழில் மொழிபெயர்த்து வைத்துக் கொள்வார். மொழி பெயர்ப்பாளர் ஏதேனும் சிறு தவறு செய்தாலும் அதனை உடனே கண்டு, 'அதை ஏன் விட்டு விட்டீர்கள்?' என்று கேட்டு அதைத் திருத்துவார். தம் அனுபவ அறிவால் தாமும் ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்களை மொழி பெயர்ப்பாளருக்குச் சொல்வதும் உண்டு. ஆங்கிலப் புலமை பெற்றவரும் பண்டிதமணியின் திறன் கண்டு வியந்து நிற்பர்.

மறதி என்பது பண்டிதமணியிடம் மருந்துக்குக்கூட இல்லாத ஒன்று ஆகும். அங்ஙனமே சோம்பலும் அவர்பால் நெருங்குவதில்லை. தம் உடையாக இருப்பினும், வீடாக

இருப்பினும் எல்லாவற்றையும், எப்பொழுதும் அழகாகவும், தூய்மையாகவும் வைத்துக் கொள்வது பண்டிதமணியின் வழக்கம். எழுதுகோல் முதலிய சிறு கருவிகளையும் அவர் அவ்வவற்றிற்குரிய இடத்திலேயே வைப்பார். இங்ஙனம் எச்செயலைச் செய்தாலும் செய்வன திருந்தச் செய்யும் இயல்பு பண்டிதமணியிடம் சிறப்பாகக் குடிகொண்டிருந்தது.

பண்டிதமணியின் படத் திறப்பு விழா

1909-ஆம் ஆண்டு மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபை தொடங்கப்பட்டது முதல் 1934-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பணியை மேற்கொள்ளும் வரை 25 ஆண்டுகள் சபையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார் பண்டிதமணி. அவரது தொண்டுக்கு நன்றி பாராட்டும் வகையில் பண்டிதமணியின் உருவப்படம் 7.7.1940 - அன்று அண்ணாமலை அரசரால் திறந்து வைக்கப் பெற்றது. அப்போது பண்டிதமணி நன்றி கூறும் வகையில் குறிப்பிட்டதாவது :

"என் சிறு தொண்டுக்கு உருவப்படம் அமைப்பது, சபைக்கு என் மீதுள்ள அன்பைக் காட்டுகின்றது. எனக்கு இவ்வளவு சிறப்புச் செய்த அளவு யான் சங்கத்துக்குத் தொண்டு செய்ததாக என் நினைவுக்கு வரவில்லை. யான் படித்தது எங்கே எங்கேயென்று பல அன்பர்கள் கேட்டார்கள். இங்கேதான். யான் தான் இச்சங்கத்தின் முதல் மாணாக்கன். சன்மார்க்க சபையினால்தான் எனக்கு மேன்மையேற்பட்டது. பொருட்பயனை எதிர்பார்த்து யான் கற்கவில்லை. சொற்பொருட் சுவைகளை விரும்பிக் கற்றேன். இப்பொழுது பல்லாற்றானும் பெரிதும் பயன்படுகிறது. என் சிறுமையை யான் அறிவேன். ஆனால் யான் உயர்ந்தவனென்று பிறர் உணரும்படி செய்த பெருமை கனம் ராஜா அவர்களைச் சார்ந்தது. நிகரற்ற செல்வமும், அறிவும், ஆட்சித்திறனும் அமைந்த பெருங்கொடை வள்ளலாகிய கனம் செட்டிநாடு ராஜா அவர்கள் தம் உள்ளத்தில் எனக்கும் ஓர் இடமளித்துச் சிறப்பித்து வரும் பெருமையே, யான் அடைந்து வரும் சிறப்புக்கள் எல்லாவற்றிலும் தலைசிறந்ததாகும்." (மேற்கோள் : சோமலெ, பண்டிதமணி, பக்.69-70).

திருவாசகம் பற்றிப் பல்கலைக்கழகத்தில் சொற்பொழிவாற்றல்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பெருமைகளைக் கேள்வியுற்ற பண்டிதமணி, அவரிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தார். இதே போல் கவிமணிக்கும் பல ஆண்டுகளாகப் பண்டிதமணி மீது மட்டற்ற மதிப்பு இருந்து வந்தது. ஆயினும் இவர்கள் இருவரும் 1938-ஆம் ஆண்டில்தான் முதன்முதலாக நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றனர். திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தின் பாடத் திட்டக் குழுவின் கூட்டம் நடந்தபோதுதான் இச்சந்திப்பு ஏற்பட்டது. அப்போது பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு.பரமேசுவர பணிக்கர், திரு. பன்னிருகைப் பெருமாள் முதலியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஆகியோரது வேண்டுகோளுக்கு இணங்கி, பண்டிதமணி திருவாசகத்தைப் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அதைக் கேட்டு அனைவரும் மனம் உருகினர்; அன்று தாம் கண்ட காட்சியை ஓர் அழகிய பாடலாக வடித்துள்ளார் கவிமணி. அப்பாடல் வருமாறு :

“சிந்தைக் கினிய செவிக்கினிய
திருவா சகத்தின் உட்பொருளை
முந்தும் அறிவால் ஆராய்ந்து
முத்தே வர்க்கும் முதற்றேவன்
எந்தை சிவனே யாமென்ன
எவர்க்கும் நன்றாய் எடுத்தோத
வந்த பெரும்பே ராசிரியன்
வாழ்க வாழ்க வாழ்கவே!”

(மலரும் மாலையும், ப.214)

‘மணிவாசகச் சங்கம்’ உருவாக்கல்

சன்மார்க்க சபையேயன்றி, பலவான்குடியில் ‘மணிவாசகச் சங்கம்’ என்னும் சபையையும் தோற்றுவித்தார் பண்டிதமணி. திருவாசகத்தில் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாடும், மணிவாசகப் பெருமான்மீது அவருக்கு இருந்த பக்தி உணர்வுமே இச்சங்கம் தோன்றுவதற்குக் காரணமாயின. இச்சங்கக் கூட்டங்களில் பண்டிதமணி சமயச் சொற்பொழிவு-கள் பல நிகழ்த்தினார். சைவ சமயத்தை வளர்த்துச் சிவநேய உணர்வினைப் பெருக்குவதே அவரது நோக்கமாக

அமைந்திருந்தது. எனினும் பிற சமயங்களின் மீது காழ்ப்போ, கசப்போ கொள்ளவில்லை பண்டிதமணி; அவற்றை மதித்துப் போற்றியுள்ளார். 'மணிமேகலை' பற்றிய பண்டிதமணியின் கட்டுரையே இதற்குச் சான்று பகரும்.

'தில்லைத் தமிழ்க் கழகம்' தோற்றுவித்தல்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியபோது பண்டிதமணி சிதம்பரத்தில், 'தில்லைத் தமிழ்க் கழகம்' என்ற பெயரில் ஒரு செந்தமிழ்க் கழகத்தை ஏற்படுத்தினார். பண்டிதமணி தலைவராக இருக்க, தமிழறிஞர் பலரும் அதில் உறுப்பினராகச் சேர்ந்தனர். அத்தமிழ்க் கழகத்தில்,பண்டிதமணி சிலப்பதிகாரத்தை முறையாகக் கற்றுக்கொடுத்துத் தொண்டு புரிந்தார்.

இத்தகைய சங்கங்கள், கழகங்கள் முதலானவற்றைத் தோற்றுவித்தமை, பண்டிதமணியின் தமிழ் மொழிப் பற்றினையும், தமிழ்ப் பணியையும் எடுத்துக்காட்டுவதாய் அமைந்துள்ளது.

'மகாமகோபாத்தியாய' பட்டம்

'மகாமகோபாத்தியாய' என்பது சிறந்த முறையில் மொழிப் பணி ஆற்றுபவர்க்கு அரசியலார் வழங்கும் உயரிய பட்டம் ஆகும். இருமொழிப் புலமை படைத்தவராக இருந்தும், எல்லாத் தகுதிகளும் பெற்றவராக இருந்தும் இப்பட்டம் பண்டிதமணிக்குக் கிடைக்கவில்லை. தமிழன்பர்களின் உள்ளங்களில் குடிகொண்டிருந்த இந்த எண்ணத்தை அறிந்த அண்ணாமலை அரசர், உரிய முயற்சியை மேற்கொண்டார்; ஆளுநரின் கவனத்திற்கு இதனைக் கொண்டு சென்றார். அண்ணாமலை அரசரின் முயற்சிக்குத் தகுந்த பலன் கிட்டியது. 11.6.1942-இல் பண்டிதமணிக்கு அரசினரால் 'மகாமகோ-பாத்தியாய' பட்டம் வழங்கப் பெற்றது. அப்பட்டத்திற்கு உரிய விருதினைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவன்று ஆளுநர் பண்டிதமணிக்கு வழங்கிச் சிறப்பித்தார். பண்டிதமணிக்கு வழங்கப்பட்ட இப்பட்டம் தமிழறிஞர்கள் அனைவருக்கும் அளவற்ற மகிழ்ச்சியை அளித்தது. தமிழறிஞர்கள் பலரும் பண்டிதமணிக்குப் பாராட்டு மடல்கள் வரைந்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

"தங்கட்கு நம் தமிழ்நாடு 'பண்டிதமணி' என்று பட்டமளித்துப் பாராட்டிய செய்தி மிக்சு பழைமைச் செய்தியாய் விடினும், இன்றும் என்றும் எங்கட்கு அது பெருமதிப்பும் பெருமிதமும் பயந்து, 'எங்கள் பண்டிதமணி' எனப் பாராட்டிப் பரவும் பெருமையை எங்கட்குத் தந்து நிலவுகின்றது.

இப்போது, அரசியலார் தங்களுடைய அரிய புலமையும், இனிய சொல்வன்மையும், ஆசிரியர்கட்காசிரியராம் உரிமையும் நன்கறிந்து, 'மகாமகோபாத்தியாயர்' என்று பட்டமளித்துச் சிறப்பித்ததற்கு ஒருவாறு மகிழ்ச்சி கொள்கின்றோம்; 'ஒருவாறு' என்றது, இதனைப் பல யாண்டுகட்கு முன்னமே அவர்கள் செய்தல் வேண்டும்; அதனாற்றான் 'ஒருவாறு மகிழ்கின்றேம்' என்பேமாயினோம்..." (மேற்கோள் : சோமலெ, பண்டிதமணி, பக்.143-144) என நெஞ்சார வாழ்த்தினார் 'உரைவேந்தர்' ஔவை சு. துரைசாமி.

"தமிழர் மனம் இன்றுதான் குளிர்ந்தது. 'மகாமகோபாத்தியாயர்' பட்டமே இன்று பெருமை பெற்றது. தகாதவரையே நாடிச் செல்வதைக் கண்டு பட்டங்களை வெறுத்து நின்ற என் போல்வார் இன்று ஒரு பட்டமேனும் தக்கவரை நாடித் தமிழரிடம் புகுந்தது கண்டு வியந்தும் மனகிழ்ந்தும் நிற்பர்.... தமிழ் மகாமகோபாத்தியாயர் நீடுழி வாழ்க" (சோமலெ, பண்டிதமணி, ப.144) எனப் புகழாரம் சூட்டினார் பன்மொழிப் புலவர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்.

செட்டிநாட்டு இளவரசர் தலைமையில் நிகழ்ந்த ஒரு புலவர் குழுவில் பண்டிதமணிக்கு 'முதுபெரும் புலவர்' என்ற பட்டமும் வழங்கப் பெற்றது. 'தமிழால் பாரதி தகுதி பெற்றதும், பாரதியால் தமிழ் தகுதி பெற்றதும்' எனப் பாவேந்தர் பாரதிதாசன் பாடியது போலப் 'பட்டங்களால் பண்டிதமணி பெருமை பெற்றாரா? பண்டிதமணியால் பட்டங்கள் பெருமை பெற்றனவா?' என்று கேட்கவே தோன்றும்.

பண்டிதமணி பொறுப்பேற்றுச் சிறப்பித்த பதவிகள்

மக்கள் பட்டங்களையும் பதவிகளையும் தேடி நாடி ஓடும் இக்கால கட்டத்தில் பண்டிதமணியைத் தேடிப் பட்டங்கள், பதவிகள் யாவும் தேடி நாடி ஓடி வந்தன. தம் இளமைப் பருவம் தொடங்கி இறுதிக்காலம் வரை, பண்டிதமணி பொறுப் பேற்றுச் சிறப்பித்த பதவிகள் பலப்பல ஆகும்.

பண்டிதமணி, தம் இளம்பருவத்திலேயே மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராய் - சங்கப் புலவராய் - விளங்கினார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தேர்வாளராகவும் திகழ்ந்தார் அவர். இச்சங்கத்தின் மந்திரக் குழுவிலும், நிறைவேற்றுக் குழுவிலும் நீண்டகாலம் அவர் உறுப்பினராக விளங்கினார். தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலும் பண்டிதமணி வாழ்நாள் உறுப்பினராக விளங்கினார். பண்டிதமணியின் வடமொழிப் புலமை, அவரை இராமேச்சுவர வடமொழிக் கல்லூரியின் மந்திரக்குழு உறுப்பினராக ஆக்கியது.

திருவாசகத்திற்கு உரை எழுதுதல்

சைவமும் தமிழும் தம் இரண்டு கண்கள் எனப்படும் வகையில், ஆன்மிகப் பணியும் தமிழ்ப் பணியுமே தம் வாழ்நாள் பணிகளாகக் கொண்டு வாழ்ந்தவர் பண்டிதமணி. அண்ணாமலை நகரில் வாழ்ந்து வரும் போதே அவர் ‘கதிர்மணி விளக்கம்’ என்னும் திருவாசக உரைப் பணியைத் தொடங்கிவிட்டார். இக்கால கட்டத்தில் பண்டிதமணியின் வாழ்க்கைத் துணைவியாரான மீனாட்சி அம்மையார் உடல்நலம் குன்றி மண்ணுலக வாழ்வினை நீத்தார். அதன்பின்னர் பண்டிதமணி, தாம் மேற்கொண்டுள்ள திருவாசக உரைப்பணி ஒன்றையே கருதியவராய்ப் பல்கலைக்கழகப் பதவியினின்றும் விலகி,சிதம்பரத்தை விட்டு மகிபாலன்பட்டிக்கு வந்து சேர்ந்தார். திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை ஆகிய பகுதிகளுக்குக் ‘கதிர்மணி விளக்கம்’ வரைந்து முடித்தார். இந்நிலையில் அவரது உடல் நோய்க்கு இலக்காகியது. இரத்தக் கொதிப்பு நோய் அவரைப் பெரிதும் வாட்டியது. கைகால் பிடிப்புத் தோன்றிக் கைவண்டியில் மட்டுமே செல்லத் தக்கவாறு வாத நோயாக மாறியது.

பண்டிதமணியின் மறைவு

விசய ஆண்டு, ஐப்பசித் திங்கள் எட்டாம் நாளன்று (24.10.1953) பண்டிதமணி வழக்கம் போல் தம் அலுவல்களைக் கவனித்து வந்தார். அன்று தமக்கு வந்த கடிதங்களைப் படித்து மறுமொழி எழுதினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கல்விப் புல உறுப்பினர் என்ற முறையில் தமக்கு வந்த வாக்குச் சீட்டில் பேராசிரியர் லெ.ப.கரு.இராமநாதன் செட்டியாருக்கு ‘முதன்மையர்’ (Dean) பதவிக்கு வாக்குப் பதிந்து அனுப்பினார்.

மாலை மூன்று மணி அளவில் பண்டிதமணிக்கு மூச்சு திணறத் தொடங்கியது. நாற்காலியினின்றும் இறங்கி ஒரு பாயில் படுத்துக் கொண்டார். மலப்போக்கில் தடை ஏற்பட்டதால் எனிமா மூலம் குடல் தூய்மை செய்யப்பட்டது. எனினும் அக்குறை நீங்கவில்லை. அவரது மூச்சுத் திணறியது; மூச்சின் இடையிடையே 'சிவாயநம' எனும் திருவைந்தெழுத்தை அவரது வாய் முணுமுணுத்தது; ஐந்து மணித்துளிகளே திருவைந்தெழுத்தை ஓத முடிந்தது; பின்னர், அச்செயல் நின்றது. பத்து மணித்துளிகளில் அவரது மூச்சும் நின்றது. 73 வயது நிறைவு பெற்ற நிலையில் பண்டிதமணி மண்ணுலக வாழ்வை நீத்தார்.

"வாழ்நாள் வரை
தமிழுக்காக வாழ்ந்தவர் – இன்று
தமிழாக வாழ்கிறார்; வைகலும்
தமிழ்க் காற்றாகத் –
தமிழரைச் சூழ்கிறார்!"

(இவர்கள் இன்னமும் இருக்கின்றார்கள், ப.87)

என்னும் கவிஞர் வாலியின் புகழாரம் முக்காலும் உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை.

2

சீரிய செந்தமிழ் நடை ஆசிரியர்

"வேங்கடசாமி நாட்டாரையும், கதிரேசன் செட்டி-யாரையும் சிறந்த செந்தமிழ் நடை ஆசிரியர்கள் எனலாம்... பிறர் காண்டற்கரிய இலக்கிய நயங்களையும், சைவ சமய உண்மைகளையும் கண்டு அவற்றைக் கல்வியறிவுடையோர் விரும்பத்தக்க சீரிய செந்தமிழ் நடையில் எழுதி உதவியதே அவர் (பண்டிதமணி) தமிழ் மொழிக்குச் செய்த பெருந்தொண்டாகும்."

- வி. செல்வநாயகம்*

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க ஓர் இடத்தைப் பெற்றவர் பண்டிதமணி ஆவார். பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியாரையும் ந.மு.வேங்கடசாமி நாட்டாரையும் 'சிறந்த செந்தமிழ் நடை ஆசிரியர்கள்' என்னும் பாகுபாட்டில் அடக்குவர் அறிஞர். பேராசிரியர் கா.சுப்பிரமணிய பிள்ளை பண்டிதமணியின் 'உரைநடைக் கோவை : முதற்பகுதி' (சமயக் கட்டுரைகள்) என்னும் நூலுக்குச் 'சிறப்புப் பாயிரம்' என்னும் தலைப்பில் ஓர் அரிய முகவுரை வழங்கியுள்ளார். அதில் அவர் பண்டிதமணியின் நடை பற்றிக் குறிப்பிட்டிருப்பது வருமாறு :

"அவை (கட்டுரைகள்) சிறந்த செந்தமிழ் நடையில் அமைந்து தற்கால உரைநடைக்குத் தக்க எடுத்துக்காட்டாக மிளிர்வன. அவைகளில் ஆசிரியருடைய இணையற்ற நுண்மாண் நுழைபுலத்தின் பயனாகப் பிறர் காண்டற்கரிய நுண்ணிய நூல்நயங்களும் விழுமிய சிவநெறியுண்மைகளும் உருப்பெற்றுத் திகழ்கின்றன. அவைகள் தமிழ் கற்கும் மாணவர்களுக்கு உயர்தர அறிவு விருந்தாகப் போற்றற்பாலன" (உரைநடைக் கோவை : முதற்பகுதி, சிறப்புப் பாயிரம், ப7).

---

* *தமிழ் உரைநடை வரலாறு, ப.132.*

சீரிய செந்தமிழ் நடை

பண்டிதமணி சிறந்த நடையில் எழுத வேண்டும் என்பதில் மிகுந்த விருப்பம் கொண்டவர். அவர் மிக எளிய நடையில் எழுதுவதை விரும்பியதில்லை. எளிமை கயமை ஆகிவிடக்கூடாது என்பது அவரது கருத்து. ஒருவர், பண்டிதமணி எழுதிய ஒரு பகுதியைப் படித்துவிட்டு, அவரிடம் சென்று, சில இடங்கள் விளங்குவதாகவும், வேறு சில இடங்கள் எளிமையாக எழுதப்படாததால் விளங்கவில்லை என்றும் சொன்னாராம். உடனே, பண்டிதமணி, "அப்படியா! விளங்கிய பகுதி எது என்று சொல்லுக; அதையும் மாற்றிவிடுகிறேன்" என்று நகைச்சுவை ததும்ப விடை கூறினாராம் (சோமலெ, வளரும் தமிழ், ப.60). இந்நிகழ்ச்சியின் மூலம் சீரிய செந்தமிழ் நடையில் எழுதுவதையே பண்டிதமணி விரும்பினார் என்பதையும், யாருக்காகவும் அவர் தம் இயற்கைப் பண்பை மாற்றிக் கொள்ள விரும்பவில்லை என்பதையும் உய்த்துணரலாம். 'பண்டிதர் நடை கடினமாதலின் பயனுடையதன்று' என்பது போன்ற கருத்துரைகளையும் அவர் பொருட்படுத்துவதில்லை. எளிய நடை என்பதற்குப் பண்டிதமணி தரும் விளக்கம் வருமாறு :

"சிறந்த நடையில் எழுதுவார் மிகச் சிலரே. அவர்களும் இவர் ஆரவாரத்தில் ஈடுபட்டுத் தம் இயற்கையைக் கைவிடுவாராயின், அந்நடை வனப்பை யாண்டுக் காண்பேம்? இவ்வுபதேசகர் கருத்துப்படி எது நல்ல நடையென்று தெளியப்புகின், அது நகை விளைக்கும். பிறமொழிகளிலுள்ள சொற்களை மிகுதியாகக் கலந்து இலக்கண வரம்பின்றி எழுதப்படுவதே எளிய நடை என்பது இவர் கருத்து. இந்நிலையைக் கடைப்பிடித்துள்ளாரே இக்காலத்துப் பலராவர். இயல்பிற் பரந்து கிடக்கும் இவ்வெளிய கொள்கைக்கு இவர் உபதேசமும் இன்றியமையாததுகொல்! எளிய நடையாவது இலக்கணப் பிழையின்றித் திரிசொற்கள் பெரிதும் விரவாமல் இயற்சொற்களால் இயல்வதாகும். இவ்வெளிய நடையையும், திரிசொற்கள் பெரிதும் விரவிய அரிய நடையையும், எழுதப்படும் பொருள்களுக்கு ஏற்றவாறு புலவர்கள் பகுத்துணர்ந்து மேற்கொள்ளல் வேண்டும்" (உரைநடைக் கோவை, இரண்டாம் பகுதி, பக்.24-25).

எளிய நடை என்பதற்கு இங்கே பண்டிதமணி சுட்டிக்காட்டும் இயல்புகள் யாவும் அவருடைய நடையில் பாங்குறப் பொருந்தி இருக்கக் காண்கிறோம். இலக்கண வரம்போடு திரிசொற்கள் பெரிதும் விரவாமல் இயற்சொற்களால் இயலும் பண்டிதமணியின் சீரிய செந்தமிழ் நடைக்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு :

"பெருமான் கருணைத் திறம் இரு வகைப்படும். அவை அறக்கருணை மறக்கருணை என்பனவாம். ஒரு தந்தைக்குரிய மக்கள் இருவருள், ஒருவன், 'தந்தை சொன்மிக்க மந்திரமில்லை' என்றபடி செவ்விய நன்னெறிக்கண் ஒழுகுகின்றான். அதற்குத் தந்தை வேண்டுவன தந்து இன்புறுத்துகின்றான். மற்றொருவன் தந்தையுரை கடந்து தீய நெறிக்கட் செல்லுங்கால் அவனைத் தந்தை அடித்துத் துன்புறுத்தி நன்னெறிக்கட் செலுத்துகின்றான். இம்மக்கள் இருவரிடத்துச் செய்யும் இவ்விரு செயலும் அன்பு பற்றியனவேயாகும். இங்ஙனமே நம் பரமபதியின் செயலுமாம். தம்மிடத்து அன்பு பூண்டு ஒழுகும் அடியார்களை அவர் உவப்பன செய்து இன்புறுத்துவர். அன்பின்றி இருப்போரை ஒறுத்து நன்னெறிக்கட் செல்லுமாறு அருள் பாலிப்பர். இவ்விரு செயற்கும் அவ்வான்மாக்களிடத்துத் தாம் வைத்த கருணையே காரணமாகும். இவற்றுள் முன்னையது அறக்கருணை யெனவும், பின்னையது மறக் கருணை யெனவுங் கூறப்படும்" (உரைநடைக் கோவை : முதற்பகுதி, பக்.43-44).

இங்கே சிவபெருமானின் அறக்கருணை,மறக்கருணை என்னும் இருவகைக் கருணைத் திறத்தினை இலக்கண வரம்புடன் அமைந்த செந்தமிழ் நடையில் நன்கு தெளிவுபடுத்தியுள்ளார் பண்டிதமணி.

கற்றறிந்தார் போற்றும் இனிய நடை

பண்டிதமணி 'சங்க இலக்கியங்கள்' பற்றிக் கூறும் கருத்து ஒன்று, அவர் நடைக்கும் நன்கு பொருந்தி வருவதாக உள்ளது. சிந்தனைக்கு விருந்தாகும் அக்கருத்து வருமாறு :

"பாடல்களில் அமைய வேண்டிய ஆழமுடைமை இனிமை எளிமை என்னுங் குணங்களுள் ஆழமுடைமையும் இனிமையும் சங்க இலக்கியங்களில் நன்கு அமைந்துள்ளன என்பதை யாவரும் எளிதில் உணர்வர். எளிமை கால

வேறுபாட்டால் அவ்விலக்கியங்களில் அருமையாக மாறுதல் அடைந்துள்ளது. அப்பாடல்கள் தோன்றிய காலத்து அந்நடை எளிமையாக இருக்கலாம். அக்காலத்துப் பயிற்சியில் முதிர்ந்த செந்தமிழ்ச் சொற்கள் இயல்பாக வழங்கப்பட்டிருக்கக் கூடுமாதலின், அப்பாடல் நடைகளும் அங்ஙனமே அமைந்துள்ளன என்று கோடல் பொருந்தும். இற்றைஞான்று மொழி நடையில் முதிர்ந்த பழஞ்சொற்களும் தொடர்களும் சிறிது சிறிதாகக் கைவிடப்பட்டு வந்தமையால் முன்னைப் பாடல் நடைகள் இப்பொழுது நமக்கு எளிமையில்லாத-வனவாகக் காணப்படுகின்றன. சங்க இலக்கியங்களுள் ஒரு சிலவற்றைத் தெளிவாகப் பொருள் உணர்ந்து படித்து அடிக்கடி பழகி வருவோமாயின், இந்நடையும் நமக்கு எளிமையாக அமையும். எதுகை மோனை நிமித்தம் வறிதே அடைமொழிகளைப் புணர்த்துப் பொருட்சுருக்கமும் சொற்பெருக்கமும் அமைய யாக்கப்படும் பிற்காலத்தவர் பாடல்கள் நுண்ணறிவுடையார்க்கு இன்பஞ் செய்வனவாகா. ஒரு சிறு சொல்லேனும் வறிதே விரவாமல், உய்த்துணருந் தோறும் 'நவில்தொறும் நூல் நயம் போலும்' என்னும் முதுமொழிக்கிணங்க இன்பஞ் செய்வன சங்கப் பாடல்களே-யாகும்" (உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, பக்95-96).

சங்கப் பாடல்களைப் போலப் பண்டிதமணியின் நடையிலும் ஆழமுடைமை, இனிமை ஆகிய இரு பண்புகளும் நன்கு அமைந்துள்ளன. எளிமைப் பண்பு, கால வேறுபாட்டால் அவரது நடையில் அருமையாகத் தோன்றுகின்றது. முதிர்ந்த பழஞ்சொற்களும் தொடர்களும் அவரது மொழி நடையில் இயல்பாக வழங்குவதால், அவரது நடை இன்றைய வாசகருக்கு எளிமையாக இல்லாதது போல் தோன்றுகின்றது. எனினும், அவரது கட்டுரைகளுள் ஒருசிலவற்றை - 'ஞானத்தின் திருவுரு', 'அன்பின் திருவுரு', 'தமிழும் தமிழ்ப் பணியும்', 'குறுந்தொகை' ஆகியவற்றை - தெளிவாகப் பொருளுணர்ந்து படித்து அவற்றோடு அடிக்கடி பழகி வருவோமாயின், அவரது நடையும் நமக்குக் காலப் போக்கில் எளிமையாகவே விளங்கும். எதுகை மோனைகள், அடுக்குச் சொற்கள், அடைமொழிகள் போன்றவற்றை வறிதே கையாண்டு பொருட் சுருக்கமும் சொற்பெருக்கமும் அமையப் பண்டிதமணி ஒருபோதும் எழுதமாட்டார். சங்கத் தமிழ் போல் ஒரு சிறு சொல்லேனும் வறிதே விரவாமல், உய்த்துணருந் தோறும் நுண்ணறிவு

படைத்தோர்க்கு - கற்றறிந்தோர்க்கு - இன்பம் நல்குவது அவரது நடையாகும். அவ்வகை நடைக்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:

"ஒரு பெண்மகள் தன்னைக் கைப்பிடித்த காதலனிடத்துச் செய்யும் அன்புக்கும் தன் சோதரர் சுற்றத்தாரிடத்துச் செய்யும் அன்புக்கும் வேறுபாடு உண்டன்றோ? முன்னையது சிறப்பு அன்பும், பின்னையது பொது அன்புமாம். சிறப்பன்பை வேறோரிடத்துச் செய்யின், பிறழ்ச்சிக் குற்றம் வருதலோடு சிறப்பிலக்கணமும் பிழைபடும். பொது அன்பை உரிய சோதரரிடத்துப் போல் மற்றையோரிடத்துஞ் செய்யலாம். அதனால் வருங் குற்றம் யாதுமின்றாம். அவ்வாறே நமது சமயக் கடவுளிடத்துச் செய்யும் பத்தி சிறப்பும், ஏனைத் தேவர்களிடத்துச் செய்யும் பத்தி பொதுவுமாம். ஆனால் அப்பெண்மகள் தன் உயிர்க்காதலனைப் பாராட்டி ஏனைச் சோதரர் முதலியோரையும் இகழாது உபசரித்தல் போல நாமும் நம் சமயத் தெய்வத்தைப் பாராட்டுதலோடு மற்றைத் தேவர்களையும் இகழாது அவரவர்க்கேற்றவாறு உபசரித்துப் போற்றுதல் கடனாம்" (உரைநடைக் கோவை : முதற்பகுதி, பக்.53-54).

'சிவபிரான் கருணையும் சீவர்கள் கடமையும்' என்னும் சமயக் கட்டுரையில் இடம்பெற்றிருக்கும் இப்பகுதியில் பண்டிதமணி, படிப்பவர்க்கு எளிதாக விளங்கக்கூடிய உதாரணம் ஒன்றால், 'ஒவ்வொரு சமயத்தாரும் தத்தம் சமயக் கடவுளைச் சிறப்பு வகையானும் பிற சமயக் கடவுளைப் பொது வகையானும் அன்பு செய்யலாமன்றிச் சமநிலையாகக் கோடல் பத்தியின் இலக்கணமன்றாம்' என்னும் ஆழமான கருத்தினைத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார். ஆழமும் இனிமையும் களிநடம் புரியும் பண்டிதமணியின் நடைத் திறனுக்குப் பிறிதோர் எடுத்துக்காட்டு வருமாறு :

"ஒரு மணமகளை ஓராடவன் காதற் கிழமை கொடு மணந்து நடாத்தும் இல்வாழ்க்கையைப் பெரியார் இல்லற-மென்று சுட்டியதன் கருத்தை ஊன்றி நோக்கல் வேண்டும். 'இல்லின்பம்' என்னும் வழக்குப் பொருந்துவதாகவும், 'இல்லற'மென்னும் வழக்கே ஆட்சியிற் பெரிதும் காணப்படுகின்றது. அவ்விருவரும் துய்க்குமின்பம், அவர்தம் அன்பின் தொடர்பை வேரூன்றச் செய்து, பின் அவ்வன்பு ஒருங்கியைந்த அருங்கலமாக அவர்பால் வெளிப்படூஉம் மகவு

முதலியோர்மாட்டு அதனை விரிவுபடுத்திப் பின்னர்ப் படிப்படியாக உலகத்துள்ள எல்லா உயிர்களிடத்தும் அவ்வன்பைப் பரவச் செய்து அருள் என்னும் பெயரதாக்கி அதன் முகமாக அவ்வருளையே வடிவமாகவுடைய இறைவனோடு இயைவித்துப் பேரின்ப நுகர்ச்சியிற்றலைப் படுத்தும் அறமாக மாறுதலின் இல்லின்பமென்பதனினும் இல்லறமென்னும் ஆட்சி சிறந்ததெனப் பெரியோர் கண்டனர் போலும்" (உரைநடைக் கோவை : முதற்பகுதி, பக்.72-73). இங்கே இல்லற வாழ்க்கையின் முடிந்த நோக்கம் பிறர்க்கு நன்மை செய்வதே ஆதலின், அதனை 'இல்லின்பம்' என்னாது, 'இல்லறம்' எனப் பெரியோர் குறிப்பிட்டனர் எனப் பண்டிதமணி தம் கருத்தை வலியுறுத்திச் சென்றிருக்கும் பாங்கு பயில்வார் நெஞ்சை அள்ளுவதாகும்.

'சன்மார்க்கம்', 'சிவபிரான் கருணையும் சீவர்கள் கடமையும்', 'சைவ சமய விளக்கம்', 'ஞானத்தின் திருவுரு', 'அன்பின் திருவுரு' என்னும் ஐந்து சமயக் கட்டுரைகள் அடங்கிய பண்டிதமணியின் 'உரைநடைக் கோவை முதற்பகுதி'க்குப் பேராசிரியர் கா.சுப்பிரமணிய பிள்ளை 'சிறப்புப் பாயிரம்' வழங்கியுள்ளார். அதில் அவர், "ஈண்டுத் தொகுக்கப் பெற்ற ஐந்து கட்டுரைகளும் திருவைந்தெழுத்துப் போலப் பாராட்டத்தக்கன. அவை முறையே கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல், முத்திப் பேறு என்பவற்றின் நுட்பங்களை விளக்குவனவாயமைந்துள்ளன" (ப.15) எனப் பண்டிதமணியின் கட்டுரை வன்மைக்குப் புகழாரம் சூட்டியுள்ளார்.

சிந்தனை அளவுக்குத் தக்க தொடர் அமைப்பு

"இன்று பலர்தம் உரைநடை, ஆற்றொழுக்காக நெடுந்தொடராகச் செல்லவில்லை. ஓட்டம் அற்றதாக, அடிக்கடி முற்றுப்புள்ளியுடையதாகச் சிறுசிறு தொடர்த் துணுக்குகளாக, தொடக்கப் பள்ளி நூல் நடையதாக முடிந்து முடிந்து பிறக்கின்றது. சிந்தனை நீளத்துக்கேற்றவாறு உம்மையும் எச்சமும் படத் தொடர் நீளாமல், சிறுசிறு தொடர்களை எண்ணி அந்த அளவிற்குச் சிந்தனையை வெட்டிக் கொள்ப. ஒரு தொடர் எவ்வளவு நீள வேண்டும் என்பது சிந்தனையளவைப் பொறுத்தது. ஒரு சொல்லும் தொடராகலாம். ஒரு தொடர் பத்து வரியும் நீளலாம்.

எழுத்தாளன் கருத்தினை ஆள, கருத்து தொடரினை ஆள வேண்டும். இதுவே படிமுறை" (சிந்தனைக் களங்கள், பக்.450-451) என இக்கால உரைநடையினைக் குறித்து மதிப்பிடுவர் அறிஞர் வ.சுப.மாணிக்கம். மேலும் அவர், "நம் எழுத்தாளர்கள் சிறுசிறு தொடர்களையே உரைநடை யமைப்பாகக் கருதிப் பின்பற்றாது, சிந்தனையளவுக்குத் தக்க தொடரளவை ஏற்ற பெற்றி அமைக்க வேண்டும்" (ப.452) எனவும் கருத்துரைப்பர்.

பண்டிதமணியைப் பொறுத்த வரையில், சிந்தனை நீளத்துக்கு ஏற்றவாறு தொடர் அளவுகளை அமைக்கும் பாங்கு சிறப்பாகக் காணப்படுகின்றது. அவர் உம்மைகளையும் எச்சங்களையும் கையாண்டு நீண்ட வாக்கியங்களை ஆற்றொழுக்காக எழுதிச் செல்வதும் உண்டு; அவ்வப்போது சிறுசிறு தொடர்களால் ஆன வாக்கியங்களை எழுதிப் பயில்வாரின் நெஞ்சை அள்ளிக் கொள்வதும் உண்டு. இவ்வகையில் குறிப்பிடத்தக்க இரு சான்றுகள் வருமாறு :

1. "செப்ப மிக்க இயலமைப்பும் அவ்விலக்கணங்களுள் வேறு எம்மொழிக்கும் இல்லாது தனக்கெனச் சிறப்பு முறையின் அமைந்த பொருளிலக்கண ஒழுங்கும், முதிர்நலச் சொற்களும் சிதைவில் நுண்பொருள்களும் தங்கி நின்றொளிருஞ் சங்க நூற்றொகையும், புன்னுனிப் பனியில் மன்னுமா மலையுருத் துன்னி நின்றொளிர்தரல் போலச் சிற்றளவினவான சொற்றொடர்களிற் சிறந்தமைந்தனவாகிய பெரும் பொருள்கள் தோன்றித் திகழும் அறமுத னுதலிய திறமை நூல்களும், அன்பினைந்திணை அகவொழுக்க நேர்மையும், தொடர்நிலைச் செய்யுட் சுவைநலக் கனிவும், குறிக்கோள் பற்றிய அறிவியல் நூல்களின் திட்ப நுட்ப அமைவும், காதல் மிக்கு ஓதுவார் கேட்பாரது கல்லினும் வலிய உள்ள நிலையையுங் கரைத்து அவர்தமை அன்புருவாக்கி இறை திருவருட்கு இனிதின் ஆளாக்கும் இசை நலந்தழீஇய அருட்பாசுரப் பகுதிகளும், இன்னும் பற்பல துறைகளைப் பற்றி நின்று திகழும் நூற்றொகைகளும் தன்பான் மிளிர, இனிமையாங் குணத்தை இயைந்து தட்பமும் தகவும் ஒட்பமும் ஒருங்கமையப் பெற்று, எல்லாம் வல்ல இறைநிலை போல் என்றும் நின்று நிலவுவது தென்றமிழ் மொழியே யாகும்" (உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, பக்.42-43).

2. "குறுந்தொகை என்பது சங்க இலக்கியங்களாகிய தொகை நூல்கள் எட்டனுள் ஒன்று. இது நல்ல குறுந்தொகை என்று பாராட்டப்பட்டுள்ளது. அகப்பொருள் நுதலிய தொகை நூல்களுள் அடியளவாற் பெற்ற பெயர் இதுவாகும். நாலடிச் சிற்றெல்லையையும் எட்டடிப் பேரெல்லையையும் உடையது. அடியளவாற் குறுகிய-தன்றிப் பொருளளவாற் பெரியதென்றே கூறலாம்" (உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, பக்.96-97). இங்கே மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டுள்ள முதற்பகுதி தமிழின் சால்பினை ஆற்றொழுக்கான நெடுந்தொடராகச் சொல்லிச் செல்வது; உரைநடை வடிவில் அமைந்த 'தமிழ் விடு தூது' இப்பகுதி. இரண்டாவது பகுதி, எட்டுத் தொகை நூல்களுள் ஒன்றான குறுந்தொகையைச் சிறுதொடர்களால் ஆன ஐந்து எளிய வாக்கியங்களால் அறிமுகம் செய்வது; 'நல்ல குறுந்தொகை' பற்றிய அழகிய சொல்லோவியம் இப்பகுதி.

பொன்மொழிகளைப் போல் ஒருமுறை மனம் கலந்து - பொருள் உணர்ந்து - படித்தாலே படிப்பவரின் நெஞ்ச அரியணையில் ஏறி அமர்ந்து கொள்ளும் வகையில் அமைந்த இரத்தினச் சுருக்கமான வாக்கியங்களும் பண்டிதமணியின் நடையில் ஆங்காங்கே காணப்படுகின்றன. உள்ளங்கவர் உதாரணங்கள் ஒரு சிலவருமாறு :

"அயராத உழைப்பிற்கு அகப்படாத அரும்பொருள் யாதுமின்று."

"தீயன களைந்தாலன்றி நல்லன செய்தற்கு இடனமைதல் அரிது."

"அன்போடு பன்னாள் அழைத்தால் இறைவனும் வெளிப்பட்டு அருளாமலிருக்க முடியாது."

"செம்பொருளினும் குறிப்புப் பொருள்களே அறிவுடையார்க்கு இன்பஞ் செய்வனவாம்."

(உரைநடைக்கோவை : இரண்டாம் பகுதி, பக்.45; 51; 57; 109)

உவமையழகு

உவமை என்பது ஒரு பொருளோடு ஒரு பொருளினை ஒப்புமை கூறுதல். புலன் அல்லாதன புலனாதலும்,

அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயத்தலும் உவமையின் பயன் என்பர் இளம்பூரணர். பண்டிதமணி குறுந்தொகை மாநாட்டில் நிகழ்த்திய தலைமையுரையில், "பொருள்களைத் தெளிவுறுத்துவது உவமையாகும்... சங்கப் புலவர் காணும் உவமைகள், பொருளோடு ஒத்த தன்மையால் நெருக்கம் உடையனவாய் நின்று, உணர்வுக்கு இன்பஞ் செய்வனவாம்" (உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, ப.101) எனச் சங்க இலக்கியங்களில் காணலாகும் உவமையழகினைப் போற்றிக் கூறுவர். பொருளோடு ஒத்த தன்மையால் நெருக்கம் உடையனவாய் நிற்றல், பயில்வார் உணர்வுக்கு இன்பஞ் செய்தல் என்னும் இவ்விரு அளவுகோல்களுக்கு ஏற்ப அமைந்துள்ள பண்டிதமணியின் உவமைகள் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

சிவபிரான் கருணையின் சிறப்பினைப் புலப்படுத்து-வதற்குப் பண்டிதமணி கையாண்டுள்ள ஓர் அழகிய உவமை வருமாறு :

"தாழ்ந்த நிலம் மேட்டு நிலமென்னும் வேறுபாடு கருதாது மேகம் நிரந்தரமாகப் பெய்தும், அந்நீரை மேட்டு நிலம் ஏற்காது ஒதுக்கத் தாழ்வு நிலம் ஏற்குமா போல, சிவபிரான் பருகற்கினிய பரங்கருணைத் தடங்கடலாக இருந்தும், நம் தீயவினையாகிய அணை குறுக்கிட்டுக் கிடத்தலான், அக்கருணை வெள்ளம் நம்பாற் செல்லாது உண்மை அன்பர் கூட்டமாகிய நற்றடத்திற் சென்று நிறைகின்றது" (உரைநடைக் கோவை : முதற்பகுதி, பக்.38-39).

ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலந்து சலிப்பின்றி அனுபவிக்கும் பேரின்ப நிலையாம் அத்துவித நிலைக்குப் பண்டிதமணி கையாண்டுள்ள ஓர் அரிய உவமை வருமாறு :

"ஒரு வண்டு தேனிறைந்த மலரில் வீழ்ந்து அம்மதுவைத் தேக்கறவுண்டு களித்து அதன்கட் டோய்ந்திருக்கும் பொழுது தான் வேறு, மது வேறு என்னும் வேற்றுமை யுணர்வின்றிக் கிடத்தல் போல, ஆன்மா இறைவனிடத்துப் பேரின்ப நுகர்ச்சியிற் றலைப்பட்டுத் தான் ஒரு பொருளென்னும் வேற்றுமை யுணர்வின்றி யொன்று பட்டிருக்கும் அந்நிலையே அத்துவித நிலையாகும்" (உரைநடைக் கோவை : முதற்பகுதி, ப.9).

'ஆன்மா எப்பொருளைச் சார்ந்ததோ அப்பொருளின் வண்ணமாகும் தன்மை உடையது' என்னும் சித்தாந்தக் கருத்தைப் புலப்படுத்துவதற்குப் பண்டிதமணி கையாண்டுள்ள இரு உவமைகள் வருமாறு :

"வெளி இருளோடு கூடுங்கால் இருளாகவும், ஒளியோடு கூடுங்கால் ஒளியாகவும் ஆதல் போலவும், ஒரு பளிங்கு செந்நிறத்தைச் சார்ந்துழிச் செம்மையாகவும், கரு நிறத்தைச் சார்ந்துழிக் கருமையாகவுந் தோன்றுதல் போலவும், ஆன்மா, மலவிருளிற் கலந்துழி அதன் மயமாகவும், சிவ விளக்கத்திற் பொருந்துழிச் சிவமயமாகவும் விளங்கும்" (உரைநடைக் கோவை : முதற்பகுதி, பக். 48-49)

இதுவரை பொருள்களைத் தெளிவுறுத்தும் நோக்கில் பண்டிதமணி கையாண்டுள்ள சில பொருத்தமான உவமைகளைக் கண்டோம். இனி, அலங்காரமாகிப் படிப்பவர்க்கு இன்பம் தரும் சில நயமான உவமைகளை ஈண்டுக் காண்போம்.

"... தரும சாத்திரங்களைத் தங்களுக்குரியனவாக வைத்துக் கொண்டும் அவற்றை நோக்காது கையில் விளக்கேந்திக் கிணற்றில் விழுவார் செயலையொத்து மனம் போனபடி கூறுகின்றனர்" (நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம், ப.12).

"நோய் தீர்க்கும் நன்மருந்துகளை உண்பிக்கக் கருதும் மருத்துவர் அம்மருந்தை இனிமைச் சுவையுள்ள வெல்ல முதலிய அநுபானங்களுடன் கலந்து கொடுத்தல் போல, மெய்யுணர்வின் பயனாகிய உண்மைகளை மக்களுக்கு அறிவிக்கக் கருதிய பெரியோர்கள் அவற்றை இனிய இசையிற் கலந்து ஊட்டுவாராயினர்" (மணிமலர்த் திரட்டு, ப.26).

"அன்னார் (திருவள்ளுவர்க்கு முன்னும் பின்னும் நீதிநூலருளிய ஆசிரியர்கள்) புகழொளியெல்லாம் வானத்து விளங்கும் மீன்களாக, வள்ளுவர் சீர்த்தி அப்பன்மீன் நடுவண் பான்மதி போலத் திகழ்வதாகும்" (உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, ப.59).

இங்ஙனம் உவமை அணியைத் தம் மொழி நடையில் திறம்படப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் பண்டிதமணி.

சொற்பொழிவு நடை

"இலக்கியச் சொற்பொழிவுகளில் மறைமலை அடிகளும், இராகவையங்காரும், பண்டிதமணியும், திரு.வி.க.வும் குறிப்பிடத்தக்கவர்கள்... பிற இடங்களில் போலல்லாது தமிழ்நாட்டில் பேச்சு நடை கீழிறங்காமல் மேல் உயர்ந்தது. மேடைப் பேச்சு நடைக்கும் எழுத்து நடைக்கும் இன்று தமிழ்நாட்டில் இதனாலேயே வேற்றுமை காண்பது அரிதாயிற்று" (கலைக்களஞ்சியம், தொகுதி ஐந்து, ப.490) என்று தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், தம் 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கிய வரலாறு' என்னும் கலைக் களஞ்சியக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்திற்- கேற்ப, சொற்பொழிவு வடிவில் அமைந்த பண்டிதமணியின் கட்டுரைகள் உயர்ந்த இலக்கியத் தரம் வாய்ந்தனவாக - கேட்போரைக் கீழே இறக்காமல் மேலே உயர்த்தும் பண்பினவாக - விளங்குகின்றன. அவரது கட்டுரைகளுள் 40 விழுக்காட்டிற்கும் மேலானவை சொற்பொழிவு வடிவில் அமைந்திருப்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

பண்டிதமணியின் கட்டுரைகளில் சொற்பொழிவின் தாக்கம் பின்வரும் ஏழு நிலைகளில் படிந்திருப்பதைக் காண முடிகின்றது :

1. அறிவிப்பு
2. அவையினரை விளித்துப் பேசுதல்
3. அவையினரை உளப்படுத்திப் பேசுதல்
4. அவையினரை முன்னிலைப்படுத்திக் கூறுதல்
5. தன்வெளிப்பாடு (Self-revelation)
6. நன்றியறிவைப் புலப்படுத்துதல்
7. தொகுப்பும் வாழ்த்தும் கூறி முடித்தல்

இனி, இவ் ஏழு நிலைகளுக்கான சான்றுகளை ஈண்டு நிரலே காண்போம்.

1. அறிவிப்பு

சொற்பொழிவின் தொடக்கத்தில் தலைவர்க்கும் அவையினர்க்கும் ஆசிரியர் பணிவுடன் செய்து கொள்ளும் அறிவிப்புப் பகுதிக்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு :

"தலைவரவர்களுக்கும் இவ்வவைக்கண் விளங்கும் ஆன்றோர்களுக்கும் பணிவுடன் செய்து கொள்ளும் அறிவிப்பு."

(உரைநடைக் கோவை : முதற்பகுதி, ப.1)

'சன்மார்க்கம்' என்ற சமயக் கட்டுரையின் தொடக்கத்தில் இடம் பெற்றுள்ள அறிவிப்புப் பகுதி இது. 'பணியுமாம் என்றும் பெருமை' என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு ஏற்ப இப்பகுதி அமைந்திருத்தல் கண்கூடு.

2. அவையினரை விளித்துப் பேசுதல்

ஒரு சொற்பொழிவாளர் தம் பொழிவின் தொடக்கத்திலும் இடையிடையே தேவைப்படும் இடங்களிலும் அவையினரை விளித்துப் பேசுவது உண்டு. சான்றாக, 'தமிழும் தமிழ்ப் பணியும்' என்னும் தலைப்பில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துப் பதினான்காம் ஆண்டு விழாவில் நிகழ்த்திய தலைமைப் பேருரையின் தொடக்கத்தில் பண்டிதமணி,

"இமிழ்கடல் வரைப்பில் இனிமை சான்ற தமிழ்மொழி பேணுந் தகைசால் ஐயன்மீர்! அன்னைமீர்!" (உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, ப.9) என அவையினரை விளித்துப் பேசியிருப்பது மனங்கொளத் தக்கது.

அவையினரின் கவனத்தைக் கவரும் நோக்கில் பண்டிதமணி தம் சொற்பொழிவின் இடையேயும் அவையினரை விளித்துப் பேசுவது உண்டு. மேற்சுட்டிய 'தமிழும் தமிழ்ப் பணியும்' என்னும் சொற்பொழிவின் இடையே பண்டிதமணி செல்வர்களை விளித்துப் பேசுவதாக அமைந்துள்ள பகுதியை இங்கே சுட்டிக் காட்டலாம்:

"புலவர்களைப் பாதுகாத்து அவர் செந்நாவாற் பாராட்டப் படுதலினும் செல்வர் பெறும் பேறு வேறு யாதுளது? காலத்தாற் கவரப்பட்ட செல்வருட் புகழுடம்பு கொண்டு இன்றும் நம்மோடு அளவளாவி இன்புறுவார், புலவர் பாடும் புகழ் படைத்தாரன்றோ? கற்றவர்க்கு ஈத்துவக்கும் பேறில்லாதார், செல்வம் படைத்தும் ஒளியும் புகழும் இலராய், விலங்கோடு ஒப்ப உண்டு களித்துத் துஞ்சும் இயல்பினரேயாவர். ஆதலாற் செல்வர்களே! புலவரைப்

போற்றுதல் நும்மைப் போற்றுவதாகும். ஆதலின் தமிழ் நலங்கருதி இன்னோரன்ன துறையில் இறங்குமின்கள்! செல்வம் படைத்த ஞான்றே புலவர் பக்கலிருக்க விழைமின்கள்! பற்பலவாற்றானுஞ் செலவழிக்கப்படும் நும் பொருட்கூறுகளுள் ஒன்று புலவர்க்குச் செய்மின்கள்! அவிச் சுவையினும் இனிய கவிச்சுவையை நுகர்மின்கள்! நும் பூதவுடல் வன்மையுற்றிருக்கும் ஞான்றே புகழுடலின் ஆக்கத்திற்கு வேண்டுவன புரிமின்கள்! அழிதல் மாலையதாகிய செல்வத்தைக் கொண்டு அழியாப் புகழை வளர்த்தற்குரிய நெறியைப் பற்றுமின்கள்! புகழொன்றோ, வலவனேவா வானவூர்தி எய்துதலாகிய புண்ணியப் பயனும் நுங்கட்காம்."

(உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, ப.32)

'செல்வத்துப் பயனே ஈதல், துய்ப்பேம் எனினே தப்புந பலவே' என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகளுக்கு உரைநடையில் வரைந்த நல்லதொரு விளக்கமாக இப்பகுதி அமைந்திருத்தல் நெற்றித் திலகம்.

3. அவையினரை உளப்படுத்திப் பேசுதல்

பண்டிதமணி தம் சொற்பொழிவில் அவையினரை உளப்படுத்திப் பேசும் இடங்களும் உண்டு. இவ்வகையில் குறிப்பிடத்தக்க ஓர் எடுத்துக்காட்டு இதோ :

"இனி, இங்ஙனம் தொன்மையான மாண்புமிக்க இம்மொழியின் சிறப்பைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்" (உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, ப.14) இங்கே அவையினரையும் தம்முடன் கரம் பற்றி அழைத்துச் செல்வதைப் போல் பாங்குடன் உரை ஆற்றியுள்ளார் பண்டிதமணி.

4. அவையினரை முன்னிலைப்படுத்திக் கூறுதல்

அவையினரை இங்ஙனம் உளப்படுத்தியும் முன்னிலைப்படுத்தியும், உரையாற்றும்போது, சொற்பொழிவாளர்க்கும் அவையினருக்கும் இடையே ஒரு நெருக்கமான உறவு (Intimacy) ஏற்படுகின்றது; அவையினரைத் தம் சொற்பொழிவின் கருத்தோட்டத்தோடு சேர்த்து அழைத்துச் செல்வதற்கும் இவ்வுத்திகள் பயன்படுகின்றன. ஓர் எடுத்துக்காட்டு இதோ :

"உயர்நிலைப் பாவலர் மயர்வற ஆக்கிய விழுப்பொருள் நிறைந்த செய்யுள்களின் சொற்பொருளொழுக்கில், நும் நுண்ணறிவு எதிரேறிச் செல்லல் வேண்டும். அங்ஙனஞ் சென்று அச்சொற் பொருள்களின் வன்மை வனப்புக்களை ஆராய்ந்தளக்க முயலின், அச்செய்யுளாசிரியன் ஆழ்ந்து நினைவிற் கண்டு வைத்த அரும்பொருண் மணிகளின் இயலொளியை உண்மையாகக் கண்டு இன்புறலாம்" (உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, ப.44).

'முன்னிலை யாக்கல் சொல்வழிப் படுத்தல்' (தொல்காப்பியம், களவியல், நூ.10) என்றாற்போல், இங்கே அவையினரை முன்னிலைப்படுத்திக் கூறி, தம் கருத்தின் வழியே அவர் நிற்குமாறும் செய்து விடுகிறார் பண்டிதமணி.

5. தன்வெளிப்பாடு (Self-Revelation)

சொற்பொழிவின் ஊடே ஆசிரியரின் தன்விளக்கக் குறிப்புக்கள் இடம்பெறுவது என்பது தவிர்க்க இயலாத ஒன்று. பண்டிதமணியின் சொற்பொழிவுகளிலும் ஆங்காங்கே தன்வெளிப்பாட்டுக் குறிப்புக்கள் இடம்பெற்றிருக்கக் காணலாம். ஓர் எடுத்துக்காட்டு இதோ :

"மொழிபெயர்ப்பால் ஒரு மொழி நூல் வளர்ச்சி பெறுதல், அம் மொழிப் புலவர் இயன்மதி யாற்றற்கு அத்துணைச் சிறப்பின்றென்பது உண்மையெனினும், இயற்கையாகப் பல புதிய சிறந்த நூல்களை மதிவலியால் ஆக்கும் ஆற்றல், வளர்ச்சி யெய்துங்காறும் மொழிபெயர்ப்புச் செயலை மேற்கோடலால் இழுக்கின்று என்பது என் கருத்து. இது கருதியே மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்தலையும் நூல் யாப்பு வகையுள் ஒன்றெனக் கண்டனர் தொல்காப்பியனாரும் என்க" (உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, பக்.56-57).

6. நன்றியறிவைப் புலப்படுத்துதல்

சொற்பொழிவாளர் பொழிவின் தொடக்கத்தில் விழாவினை ஏற்பாடு செய்தவர்களுக்கும், முடிவில் பொழிவினைக் கேட்ட அவையினர்க்கும் தம் நன்றியறிதலையும் வணக்கத்தையும் உரிமைப்படுத்துதல் மரபு. இம்மரபினைப் பண்டிதமணியின் சொற்பொழிவுகளில் சிறப்பாகக் காணமுடிகின்றது.

'சைவ சமய விளக்கம்' என்னும் தலைப்பில் சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் இருபத்தைந்தாம் ஆண்டு விழாவில் பண்டிதமணி ஆற்றிய தலைமையுரையின் தொடக்கப் பகுதி இது :

"அன்புமிக்க ஐயன்மீர்! அன்னைமீர்! எல்லாம் வல்ல பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் திருவருட் பாங்கால், இன்றைக்கு இருபத்தைந்து யாண்டுகளுக்கு முன் தோன்றி, இதுகாறும் சைவ உலகிற்குப் பல்லாற்றானும் நற்பயன் விளைத்து வரும் இச்சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் கால் நூற்றாண்டு விழா நிமித்தம் இங்குக் கூடிய இம்மா-பேரவையில் பேரறிஞர்களாகிய உங்கள் முன்னிலையில் 'தலைமை தாங்குக' என்று இச்சமாஜத்தன்பர்கள் 'வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைக்கு' யான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். இது பற்றி என் நன்றியறிவையும் வணக்கத்தையும் இம்மகாசமாஜத்தார்க்குரிமைப்படுத்து-கின்றேன்" (உரைநடைக் கோவை : முதற்பகுதி, ப.69).

16.4.44-இல் சென்னையில் நிகழ்ந்த கம்பர் மாநாட்டில் 'கம்பன் கவிநலம்' என்னும் தலைப்பில் பண்டிதமணி ஆற்றிய தலைமையுரையின் முடிவுப் பகுதி வருமாறு :

"அன்பர்களே! இதுகாறும் என் சிற்றுரைக்குச் செவி சாய்த்துப் பெருமைப்படுத்திய நுங்கள் எல்லோர்க்கும் என் உளமார்ந்த வணக்கத்தைச் செலுத்துகின்றேன்" (மணிமலர்த் திரட்டு, ப.45).

7. தொகுப்பும் வாழ்த்தும் கூறி முடித்தல்

சொற்பொழிவின் முடிவில், தாம் இதுவரை ஆற்றிய பொழிவின் சாரத்தைத் தொகுத்துக் கூறி, வாழ்த்தி முடிப்பது பண்டிதமணியின் இயல்பு ஆகும். ஓர் எடுத்துக்காட்டு :

"ஐயன்மீர்! இதுகாறுங் கூறியவற்றால் கல்வி மக்களுக்கு இன்றியமையாததென்பதூஉம், அதனைத் தாய்மொழியாகிய தமிழ் மூலம் பயிலல் வேண்டுமென்பதூஉம், தமிழின் தொன்மையும் சிறப்புக்களும் தொல்காப்பிய முதலிய இலக்கண நூல்களானும் பலவகை இலக்கிய நூல்களானும் சமய நூல்களானும் விளங்குமென்பதூஉம்,தமிழ் பிறிதொன்றி-னின்றும் தோன்றாத் தனிமொழியென்பதூஉம், இதன்கணுள்ள அகப்பொருள் முறை வனப்புக்கள் சிறந்தனவென்பதூஉம்,

இஃது அறிவுமொழி யென்பதூஉம், இக்காலத்து இதன் நிலைமை இன்ன வென்பதூஉம், போலி முறைகளைக் களைந்து இதனை வளர்க்க வேண்டுமென்பதூஉம், வளர்த்தற்குரிய வழிகள் மொழிபெயர்ப்பு ஆராய்ச்சி செய்யுணூல் உரைநூல் வரைதல் முதலியன வென்பதூஉம், அத்துறைகளில் தலைப்படும் புலவர்களைப் பொருட்பரிசில் பட்டங்கள் அளித்துப் போற்றுதல் வேண்டுமென்பதூஉம், பண்டைப் புலவர்களின் இயல்பும் அவர்களைப் பாதுகாத்த வள்ளல்களின் இயல்பும் இன்ன வென்பதூஉம், புலவராற் பாராட்டப்படுதல் செல்வர்க்கு இன்றியமையாததென்பதூஉம், இக்காலத்துத் தமிழ் வளர்ப்பான் எழுந்த சங்கங்களின் இயல்பு இன்னவென்பதூஉம், பெரிய தனித் தமிழ்க் கல்லூரிகள் அமைத்துப் பன்னூறு மாணவர்க்கு உணவளித்துத் தமிழ் பயிற்றல் வேண்டுமென்பதூஉம், தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று விரைவில் நிலைபெறச் செய்தல் வேண்டுமென்பதூஉம், தமிழ்ப் பள்ளிகளில் மொழிப் பயிற்சியோடு சமயநூற்பயிற்சியும் மாணவர்க்கு வேண்டுமென்பதூஉம், இக்கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் மேம்பாடும் இதற்கு வேண்டுவனவும் இன்னவென்பதூஉம், தமிழ்நாட்டுச் செல்வர்கள் தமிழ் வளர்ச்சியிற் பேருக்கமுடையராய்த் தக்கவாறு பொருளுதவி புரிந்து போற்ற வேண்டுமென்பதூஉம், திருவருள் முன்னிற்க வென்பதூஉம், பிறவுமாம்...

போற்றுந் தமிழும் புலவரும் வாழ்கநலஞ்
சாற்றுங் கரந்தைத் தமிழ்ச்சங்கம் – ஏற்றமொடு
பல்லாண்டு வாழ்க அருள்பாலித் தது புரக்கும்
எல்லோரும் வாழ்க இனிது."

(உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, பக்.40-41)

31 பக்க அளவில் விரித்தும் விளக்கியும் கூறிய கட்டுரையின் இன்றியமையாத கருத்துக்களை முடிவில் இங்கே ஒரே பக்க அளவில் சுருக்கியும் தொகுத்தும் கூறியிருப்பது பெரிதும் போற்றத்தக்கதாகும். மேலும், 'தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று விரைவில் நிலைபெறச் செய்தல் வேண்டும்' எனப் பல்லாண்டுகளுக்கு முன்பே பண்டிதமணி தொலைநோக்கோடு குறிப்பிட்டிப்பதும் அஃது இன்று நிறைவேறி இருப்பதும் மனங்கொளத்தக்கன ஆகும்.

காலப்போக்கில் பண்டிதமணியின் நடையில் ஏற்பட்ட மாற்றம்

பண்டிதமணி வடமொழியிலும் தமிழ் மொழியிலும் புலமை நிரம்பப் பெற்றவர். அவர் சுலோசனை, உதயன சரிதம், சுக்கிர நீதி, மண்ணியல் சிறுதேர், கௌடலீயம் - பொருணூல் ஆகிய வடமொழி நூல்களை அழகிய தமிழில் மொழி பெயர்த்துத் தந்துள்ளார். அவர் எழுதிய சமயக் கட்டுரைகள் 'உரைநடைக்கோவை'யின் முதற்பகுதியாகவும், இலக்கியக் கட்டுரைகள் 'உரைநடைக் கோவை'யின் இரண்டாம் பகுதியாகவும் வெளிவந்துள்ளன. 'இலக்கிய நயம்' என்னும் தலைப்பிலும் அவரது கட்டுரைகள் சில வெளிவந்துள்ளன இம் மூன்று கட்டுரை நூல்கள் வெளிவருவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே அவர் எழுதிய நூல் 'நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம்' என்பது. இந்நூல் மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவின் போது (25.04.1911) பண்டிதமணி ஆற்றிய சொற்பொழிவின் விரிவாக்கம் ஆகும். பண்டிதமணி தம் வாழ்நாளின் இறதிக் காலத்தில் எழுதியது திருவாசக உரை ஆகும். திருவாசகத்தின் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை ஆகிய மூன்று பகுதிகளுக்கும் 'கதிர்மணி விளக்கம்' என்னும் தலைப்பில் பண்டிதமணியின் உரை நூல்கள் வெளிவந்துள்ளன. இந்நூல்கள் யாவற்றிலும் சீரிய செந்தமிழ் நடை கையாளப்பட்டிருப்பினும் பண்டிதமணி தம் இளமைக் காலத்தில் எழுதியதற்கும் முதுமைப் பருவத்தில் எழுதியதற்கும் இடையே நடைப் போக்கில் குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படுகின்றது இவ்வேறுபாட்டினைக் குறித்து அறிஞர் வி.செல்வநாயகம் தம் 'தமிழ் உரைநடை வரலாறு' என்னும் நூலில் கூறியிருப்பது வருமாறு :

"நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் சீர்திருத்தம் என்ற நூலின் நடை கடினமானதாயும் வடசொற்கள் விரவப் பெற்றதாயும் உள்ளது. கடினமாக இல்லாத தூய செந்தமிழ் நடையில் அவர்கள் கட்டுரைகள் அமைந்துள்ளன. திருவாசக உரை எளிய நடையில் அமைந்துள்ளது. இவ்வாறு காலத்தின் போக்கிற்கிணங்க அவர் நடை மாற்றமுற்றுச் சென்றிருத்தல் நோக்கற்பாலது" (ப.132).

காலத்தின் போக்கிற்கு இணங்கப் பண்டிதமணியின் நடை மாற்றமுற்றுச் சென்றிருத்தலை இங்கே சில சான்றுகள் கொண்டு நிறுவலாம். முதலில் 1911-ஆம் ஆண்டில் வெளிவந்த பண்டிதமணியின் 'நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம்' என்னும் நூலில் இருந்து எடுக்கப் பெற்ற ஒரு பகுதியை இங்கே காணலாம்.

"கல்வியே மக்கட்குரிய இன்றியமையாத பொருளாதலின், அதனைப் பற்றி முதலிற் சில கூறுவேன். முன்னரீட்டிய இருவினைக் கீடாக இறைவன் கருணை மேலீட்டாற் றரப்பெற்ற மக்கள் யாக்கை யுடையாரெல்லாரும், தமக்கு இயற்கையாக அமைந்துள்ளதும், ஆணவ மல மறைப்பால் வெளிப்படாததும், எல்லாம் வல்ல சிவபெருமான் றிருவருளால் ஒவ்வோரமயம் வெளிப்பட்டு விளங்கும் இயல்பினதும் எல்லாவுயிர்கள் மாட்டும் ஒரே படித்தாக அழிவின்றியிருப்பதும் ஆகிய இயற்கையறிவைக் கருவியாகக் கொண்டு செயற்கை யறிவாகிய நூலறிவைப் பெறுதல் வேண்டுவதவசியமே" (நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம், ப.1).

அடுத்து, 1941-ஆம் ஆண்டில் வெளிவந்த பண்டிதமணியின் 'உரைநடைக் கோவை: இரண்டாம் பகுதி'யில் இருந்து ஒரு பகுதியை இங்கே சுட்டிக் காட்டலாம்.

"ஒருநாடு தனக்குரிய மொழியை ஆக்கமுற ஓம்பிப் பாதுகாத்தாலன்றித் தான் சிறந்த நிலை எய்துதல் அரிதாம். மொழி வளர்ச்சி கொண்டே அது வழங்கும் நாட்டின் நலத்தை யுணரலாம். எந்த நாடு தன் மொழிச் சுவையை உணர்தலிற் பின்னடைகின்றதோ, அது மற்றையெல்லா வளங்களானும் பிற்பட்டதாகும்" (உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, ப.55).

முத்தாய்ப்பாக, 1953-ஆம் ஆண்டில் திருவாசகத்தின் திருவெம்பாவைக்குப் பண்டிதமணி எழுதிய 'கதிர்மணி விளக்கம்' என்னும் பேருரையில் இருந்து எடுக்கப் பெற்ற ஒரு பகுதி வருமாறு:

"தமிழ்நாட்டில் பெண்களுக்கு ஐந்து முதல் ஏழாண்டு வரை பேதைப் பருவமென்றும், எட்டு முதல் பதினோராண்டு வரை பெதும்பைப் பருவமென்றும், பன்னிரண்டாம் ஆண்டு மங்கைப் பருவத் தொடக்கம் என்றும் தமிழ் நூலார் கூறுவர்.

ஐந்தாண்டுக்கு முற்பட்ட காலம் குழந்தைப் பருவமாதலின் அது பெண்மைப் பருவத்துள் வைத்துக் கணக்கிடப்படவில்லை. ஆகவே ஐந்து முதல் பன்னீராண்டுத் தொடக்கம் வரை கன்னிமைக்குரிய காலமென்பது தெளிவாம். தமிழ் அகப்பொருணூலாரும் பதினோராண்டும் பத்துத் திங்களும் கழிந்த பின்றை மணப்பருவம் கொண்டமை ஈண்டுக் கருதத்தக்கது. ஆகவே ஐந்து முதல் பன்னிரண்டு வரை ஆண்டுகள் எட்டாகும். இதனாற் கன்னியர் ஐந்தாண்டு முதல் பன்னீராண்டுத் தொடக்கம் வரை ஆண்டு வகையால் எண்வகைப் படுவரென்பது விளங்கும். ஈண்டுப் பாவை நோன்பு மேற்கொண்டவர் இவ்வெண்வகையினரே" (திருவெம்பாவை, கதிர்மணி விளக்கம், ப.8).

இம்மூன்று பகுதிகளையும் ஒப்பு நோக்கிப் பார்க்கும் எவருக்கும் எளிதில் புலனாகும் உண்மைகள் வருமாறு :

1. பண்டிதமணியின் நடையில் காலப்போக்கில் வடசொற் கலப்பு குறைந்துள்ளது.
2. பண்டிதமணி படிப்படியாகக் கடினமான சந்தி விகாரங்களைக் கையாண்டு எழுதும் முறையைக் குறைத்துக்கொண்டுள்ளார்.
3. காலப்போக்கில் பண்டிதமணியின் மொழி நடையில் - வாக்கிய அமைப்பில் - எளிமைப் பண்பு வந்து சேர்ந்துள்ளது.

'தீக்கை' என்பதற்கான வரைவிலக்கணத்தைப் பண்டிதமணி தம் நூல்களில் இரு இடங்களில் இரு வேறு வடிவில் தந்துள்ளார்.

1. *"தீக்ஷையாவது, ஆன்மாக்களிடத்துள்ள சிவசக்தியை வெளிப்பட வொட்டாது தடையாக மறைத்து நிற்கு மலசக்தியைக் கெடுத்துச் சிவத்துவத்தைக் கொடுப்பதாகிய சிவசக்திக் கிரியையாகும்" (நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம், ப.24).*
2. *"தீக்கையாவது, ஆன்மாக்களிடத்துள்ள சிவசக்தியை வெளிப்பட வொட்டாது தடையாக மறைத்து நிற்கும் மல சக்தியைக் கெடுத்துச் சிவத்துவத்தைக் கொடுப்பதாகிய சிவசத்திக் கிரியையாகும்" (உரைநடைக் கோவை : முதற்பகுதி, பக்.55-56).*

தீகைஷ - தீக்கை, சிவசக்தி - சிவசத்தி, மறைத்து நிற்கு - மறைத்து நிற்கும் - என்றாற் போல் காலப் போக்கில் பண்டித-மணியின் நடையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை உய்த்துணரலாம்.

சுவாமி விபுலாநந்தரின் பாராட்டு

சுவாமி விபுலாநந்தர் 'மண்ணியல் சிறுதேர்' என்னும் மொழிபெயர்ப்பு நூலுக்கு எழுதிய அணிந்துரையில் குறிப்பிடுவது போல் பண்டிதமணியின் உரைநடை 'தெள்ளிதின் இயன்ற சொற்களான் அமைந்து உள்ளுந்தோறும் இனிமை பயப்ப' தாகும். (ப.26.)

"மலரெனப் படுவது தாமரை மலரே
உலகெனப் படுவது புலவர துலகே
அணியெனப் படுவது கல்வியி ணையே
மணியெனப் படுவது பண்டித மணியே!"

3

தமிழ் நயத் தந்தை

"பண்டிதமணி இலக்கியச் சுவையில் நயங்காணும் புதிய உத்திகளைக் கண்டவர்கள். உ.வே.சா. அவர்களைப் பதிப்புத் தந்தை எனவும், மறைமலையடிகளாரை உரைநடைத் தந்தை எனவும் கூறுமாப் போலப் பண்டிதமணியாரை தமிழ் நயத் தந்தை என்று நாடு பாராட்டியது"

– வ.சுப. மாணிக்கம்*

பண்டிதமணி இலக்கியச் சுவையில் நயங்காண்பதையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்; பிறர் காண்பதற்கு அரிய இலக்கிய நயங்களை அவரால் காணவும், அங்ஙனம் தம் உண்மை அறிவால் கண்டுணர்ந்த நயங்களை எழுத்திலும் பேச்சிலும் எடுத்துரைக்கவும் முடிந்தது. "ஓரளவு யான் கற்ற கல்வி, பொருள் நோக்கம் பற்றியதன்று; வாழ்க்கையில் இன்பம் எய்துதல் குறித்ததேயாம்" (பண்டிதமணியின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சியும் பாராட்டும், ப.14) என அவரே ஒருமுறை தம் வாழ்வின் குறிக்கோளைத் தெளிவுபடுத்தினார் அவரைப் பொறுத்த வரையில், இன்பம் என்பது பொருட் பெருக்கத்தால் எய்துவது அன்று; ஐம்புலன்களால் அனுபவிக்கப்படும் இன்பம் மட்டும் அன்று. அதனினும் மேலாக, விழுமிய இலக்கியங்களை மனம் கலந்து - பொருள் உணர்ந்து - பயில்வதால் கிடைக்கும் உயரிய இன்பத்தையே அவர் என்றென்றும் நுகர விரும்பினார். இவ்வகையில், 'கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி' என்றாற் போல், 'நயங்காண் இலக்கியத் தும்பி'யாகப் பண்டிதமணி விளங்கினார்.

பேராசிரியர் இரா.மோகன் 'பண்டிதமணியின் நடை நயம்' என்னும் நூலில் குறிப்பிடுவது போல், "பண்டிதமணியின் எழுத்துக்களில் 'நயம்' என்ற சொல்லின் ஆட்சியைப் பரக்கக்

---

* *ஒப்பியல் நோக்கு, ப185.*

காணலாம். 'நயச்சுவை நனி சொட்டச் சொட்ட எழுதிய உரைவலவர்' அவர்! எழுத்துக்களில் மட்டுமன்றி, அவரது சொற்பொழிவுகள், வகுப்புகள் ஆகியவற்றிலும் நயங்கள் மலிந்து காணப்பட்டன" (ப. 55.)

பண்டிதமணியிடம் பயின்ற நன்மாணவரான வ.சுப.மாணிக்கம், "புலமைக்கதிராற் பொதிநயங் காட்டித் தலைமை யொளிபரப்புந் தந்தை" (மாமலர்கள், ப.12) எனப் பண்டிதமணியைப் போற்றிப் பாடுவதும் இங்கே மனங்கொளத்தக்கதாகும்.

இனி, பண்டிதமணியின் வாழ்விலும் வாக்கிலும் - பேச்சிலும் எழுத்திலும் - இலக்கிய நயங்கள் எங்ஙனம் பல்வேறு வகைகளில் வெளிப்பட்டுள்ளன எனக் காண்போம்.

1. வகுப்பறையில்

பண்டிதமணியிடம் அண்ணாமலைப் பல்கலைக்-கழகத்தில் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் கல்வி கற்கும் பேறு பெற்ற சிலருள் அ.சிதம்பரநாதனும் ஒருவர். 1934-35ஆம் ஆண்டுகளில் தமிழ் முதுகலை வகுப்பில் படித்து வருங்கால், பண்டிதமணியிடம் சிலப்பதிகாரம், அகநானூறு ஆகிய உயர்ந்த இலக்கியங்களைப் பாடம் கேட்கும் வாய்ப்புப் பெற்றார் அவர். "அவர்கள் (பண்டிதமணி) நடத்திய ஒவ்வொரு வகுப்பினையும் இன்று நினைத்தாலும் உள்ளத்தில் உவகையும் எழுச்சியும் உண்டாகின்றன. உரையில்லாப் பகுதியாகிய வஞ்சிக் காண்டத்திற்குத் தம்முடைய கூரிய மதியினால் அவர்கள் பொருள் கூறின திறத்தை யாங்கள் வியந்தோம். ஒப்புமைப் பகுதிகள் காட்டல், மேற்கோள் காட்டல், இலக்கண நயம் எடுத்துரைத்தல், நூனயம் நவிலுதல் ஆகிய வகையில் தம்மை ஒப்பாரும் மிக்காரும் இல்லை எனச் சொல்லுமாறு அவருடைய வகுப்புக்கள் நடைபெறும்" எனப் பண்டிதமணி மாணவர்களுக்கு வகுப்பு நடத்தும் பாங்கினைக் குறித்து நினைவுகூர்ந்துள்ளார் அ.சிதம்பரநாதன். மேலும் அவர், "பண்டிதமணியாரிடம் மாணவராய் இருந்த எவரும் வாழ்க்கையில் தாமாகப் பிறகு இலக்கியச் சுவை பெற முயலாமல் இருத்தல் அரியதொன்று என்றே கூறுதல் வேண்டும்" ('பண்டிதமணி கதிரேசன் செட்டியார்', சபைக் கட்டுரைகள், ப.70) என்றும் அக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

பண்டிதமணிபால் பயின்ற நன்மாணவர்கள் பலருள் குறிப்பிடத்தக்க பிறிதொருவர் வ.சுப.மாணிக்கம். அவரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பண்டிதமணியிடம் படித்தவர். சொல்லதிகாரச் சேனாவரையர் உரையைப் பண்டிதமணி நடத்த, அதைக் கேட்கும் வாய்ப்புப் பெற்றவர் அவர். அங்ஙனம் பாடம் நடத்தும்போது நடந்த ஒரு சுவையான நிகழ்ச்சியைப் பின்னாளில் ஒரு கட்டுரையில் நினைவுகூர்ந்து எழுதியுள்ளார் வ.சுப.மாணிக்கம்.

“சேனாவரையர் பாடம் நடத்தும்போது ஒரு சுவையான நிகழ்ச்சி. சேனாவரையர் மாணவன் வினாவுவது போலத் தாமே சில வினாக்களை எழுப்பிக் கொள்வர். நன்று சொன்னாய் என்று பாராட்டிவிட்டு விடை கூறப் புகுவர். தொல்காப்பியம் 92, 115, 120, 182 என்ற நூற்பாக்களில் இவ்வகைப்பட்ட உரைமுறையைக் காணலாம். பண்டிதமணி அவர்கள் சில சமயங்களில் அவ்வினாவை மாத்திரம் படித்து நிறுத்திவிடுவர். வரிவிடாது படித்தல் நன்மாணாக்கன் இலக்கணமாதலின், ‘நன்று சொன்னாய்’ என்று அடுத்த தொடரை நான் படிப்பேன். பார்வைக்குப் பண்டிதமணி அவர்கள் மாணவன் போல் வினவுவதாகவும், ‘நன்று சொன்னாய்’ என்று நான் சேனாவரையர் போலப் பாராட்டுவதாகவும் தோன்றும். இதனை உணர்ந்த மாணவர்கள் சிரித்தபோது பண்டிதமணி என்ன என்று கேட்டார்கள். அச்சத்தால் ஒருவரும் வாய் திறக்கவில்லை. உண்மையைச் சொல்லியிருந்தால் நயம் உணரும் பண்டிதமணி அவர்களும் சேர்ந்து சிரித்திருப்பார்கள்” (ஒப்பியல் நோக்கு, ப.184).

இங்ஙனம் இலக்கிய இலக்கணங்களிலே நயங்காண் முறையைப் புதுவதாகக் கண்டு, அதனைப் பல்லாற்றானும் இளைய தலைமுறையினருக்குப் பாங்குடன் கற்பித்த ஆசானாகப் பண்டிதமணி விளங்கினார்.

2. தனிப்பட்ட உரையாடலில்

தனிப்பட்ட முறையில் புலவர் பெருமக்களுடன் கூடி அளவளாவும் போதும் பண்டிதமணி அவ்வப்போது சிலேடை நயத்துடன் பேசுவது உண்டு; நகைச்சுவை உணர்வு ததும்ப உரையாடுவதும் உண்டு.

ஒருமுறை ஓர் இடத்திலே புலவர் பலர் புடை சூழ்ந்திருக்கப் பண்டிதமணி பேசிக் கொண்டிருந்தார். அப்போது பணியாள் ஒருவன் பண்டிதமணியிடம் ஒரு குவளையில் பால் கொண்டு வந்து கொடுத்தான். அதை வாங்கிக் கையில் வைத்திருந்தவாறு, சிறிது நேரம் உற்று நோக்கிய பண்டிதமணி, "பாற்கடலில் சீனிவாசன் பள்ளி கொண்டிருக்கின்றான்" என்றார். ஏதோ ஒரு பாடலுக்குப் பண்டிதமணி விளக்கம் கூறுகிறாரோ என்று ஒரு சிலர் நினைத்தனர். வேறு சிலர் அங்கே சுவரில் திருமாலின் படம் ஏதாவது இருக்குமோ என்று சுற்றுமுற்றும் தேடிப் பார்த்தனர். சீனியில் வாசம் செய்வோனாகிய எறும்புதான் பாலிலே செத்துக் கிடந்தது. அதைத்தான் பண்டிதமணி 'பாற்கடலில் சீனிவாசன் பள்ளி கொள்ளுகின்றான்' என்று குறிப்பிட்டார்.

பிறிதொரு நிகழ்ச்சி. பெண்கள் கூட்டம் ஒன்றிற்குப் பண்டிதமணி தலைமை தாங்கினார். கூடியிருந்த பெண்கள் வழக்கம் போலத் தங்களுக்குள்ளே பேசிக் கொண்டே இருந்தனர். கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் மேடைக்கு வந்து ஒலிபெருக்கியில், "அமைதியாக இருக்க வேண்டும், அமைதியாக இருக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள். "அவர்கள் பெண் மணிகள் அல்லவா, ஒலித்துக் கொண்டுதானே இருக்கும்?" என்று அப்போது பண்டிதமணி நகைத்தவாறே சொன்னாராம்.

இப்படி நகைச்சுவையான நிகழ்ச்சிகள் பண்டிதமணியின் வாழ்க்கையில் நூற்றுக்கணக்கில் உண்டு.

சொல் விளையாட்டிலும் வல்லவராக விளங்கினார் பண்டிதமணி. ஒரு முறை படிகள் சரியாக அமைந்திராத ஒரு கோயிலில் பண்டிதமணி, நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டாருடன் தரிசனத்திற்குப் போனார். "படியில்லை, படியில்லை" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே வந்தாராம் நாட்டார். ஒரு கட்டத்தில் நாட்டாரை நோக்கிப் பண்டிதமணி, "அப்படிச் சொல்லாதீர்கள்; எல்லோருக்கும் படியளப்பவன் ஆண்டவன் அல்லவா?" என்று சிரித்தபடியே சொன்னாராம்.

3. சொற்பொழிவுகளில்

தலைவர் என்ற முறையில் பல்வேறு பேரவைகளில் நிகழ்த்திய சொற்பொழிவுகள், திருச்சிராப்பள்ளி வானொலி-யில் ஆற்றிய உரைகள் என எவ்வடிவில் உரையாற்றினாலும் சரி - எந்த அரங்கில் பேசினாலும் சரி - பண்டிதமணி இலக்கியச் சுவைக்கும் நயத்திற்கும் முதன்மை தரத் தவறுவது இல்லை. 'எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும், மன்னிய சீர் சங்கரன்தாள் மறவாமை நன்றே' என்றாற் போல், எந்த நிலையில் நின்று சொற்பொழிவாற்றினாலும், எந்த அரங்கில் பங்கு கொண்டு உரை நிகழ்த்தினாலும் இலக்கியச் சுவையும் நயமும் விளங்கப் பேசுவது என்பது பண்டிதமணியிடம் காணப் பெற்ற தனிப்பெரும் பண்பாகும். இதனை மெய்ப்பிக்கும் வகையில் பண்டிதமணியின் சொற்பொழிவு-களில் இடம்பெற்றுள்ள ஒரு சில நயங்களைக் குறித்து ஈண்டுக் காண்போம்.

பண்டிதமணி திருச்சிராப்பள்ளி வானொலியில் ஆற்றிய உரை 'நம் பண்டைய நீதி நூலாசிரியர்' என்பது. அதில் அவர் பண்டைய நீதி நூலான நாலடியாரில் இடம்பெற்றுள்ள சில நயமான கருத்துக்களை எடுத்துக்காட்டியுள்ளார். படிப்பவர் சிந்தனையை ஈர்க்கவல்ல அந்நீதிக் கருத்துக்கள் வருமாறு :

"நாலடியார் என்னும் நூல் கற்பார் மனத்தைக் கவரவல்லது. 'ஆலும் வேலும் பல்லிற்குறுதி, நாலு மிரண்டுஞ் சொல்லிற் குறுதி' என்னும் பழமொழியில் நாலென்பது நாலடியாரையும் இரண்டு என்பது ஈரடியானமைந்த திருக்குறளையுங் குறிப்பனவாம். ஒருவன் சிற்சில செயல்களிற் செவிடனாய்க் குருடனாய் ஊமையாயிருத்தல் வேண்டுமென நாலடி கூறுகின்றது. இம்முறை வியக்கத்தக்கது. இதன் கருத்து, பிறர் இரகசியங்களைக் கேட்பதிற் செவிடனாகவும், பிறர் மனைவியரைக் காம நோக்கமாகக் காண்பதிற் குருடனாகவும், பிறரைப் பற்றிக் காணாவிடத்துப் புறங்கூறுவதில் ஊமையாகவும் இருத்தல் வேண்டும் என்பதாம். இங்ஙனம் சாதுரியமாகக் கூறுமியல்பு இந்நூலிற் பலவிடங்களிற் காணலாம். ஒருவன் மற்றொருவன்பால் இல்லாத குணங்களைப் புகழ்தலினும் அவனை வைதல் நல்லதென்கிறார். கடையாயார், இடையாயார், தலையாயார் ஆகிய இம்முத்திறத்தாரும் அஞ்சுதற்குரியன யாவை என்னும்

வினாவை எழுப்பி விடையிறுக்குமுகமாக முறையே கடையாயார் பசிக்கு அஞ்சுவரெனவும், இடையாயார் துன்பத்திற்கு அஞ்சுவரெனவும், தலையாயார் பழிச் சொல்லிற்கு அஞ்சுவரெனவும் கூறுவர். குலப் பெருமை பேசுவோர்க்கு 'நல்ல குலமென்றும் தீய குலமென்றுஞ் சொல்லள வல்லாற் பொருளில்லை' என்றும் 'தவங்கல்வி ஆள்வினை என்றிவற்றான் ஆகும் குலம்' என்றுங் கூறுவர். இன்னோரன்ன சிறந்த நீதிமணிகள் பல ஒளி செய்தலை இந்நூலாகிய பொற்பேழையிற் பரக்கக் காணலாம்" (உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, இலக்கியக் கட்டுரைகள், பக்93-94).

'கம்பன் கவிநலம்' என்பது 16.4.1944-இல் நிகழ்ந்த சென்னை கம்பர் மாநாட்டுத் தலைமை முன்னுரை. "இக்காப்பியச் செய்யுட்களைப் படிக்குங்கால் நாவிலும் உள்ளத்திலும் தேனூற்றுப் போல இனிமைச் சுவையே விஞ்சி நிற்கின்றது" (மணிமலர்த் திரட்டு, ப.33) எனத் தம் உரையின் தொடக்கத்தில் குறிப்பிடும் பண்டிதமணி, தம் கருத்திற்குச் சான்றாகப் பல கம்பராமாயணச் செய்யுட்களையும் காட்டுகின்றார். சான்றாக,

"வண்மை இல்லையோர் வறுமை இன்மையால்
திண்மை இல்லைநேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லைபொய் உரைஇ லாமையால்
வெண்மை இல்லைபல் கேள்வி மேவலால்"

என்னும் கம்பராமாயணப் பாடலில் எளிமை, இனிமை, ஆழம் உடைமை என்னும் மூன்று குணங்களும் பொருந்தி இருக்கும் பாங்கினைப் பண்டிதமணி எங்ஙனம் புலப்படுத்தியுள்ளார் எனக் காண்போம்.

"தொல்காப்பியம் மெய்ப்பாட்டியலில் பெருமிதச் சுவைக்கு நிலைக்களமாக நான்கு பொருள்கள் கூறப்பட்டன. அவை,

கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே (நூற்பா 9)

என்பதனாற் போந்த கல்வி முதலிய நான்குமாம். பெருமிதம் என்பது வீரமாகும். கோசல நாட்டில் இருப்போர் பெருமிதமுடையோர் என்றும், அதற்குரிய நிலைக்களமாக

உள்ள கல்வி முதலியன அவர்பால் நிறைந்திருக்கின்றன என்றும் புலப்படுத்தப் புக்க கம்பநாடர், அத் தொல்காப்பியச் சூத்திரத்தை நினைவில் இருத்திக் கொண்டு நான்கு அடியிலும் கல்வி முதலிய நான்கனையும் குறிப்பிடுவாராயினர். வறுமையின்மையால் வண்மையில்லை என்றார்; எனவே கொடைக் குணம் இயல்பாகவே நிரம்பப் பெற்றவர் என்பது புலனாம். இதனாற் கொடையும், நேர் பகைவர் இல்லாமையால் திண்மை இல்லை என்னும் இதனால் தறுகணும்,பொய்யுரை இல்லாமையால் உண்மை இல்லை என்னும் இதனால் புகழும், பல்கேள்வி பொருந்தியமையால் அறியாமை இல்லை என்னும் இதனாற் கல்வியும் புலனாதல் அறிக.

இவற்றுள், இசைமையாகிய புகழை வெளிப்படக் காண்கின்றிலேம் எனின், பொய்யாமை கூறவே புகழ் பெறப்பட்டதாம். 'பொய்யாமை யன்ன புகழில்லை' எனப் பொது மறையும், அதற்கு இலக்காக 'பரவு மெய்யினுக்கு உயிரளித்து உறுபுகழ் படைத்தோன்' எனக் கம்ப ராமா-யணமும் கூறுமாற்றான் உணரலாம். தசரதன் மெய்ம்மையை நிலைநிறுத்தற் பொருட்டு உயிரைக் கொடுத்துப் புகழை நிலைநிறுத்தினான் என்னும் இக்கருத்துத் திருக்குறளில் தோய்ந்து கண்டதாம். இங்ஙனம், பெருமிதத்தைப் புலப்படுத்தும் உட்கோள் உடையராய், அது தோன்றுதற்குரிய நிலைக்களப் பொருள்களை இப்பாடலாற் புலப்படுத்திய கம்ப நாடர் நுண்ணறிவு பெரிதும் போற்றத்தக்கதொன்று. இஃதே ஆழமுடைமை யென்பதாகும்" (பக்.35-36.)

இங்ஙனம் தொல்காப்பிய நெறி நின்று, திருக்குறளின் துணையும் கொண்டு கம்பராமாயணப் பாடலின் பொருள் நயத்தினைத் திட்பமாகவும் நுட்பமாகவும் புலப்படுத்தி-யுள்ளார் பண்டிதமணி. அவரது நோக்கில், "இத்துணை அரிய நயங்கள் பல அமைந்த சுவை ஊற்றாகிய கம்பராமாயணத்தை ஊன்றிப்படித்து இன்புறுதலே சிறந்த முறையாகும்" (ப.44.)

உரையின் முடிவில் முத்தாய்ப்பாகப் பண்டிதமணி புனைந்துள்ள அழகிய வெண்பா வருமாறு :

"ஆன்றதமிழ்க் கம்பன் அரிய இலக்கியத்தை
ஊன்றிப் பயில உளமினிக்கும் — தோன்றுசுவை
ஊற்றாகுஞ் செஞ்சொல் உரைக்குங்கால் நாவினிக்கும்
ஏற்ற செவியினிக்கு மே" **(ப.45)**

"பாட்டில் தம்மை மறந்து மனம் ஒருமுகப்பட்டுச் சுவையைத் துய்த்து அமைதி பெறுவாரைக் கடவுட் காட்சி கைவரப் பெற்ற மெய்யுணர்வாளரொடு ஒப்ப வைத்து எண்ணுகின்றது வடமொழி அணிநூல். அத்தகைய உணர்வின் வல்லவரே நம் பண்டிதமணியவர்கள். பாட்டில் வருஞ் சொற்களைச் சுவையுலகாக மாற்றி வைக்கும் ரசமணியாவார் இவர்" (பண்டிதமணியின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சியும் பாராட்டும், ப.12) என்று தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் பண்டிதமணியின் சுவை நலனைப் பாராட்டி இருப்பது இங்கே நினைவுகூரத்தக்கதாகும்.

4. சமயக் கட்டுரைகளில்

"வேட்கை முயற்சியும் தவப் பயனாம் ஆகூழ் வலியும் ஒருங்கு கைவரப் பெற்றாலன்றி, மதிவலி மிக்க முதுபுலவனிடத்தினின்றும் தோன்றிய பாடல் நங்கையின் பரிசுணர்தல் அரிதாகும்" (உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, இலக்கியக் கட்டுரைகள், ப.46) என்பது பண்டிதமணியின் நயக் கொள்கை. முதுபெரும் புலவர்களின் பாடல்களில் ஏனையோர் அறிதற்கு அரிய நுண்ணிய நயங்களையும் நுண்பொருள்களையும் நூற்றுக்கணக்கில் பண்டிதமணி எடுத்துக்காட்டுவதற்குக் காரணங்களாக அமைந்தவை அவரிடம் குடிகொண்டிருந்த வேட்கை முயற்சியும் தவப்பயனாம் ஆகூழ் வலியுமேயாம். "எளிய பொருள்களிலும் விழுமிய சுவைத்திறங்கள் கண்டு அவற்றை உலகுக்கு ஒளியுறப் பயன்படுத்த வல்ல இலக்கியச் சுவையாளர்களே, நாட்டுக்கு நிலையாக உதவி செய்ய வல்லபெருமக்களாகின்றனராதலின், அவ்விலக்கிய நலமே ஓர் வாழ்க்கையுருவாக அமைந்துள்ள தாங்கள் இத்தமிழகத்தின் இதயமேயாகின்றீர்களென்பது தானே போதரும்" (பண்டிதமணியின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சியும் பாராட்டும், ப.47) என்பது அறுபதாம் ஆண்டுநிறைவு விழா நிகழ்ச்சியில் இளவழகனார் பண்டிதமணிக்குச் சூட்டிய புகழாரம் ஆகும். இப்புகழ்மொழிக்கு அரணாகப் பண்டிதமணியின் சமயக் கட்டுரைகளில் இருந்து அவரது முத்திரை பதிந்துள்ள இரு நயங்களைக் காண்போம்.

பண்டிதமணியின் 'அன்பின் திருவுரு' என்னும் கட்டுரை கண்ணப்ப நாயனார் புராணத்திற்கு உரைநடையில் அமைந்த

நல்லதொரு விளக்கமாகத் திகழ்வது. 'பொன்மலி பாடலி' என்பது போல் 'நயமலி கட்டுரை' என்னும் சிறப்பிற்குரியது அது. கண்ணப்பரை, அன்பின் வடிவமாகப் பல இடங்களில் குறித்துள்ளார் சேக்கிழார். 'அன்பு பிழம்பாய்த் திரிவார்' என்றும், 'பொருவில் அன்புருவமானார்' என்றும், 'அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு' என்றும் பல இடங்களிலும் கண்ணப்பர் இறைவன் மீது கொண்டிருந்த பேரன்பைக் குறிப்பிடுகிறார் சேக்கிழார். ஈண்டு, கண்ணப்பர் வரலாற்றில், பண்டிதமணி காணும் நுண்ணிய நயம் ஒன்றினைக் காண்போம். கண்ணப்பரின் அளவிலாத அன்பைச் சிவகோசரியார்க்கும், உலகத்தவர்க்கும் உணர்த்த எண்ணிய இறைவன், தன் வலக்கண்ணில் குருதி ஒழுக்குகிறான். அது கண்ட கண்ணப்பர் வருந்தித் துடிதுடித்துப் பல வகையான மருந்துகளைக் கொணர்ந்து கண்ணில் பிழிந்து பார்க்கிறார்; அவற்றால் குருதி ஒழுக்கு நின்றபாடில்லை. அப்போது 'ஊனுக்கு ஊனிடல்' என்னும் பழமொழி அவரது நினைவில் தோன்ற மகிழ்ந்து, அம்பினால் தம் வலக்கண்ணை இடந்து இறைவன் கண்ணில் அப்புகிறார். குருதி நின்றது கண்டு பேருவகை அடைகிறார்; மீண்டும், இறைவனது இடக்கண்ணிலும் குருதி வரத் தொடங்குகிறது. இதைக் கண்ட கண்ணப்பர் முதலில் சிறிது வருந்தினாலும் பின்பு தேறித் தம் இடக்கண்ணையும் அவ்வாறு பெயர்க்கத் தொடங்குகிறார். இவ்வருஞ்செயலைத் தாங்காது இறைவன்தம் திருக்கையால் அவர் கையைப்பிடித்துக் கொண்டு, 'நில்லு கண்ணப்ப! நில்லு க்ண்ணப்ப! என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப!' என்று மூன்று முறை கூறித் தடுக்கிறான்; 'ஒப்புயர்வற்ற பேரன்ப! என் வலப்பக்கத்தே நிற்க!' என்று அவருக்குத் திருவருள் புரிகிறான். இங்கே இறைவன் கண்ணப்பரிடம் மும்முறை 'நிற்க' எனக் கூறியதன் காரணத்தைப் பண்டிதமணி உலகியல் நெறி நின்று இனிது விளக்கியுள்ளார். அவர் கூறும் அரிய விளக்கம் வருமாறு :

"அருளாள ரொருவர் மற்றோரன்பருக்கு உதவி புரிய முற்படுங்கால் அதனைப் பெறுபவர் ஓரளவிற் போதியதென்று தடுத்தாலும், ஏற்றுக் கொள்ளாது மேலும் செய்தலை உலகியலிற் காண்கின்றோம். அங்ஙனமே, இங்கே நிற்கவென்று இறைவன் ஒருமுறை கூறியொழியின் அன்பின் மிகுதியால் தம் ஆணையையுங் கடந்து மேற்கொண்ட செயலைச் செய்து

முடிப்பர் என்னுங் கருத்தால் மும்முறை கூறியருளினர். அவ்வருண்மொழிப்படி, இறைவன் திருவடி நீழலில் இரண்டற்ற நிலையெய்திப் பேரின்பம் துய்ப்பாராயினர்." (உரைநடைக் கோவை : முதற்பகுதி, சமயக் கட்டுரைகள், ப.177).

நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த ஞானசம்பந்தரைப் பற்றிய கட்டுரை 'ஞானத்தின் திருவுரு'.

"ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேன்நக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்"

என்பது சேக்கிழார் திருஞானசம்பந்தரைக் குறித்துப் பாடியுள்ள அழகிய பாடல் ஆகும். இதில் இரண்டாம் அடியில் இடம் பெற்றுள்ள 'வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தை' என்னும் அடிக்குப் பண்டிதமணி கூறியுள்ள அரிய நயம் வருமாறு :

"சம்பந்தப் பெருமான் றிருமேனியின் ஒளியும் மழவிளங்குழவிப் பருவமும் பொலிந்து திகழ்தலைப் புலப்படுத்தற்கே, 'வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தை' என்றார். இஃதோரணியாகும். மதி வானத்தினூர்ந்தியங்குவது, இஞ்ஞானமதி மண்ணுலகிற்றிகழ்ந்தின்புறுத்துவது. ஈண்டு வளர்மதியென வினைத்தொகையாகக் கூறியதன் நுண்பொருள் ஆராயத்தக்கது. வளர்மதிக்குப் பதினாறு கலைகள் நிரம்பியதும் மேல் வளர்ச்சியின்று. அதுபோலச் சம்பந்தப் பெருமான் திருவுடல் பதினாறியாண்டு வளர்ச்சியுற்றுப் பின் பேரொளிப் பிழம்பாகிய இறை வடிவில் மறைந்தது; இவ்வுண்மை புலப்படுத்தற்கே 'வளர்மதி'யென்று கூறினார் போலும்." (உரைநடைக் கோவை : முதற்பகுதி, சமயக் கட்டுரைகள், ப.136).

'வளர்மதி' என்னும் வினைத்தொகைக்கு, ஞானசம்பந்தப் பெருமானின் வரலாற்றோடு இயைபுபடுத்திப் பண்டிதமணி கூறியுள்ள நுண்பொருள் நயம் நினைந்து நினைந்து மகிழ்தற்கும் நெகிழ்தற்கும் உரிய ஒன்று ஆகும்.

பண்டிதமணி இங்ஙனம் நுண்ணிய பல நயங்களைக் காண்பதற்கு அடிப்படையாக இருந்தது அவரிடம் குடிகொண்டிருந்த பாடல்களுடன் இரண்டறக் கலக்கும்

இயல்பே ஆகும். "பண்டிதமணியின் புலமையில் பல திறச் சிறப்புக்கள் உள்ளன. அவைகளுள் குறிக்கத்தக்கது ஒன்று. அது பாட்டின்ப நுகர்ச்சி" (பண்டிதமணியின் அறுபதாம் ஆண்டு நிறைவுவிழா நிகழ்ச்சியும் பாராட்டும், ப.26) எனத் தமிழ்த் தென்றல் திரு.வி.க.வும் இவ்வியல்பினைச் சுட்டுவர்.

5. இலக்கியக் கட்டுரைகளில்

துறையூரில் 6.8.1932-இல் கூடிய திருச்சிராப்பள்ளி - தஞ்சை மாகாணத் தமிழ்ப் புலவர் மாநாட்டில் நிகழ்த்திய சிறப்புரையில் பண்டிதமணி புலமை வாழ்க்கையின் குறிக்கோள் பற்றிக் குறிப்பிட்டது வருமாறு :

"புலமையின் குறிக்கோள் உலகியற் பொருளளவில் இருப்பின் அது சிறுமையெய்தி மாசுடையதாகும். அறிவை, ஒளி வலியுடைதாக்கி அகலமுறச் செய்து, அவ்வகன்ற ஒளி விளக்கத்தின் கண்ணே முன்னர்க் காணப்படாதனவும் உலப்பிலா இன்ப விளைவிற்கேற்றனவுமாகிய அரிய பல நுண்பொருள்களை அகக் கண்ணாற் கண்டு இன்புறுதலாகிய வாழ்க்கையே புலமை வாழ்க்கையாகும்" (உரைநடைக் கோவை: இரண்டாம் பகுதி, இலக்கியக் கட்டுரைகள், பக்.43-44). இத்தகு பீடும் பெருமிதமும் வாய்ந்த புலமை வாழ்க்கையை நடத்திய பண்டிதமணி தம் கூரிய அறிவுத் திறத்தாலும் சீரிய அகக்கண்ணாலும் உயர்நிலைப் பாவலர் மயர்வற ஆக்கிய விழுப்பொருள் நிறைந்த செய்யுட்களில் கண்டுணர்ந்த நயங்களும் நுண்பொருள்களும் மிகப் பலவாகும். இவை முன்னர் யாராலும் காணப்படாதவை; அருமையும் அழகும் வாய்ந்தவை; உலப்பிலா இன்ப விளைவிற்கு ஏற்றவை. இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க இரு நயங்களை ஈண்டுக் காண்போம்.

"யாரும் இல்லைத் தானே கள்வன்;
தான்அது பொய்ப்பின் யான்எவன் செய்கோ?
தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே" (குறுந்தொகை, 25)

என்பது புகழ்பெற்ற ஒரு குறுந்தொகைப் பாடல். தலைவியை வரைந்து கொள்ளாமல் களவொழுக்கத்தை நீட்டித்துச் செல்லும் தலைவனின் இயல்பினைக் குறித்துத் தலைவி தோழியிடம் வருந்திக் கூறுவதாக அமைந்தது இப்பாடல்.

"தோழி, தலைவன் என்னைக் களவில் மணந்த காலத்தில் சான்றாவார் வேறு ஒருவரும் இலர்; தலைவன் ஒருவனே இருந்தான். அவனே தான் கூறிய சூளுறவினின்றும் தப்பி ஒழுகுவானாயின் நான் யாது செய்ய வல்லேன்? அவ்விடத்து அவ்வமயம் ஒரு நாரை மாத்திரம் இருந்தது; அதுவும் ஓடும் நீரில் தான் உண்ணும் பொருட்டு ஆரல் மீனின் வரவை எதிர்பார்த்து நின்றதாகலின், எம் நிகழ்ச்சியைக் கண்ணுற்றிராது" என்பது இப்பாடல் உணர்த்தும் கருத்து.

"என் நலத்தைப் பிறரறியாவாறு கவர்ந்த கள்வன் தன் வாய்மொழியின் படி செய்திலன்; 'நீ இங்ஙனம் கூறினையன்றே; அதனை நிறைவேற்றாதது என்?' என்று தொடுத்து வினாவுதற்கு ஏற்ற சான்றும் இல்லை; அங்கே இருந்தது கரி போதற்குத் தகாத நாரையொன்றே; அஃதும் ஆரல் மீனை நோக்கிய கருத்தினதாதலின் அவன் சூளுறவைக் கேட்டிராது. இதற்கு என் செய்வேனென்பது தலைவியின் கருத்தாகக் கொள்க" என இப்பாடலுக்கு உரை விளக்கம் வரைவர் டாக்டர் உ.வே.சாமிநாதையர் (குறுந்தொகை மூலமும் உரையும், ப.61). ஆயின் இப்பாடலுக்குப் பண்டிதமணி கூறும் விளக்கம் இதனின்றும் வேறுபட்டது; வேறுபட்டது மட்டுமன்றி, மேம்பட்டது என்பதும் பொருந்துவதேயாகும். நயமான அவ்விளக்கம் வருமாறு :

"தோழியை நோக்கி, 'தலைவன் என்னைக் களவில் மணந்த காலத்தில் ஒரு நாரை மாத்திரம் இருந்தது. அதுவும் ஓடும் நீரில் தானுண்ணும் பொருட்டு ஆரல் மீனின் வரவை எதிர்பார்த்து நின்றதாகலின், எம் நிகழ்ச்சியைக் கண்ணுற்றிராது; காணாததொன்றைப் பற்றிச் சான்றாதற்குத் தமிழ் நிலத்துப் புள்ளும் ஒருப்படாது, வாய்மை நெறியொழுகும் இயல்பின தாகலின்' என்று தலைவி கூறினாளாம்" (உரைநடைக் கோவை: இரண்டாம் பகுதி, இலக்கியக் கட்டுரைகள், ப.110). 'தமிழ் நிலத்துப் புள்ளும் வாய்மை நெறி ஒழுகும் இயல்பினது, ஆதலின் காணாத ஒன்றைப் பற்றிச் சான்றாதற்கு ஒருப்படாது' என்னும் பண்டிதமணியின் விளக்கம் வியந்து போற்றுவதற்கு உரியதாகும்; அவரது நுண்மாண் நுழைபுலத்தைப் புலப்படுத்துவதுமாகும்.

இதே போல் பண்டிதமணியின் 'கம்பன் கவி நலம்' என்னும் கட்டுரையிலும் அரிய ஒப்பியல் நயம் ஒன்றைக்

காண்கிறோம். யுத்த காண்டத்தின் இறுதிக் காட்சி; இலங்கைப் போர் முடிவுற்றது. சீதையின் அக்கினிப் பிரவேசமும் முடிந்தது. இந்நிலையில், விண்ணுலகில் தெய்வ நிலை பெற்றிருந்த தசரதன், இராமன் முன்னால் தோன்றி, 'உனக்குப் பொருந்தியதொரு வரம் கேட்க' என்று கூறுகிறான். அப்பொழுது இராமன் கேட்கும் வரம், நயத்தக்க நாகரிகம் வாய்ந்தது; தாயின் மீதும் தம்பியின் மீதும் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பை வெளிப்படுத்துவது; அறமுறை திறம்பாதது. என்ன அவ்வரம்? கைகேயி கேட்ட வரம் காரணமாக, இராமன் காட்டிற்குச் செல்ல வேண்டிய சூழல் நேர்ந்தது; அக்கொடுமையை நினைந்து வருந்திய தசரதன், தன் வாழ்வின் இறுதிக் கட்டத்தில், 'கைகேயி என் மனைவியும் அல்லள்; பரதன் என் மகனும் ஆகான்; தன் இறுதிக் காரியங்களையும் அவன் செய்யக்கூடாது' என்று கட்டளையிட்டான். ஆதலின் இந்நிலையை மாற்ற எண்ணிய இராமன், 'தீயவள் என்று தங்களால் விலக்கப்பட்ட என் தெய்வமும், அத்தெய்வத்தின் மகனும்' என்று கைகேயியையும் பரதனையும் குறிப்பிட்டு, 'அவ்விருவரும் முறையே எனக்குத் தாயும் தம்பியுமாம் வரம் தர வேண்டும்' என நாகரிகமாகக் கேட்கிறான். இராமனின் இக்கூற்றைத் தன்னகத்தே கொண்ட கம்ப ராமாயணப் பாடல் வருமாறு :

"ஆயினும் 'உனக்கு அமைந்ததொன்று உரை' என அழகன்
'தீயள் என்றுநீ துறந்தஎன் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியு மாம்வரந் தருக' எனத் தாழ்ந்தான்
வாய்தி றந்துஎழுந்து ஆர்த்தன உயிரெலாம் வழுத்தி."

இங்கே வியாச முனிவர் இயற்றிய மகாபாரதத்தில் வரும் சகுந்தலையின் வரலாற்றுப் பகுதி ஒன்றை ஒப்பிட்டுக் காட்டியுள்ளார் பண்டிதமணி. அப்பகுதி வருமாறு :

"சகுந்தலை தன் இளம்புதல்வன் பரதனை அழைத்துக் கொண்டு தன் கணவனாகிய துஷியந்தனுடைய அரசவைக்குச் சென்றாளாக, ஒரு முனிவர் சாபத்தால் சகுந்தலையை இன்னளென்று அறியாதவனாய் அரசன், 'நீ யார்? இங்கு வருதற்குரிய காரணம் என்ன?' என்று வினவச் சகுந்தலை திகைக்கின்றாள். அவளை இன்னள் என்று அறிவிக்க யாரும் இல்லை. உடன் வந்த கண்ணுவ முனிவருடைய மாணவர்கள் இடையே விட்டுச் சென்றுவிட்டனர். இந்நிலையிற் சகுந்தலை

தானே தன்னை அறிவித்துக் கொள்ள வேண்டியவளாயினாள். எவ்வாறு அறிவிப்பது? 'என்னைக் கண்ணுவ முனிவர் ஆசிரமத்தில் காந்தருவ முறையில் மணந்தமையால் யான் தங்கள் மனைவியாவேன்' என்று கூற வேண்டும். இது மிக அநாகரிகமான அறிவிப்பாகும். 'நின் பெண்டாட்டி யான்' என்று ஓர் நன்மகள் எங்ஙனம் கூறுவள்! ஒன்றும் பேசாது நின்றால் அரசன் விலக்கவும் கூடும். இத்தகைய இடர்ப்பாடான நிலையில் சகுந்தலை தன்னை அறிவிப்பதற்கு ஒரு முறையைக் கண்டுபிடித்தாள். அதுதான் கவியின் பெருமைக்கு எல்லையாக நின்று வியப்பளிப்பது.

சகுந்தலை அவ்வமயம் தன்னை இன்னள் என அறிவிக்கக் கருதித் தன் மகனை நோக்கி, 'குழந்தாய், நின் தந்தைக்கு வணக்கம் செய்' என்றாள். உடனே அப்புதல்வன், 'தந்தையே வணக்கம்' என்றான். குழந்தை என்று அவள் அழைத்தமையால் அவளுக்கு மகன் என்பதும், அரசனைச் சுட்டி, 'நின் தந்தைக்கு' என்று கூறியதால் அரசனுக்கு அவள் மனைவி என்பதும் பெறப்பட்டதோடு தந்தைக்கு வணக்கஞ் செய்யும்படி தாய் கட்டளையிடும் அறமும் புலப்படுத்தப்பட்டபடியாம். இத்துணை நாகரிக முறையில் பேச வைத்த பெருமை வியாச முனிவர்க்குத் தக்கதே." (மணிமலர்த் திரட்டு, பக்.43-44).

6. திருவாசக உரையில்

ஒரு சிறந்த கவிஞரின் உள்ளத்தை மற்றொரு கவிஞரால் தான் உணர முடியும். அந்நிலையில் திருவாசகப் பாடல்களில் உள்ளந் தோய்ந்து பொருள் நயங்களில் ஈடுபட்ட இராமலிங்க அடிகள்,

"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

என்று நெஞ்சுருகிப் பாடியுள்ளார். இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'நான் கலந்து பாடுங்கால்' என்னும் தொடர் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது. பண்டிதமணி இத்தொடரினைக் கொண்டு கவிதை கற்கும் நெறியை உணர்த்தியுள்ளார். "ஒரு பெரியார் பாடலைப் படிப்பவர்கள் உள்ளமும், அப்பாடற் பொருளும் அத்துவித நிலையடைதல் வேண்டும். அங்ஙனம் ஒன்றுபடுதலையே 'நான் கலந்து பாடுங்கால்' என்றனர்"

(உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, இலக்கியக் கட்டுரைகள், ப.69) என்பது அவர் தரும் அரிய விளக்கம் ஆகும்.

திருவாசகப் பாடல்களுடன் உள்ளம் ஒன்றுபட்டு - அத்துவித நிலை அடைந்து - பண்டிதமணி எழுதிய உரையே 'கதிர்மணி விளக்கம்' ஆகும். பண்டிதமணியின் உரை திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை என்ற மூன்று பகுதிகளுக்கு முழுமையாக வெளிவந்துள்ளது. பண்டிதமணி 'கதிர்மணி விளக்கப் பேருரை' எழுதத் தொடங்கிய காலம் அவர்தம் 65-ஆம் முதுமை ஆண்டில் ஆகும். 73-ஆம் வயதில் அவர் இறையடிநிழல் எய்தினார். எனவே மேற்சுட்டிய மூன்று பகுதிகளுக்கும் ஏழாண்டு அளவில் அரிதின் முயன்று உரை வரைந்துள்ளார் பண்டிதமணி.

"இருபதாம் நூற்றாண்டில் எழுந்த உரை வரலாற்றில் என் ஆசிரியர் மகாமகோபாத்தியாய பண்டிதமணி கதிரேசனார் எழுதிய 'திருவாசகக் கதிர்மணி விளக்கம்' என்ற பேருரை செந்தமிழுக்கு உறுதியான செல்வமாகும். நுண்மையால் ஒண்மையால் நடை நயத்தால் நடைத் தூய்மையால் உரைநடையாளர்க்கெல்லாம் இவ்வுரை வழிகாட்டி. மாதவச் சிவஞான முனிவர்க்குப் பின்னர், சைவ மெய்யியலை நன்னடையில் புலப்படுத்தும் சொல்வளம் மிக்க பேருரை இது" (இலக்கியச் சாறு, ப.85) எனப் பண்டிதமணியின் திருவாசக உரைக்குப் புகழாரம் சூட்டுவர் பேராசிரியர் வ.சுப.மாணிக்கம்.

இனி, பண்டிதமணியின் திருவாசக உரையில் இலக்கிய நயம் சிறந்து விளங்கும் இரு இடங்களை ஈண்டுக் காண்போம்.

திருச்சதகப் பாடல் ஒன்றில் (பா.55) மாணிக்கவாசகர், இந்நிலவுலகத்து வந்து தம்மை ஆட்கொண்டு அருளிய இறைவனை, "மான்நேர் நோக்கி உமையாள் பங்கா வந்து இங்கு ஆட்கொண்ட தேனே அமுதே கரும்பின் தெளிவே" என்று போற்றுகின்றார். இப்பாடலுக்கு உரை எழுதும்போது, 'தேன், அமுது, கரும்பு என்னும் இம்மூன்று இனிமைப் பொருள்களையும் ஆசிரியர் இம்முறையில் - வரிசையில் - கூறியிருப்பதற்கு ஒரு காரணம் இருத்தல் வேண்டும். அக்காரணம் என்ன?' என ஓர் வினாவைத் தம்முள் எழுப்பிக் கொண்டு விளக்கம் அளிக்க முற்படுகின்றார் பண்டிதமணி. அவர் தரும் நயமான விளக்கம் வருமாறு :

"மூன்றனுள்ளும் தேன், வடிகட்டிய அளவில் எடுக்கப்படுவது, நாவிற் பட்டதும் மிக்க இனிமை செய்வது, பால், காய்ச்சப்பட்ட பின் ஓர் அளவு இனிமை பயப்பது. (அமுது என்பதற்குத் தேவர் உணவாகிய அமிர்தம் எனவும், பால் எனவும் பொருள் கொள்ளலாம் என்பது பண்டிதமணியின் கருத்து). கருப்பஞ்சாறு ஆலையில் இட்டுப் பிழிந்து எடுக்கப்பட்டு, நன்றாகக் காய்ச்சப்பட்ட பின் கட்டியாகி இனிமை செய்வது. இம்மூன்றனுள்ளும், தேன், புழுக்களின் எச்சில் மயமாகவும், பால் ஊனுடலின் சாரமாகவும் உள்ளவை. பயன் விளைப்பதில் தேனினும் பால் சிறந்தது. 'பாலொடு தேன் கலந்தற்றே' என்புழி, ஒடு உருபு உயர்பு குறித்து வந்ததும் அறிக. கருப்பங்கட்டி, எச்சில், ஊன் கலப்பு முதலிய அக்குற்றமும் இலதாய், உடலுக்கு நலம் பயப்பதாகும். இம்முறையில் ஆண்டவன் அன்பரை ஆட்கொள்ளுங்கால், தேனைப் போல மிக இனியனாய் வெளிப்பட்டு வயப்படுத்துப் பாலைப் போலப் பின் பயன் விளைத்துக் கருப்பங்கட்டியைப் போலத் தூய இன்பம் அளித்துப் பாதுகாப்பன் என்பது அறியத்தக்கது. தேன் சுவை எளிமையினும், பாற்சுவை அதனிற் சற்று அருமையினும், கருப்பங்கட்டிச் சுவை அதனினும் அருமையினும் அறியப்படுதல் போல, ஆண்டவன் அன்பரை ஆட்கொள்ளுங்கால், முதலில் எளியனாகவும், பின் அவன் சொரூப நிலையை உணர உணர மேன்மேலும் பெரியனாகவும் காணப்படுவன் என்னும் உண்மையும் பெறப்படுதல் அறிக" (திருவாசகம் - திருச்சதகம், கதிர்மணி விளக்கம், பக்.232-233). தேன் - அமுது - கரும்பின் தெளிவு என்னும் இவ்வைப்பு முறைக்குப் பண்டிதமணி வரைந்துள்ள உரை விளக்கம் அருமையும் எளிமையும் அழகும் பொருந்தியதாகும்.

'நீத்தல் விண்ணப்ப'த்தில் வரும் ஒரு பாடலில் (9),

> **"இருதலைக் கொள்ளியின் உள்எறும்பு ஒத்து நினைப்பிரிந்த**
> **விரிதலையேனை விடுதி கண்டாய்"**

என இரங்கிக் கூறுகின்றார் மாணிக்கவாசகர். 'இரு புறத்தும் நெருப்பினை உடைய ஒரு கொள்ளியின் உட்பகுதியில் அகப்பட்ட எறும்பைப் போன்று நின்னை விட்டு அகன்ற அலங்கோலம் உடையேனை விட்டுவிடுவாயோ? விடலாகாது' என்பது அடிகள் இறைவனுக்கு விடுக்கும் விண்ணப்பம் ஆகும்.

'இருதலைக் கொள்ளியின் உள்எறும்பு ஒத்து' என்னும் உவமைக்குப் பண்டிதமணி எழுதியுள்ள விளக்கம் வருமாறு :

"இருதலைக் கொள்ளி - இரண்டு பக்கமும் நெருப்புப் பற்றியெரியும் கொள்ளிக் கட்டை. ஒரு கட்டையின் இரு பக்கங்களிலும் தீப்பற்றி எரியுங்கால் அக்கட்டையின் நடுவிடத்தில் தங்கிய எறும்பு இருமருங்கும் சென்று உய்ந்து போதற்கு இயலாமல் கெட்டொழிதல் போல, இவ்வுலக வாழ்க்கையை வெறுத்தும் நின்னை அணுக இயலாமலும் வருந்தி உழல்கின்றேன் என்பார், 'இருதலைக் கொள்ளியினுள்-ளெறும் பொத்து' என்றார். கொள்ளி நடுவண், கொள்ளி மேல் என்னாது கொள்ளியுள் என்றது ஒரு நயம். கொள்ளி நடுவிடத்துள்ள எறும்பு அங்கும் இங்கும் சென்று போக்குவழி பெறாமல் உழன்று அக்கொள்ளிக்குப் பற்றுக்கோடாக-வுள்ளதொன்றைத் தானும் பற்றி ஒருவாறு உய்யவுங் கூடும். அக்கொள்ளி நிலத்திற் கிடந்தால் அவ்வெறும்பும் நிலத்தில் இறங்கலாம். அஃது ஒன்றிற் சார்த்தப்பட்டிருந்தால் அச்சார்ச்சிப் பொருளைத் தானும் பற்றி உய்யலாம். அக்கொள்ளி உட்டுளையுடைய மூங்கிலாக இருக்க, முன்னரே அதன் துளையுள் ஓர் எறும்பு நுழைந்திருக்குமாயின், இரு புறமும் நெருப்பு எரியுங்கால் அதனுட்பட்ட அவ்வெறும்புக்கு எவ்வாற்றானும் உய்யும் நெறி இன்றென்பது கண்கூடாகக் காணத்தக்கது. இந்நயம் கருதியே கொள்ளி மேல் நடு என்னாது 'இருதலைக் கொள்ளியின் உள்எறும் பொத்து' என்றார் என்க. இதனால் அடிகளது ஆராய்ச்சி நுண்கருத்துப் புலனாதல் அறிந்து இன்புறத்தக்கது. இருதலைக் கொள்ளியின் ஒரு தலை இவ்வுலக வாழ்க்கையின் வெறுப்பிற்கும், மற்றொரு தலை ஆண்டவனது பிரிவுக்கும் உவமம் ஆயின. ஆண்டவனது பிரிவினால் உண்டாய சூடும் ஆற்றவொண்ணாதது என்பது கருத்து" (திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம், கதிர்மணி விளக்கம், பக்.48-49).

திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்

பேராசிரியர் அ.சிதம்பரநாதன் தம் ஆசிரியர் பண்டிதமணியைப் பற்றி எழுதிய கட்டுரையின் முடிவில் குறிப்பிட்டிருப்பது இங்கே நினைவுகூரத்தக்கது:

"திருவள்ளுவர் கூறிய ஓர் அருமையான திருக்குறளுக்கு முற்றிலும் எடுத்துக்காட்டாக விளங்கியவர் பண்டிதமணி

கதிரேசன் செட்டியார் அவர்கள். 'நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும், பண்புடையாளர் தொடர்பு' என்றார் திருவள்ளுவர். அவர் காலத்தில் நூல்களில் நயத்தை அறிந்து அறிந்து துய்த்தவர்கள் பலர் போலும். அதனால் அதனை உவமையில் வைத்துப் பயில்தொறும் பண்புடையாளர் நட்புப் பெருகும் என்றார். நவிலுந்தொறும் பண்புடையாளர் தொடர்பு இனிக்கும் என்பது அவர்களுடைய தொடர்பினால் என் போன்றார்க்கு நன்கு விளங்கிற்று" ('பண்டிதமணி கதிரேசன் செட்டியார்', சபைக் கட்டுரைகள், பக்.74-75).

இலக்கியக் கண்டுபிடிப்பு என்ற புதுத்தடம் கண்டவர்

வகுப்பறையில் - தனிப்பட்ட உரையாடலில் - சொற்பொழிவில் - சமயக் கட்டுரையில் - இலக்கியக் கட்டுரையில் - திருவாசக உரையில் - என இங்ஙனம் ஒல்லும் வகையெல்லாம் இலக்கியச் சுவையையும் நயத்தையும் பல்லாற்றானும் பாங்குற வெளிப்படுத்தியவர் பண்டிதமணி. பேராசிரியர் வ.சுப.மாணிக்கம் கூறுவது போல், "அறிவியல் கண்டுபிடிப்புப் போல, இலக்கியக் கண்டுபிடிப்பு என்ற ஒரு புதுத்தடங் கண்டவர் பண்டிதமணியார். இதனால் நயத் தந்தை என்ற சிறப்புப் பெயர் இவர்க்கே உரியதாயிற்று" ('பண்டிதமணியின் தொண்டுகள்', தினமணி, 16.10.1981, ப.2).

4

ஒப்புயர்வற்ற உரையாசிரியர்

"வாசக மெல்லாம் மணிவா சகமாமோ?
காசெல்லாம் காணும்பொற் காசாமோ? – பேசுலகில்
மன்னும்உரை யெல்லாம் மகிபால மாநகரான்
சொன்ன உரைக்கு ஈடாமோ? சொல்".

– கவிமணி*

வைணவ இலக்கியங்களுக்கு அமைந்த ஈட்டுரைகள் போல், சைவ இலக்கியங்களுக்கு உரைகள் எவையும் தோன்றவில்லை. தேவாரம், திருவாசகம் ஆகியவற்றிற்கு உரை வரைதல் கூடாது என்ற கொள்கை பண்டைக் காலத்தில் வழங்கி வந்தது. "சீவன் முத்தரது அனுபவத்தினை உரை கொண்டு தெளிவுபடுத்த முடியாது. இது பற்றியே அப்பழங்கொள்கை எழுந்து நடையாடியது போலும்" (அணிந்துரை, திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம், கதிர்மணி விளக்கம், ப.14) என்பர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார். எனினும் 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து' சொல்லுவதற்கும் நயம் காண்பதற்கும் வல்லார் ஒருவரின் உதவி தேவைப்படுகின்றது. பேராசிரியர் எம்.எஸ்.பூரணலிங்கம் பிள்ளை கூறுவது போல், "ஈழை நாட்டு இலக்கியங்களுக்கு என்று ஒரு தனிச்சிறப்பு உண்டு. அவற்றை உரைகளின் உதவி இல்லாமல் எளிதில் கற்க முடியாது. உரை வல்லார் ஒருவரின் உதவியாலேயே அவற்றின் நயப் பொருளையும் நுண்பொருளையும் உலகம் உணர்ந்து இன்புற முடியும்" (M.S. Purnalingam Pillai, A Primer of Tamil Literature, p.140).

பண்டிதமணியும் பண்டை உரையாசிரியர்கள் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார். 'தமிழும் தமிழ்ப்

---

* திருவாசகம் - திருவெம்பாவை, கதிர்மணி விளக்கம், உரைச் சிறப்பு, பக். xxvi.

பணியும்' என்ற தலைப்பில் எழுதிய இலக்கியக் கட்டுரையில் அவர் உரையாசிரியர்களைப் 'பேருபகாரிகள்' என்று பெருமதிப்புடனும் பேரன்புடனும் சுட்டியுள்ளார்; உண்மை உரையாசிரியரின் இயல்பு பற்றியும் கருத்துரை வழங்கியுள்ளார்.

"நூலாசிரியரின் அரிய கருத்துக்களையெல்லாம் உரை-யாளர் உதவியாலேயே உலகம் உணர்ந்து இன்புறுகின்றது. பேருபகாரிகளாகிய உரையாசிரியர்களின் உதவி இல்லையாயின் பண்டை உயர்நூல்களாம் கருவூலங்களில் தொகுத்து வைத்த விலைவரம்பில்லாப் பொருண்மணிக் குவியல்களை யாம் எங்ஙனம் பெறுதல் கூடும்?... நூலாசிரியர் உள்ளக் கிடக்கையை நுணுகி ஆராய்ந்து தெளிவுபெற எடுத்தெழுதும் வன்மையாளரே உண்மை உரையாசிரியராவர்... ஒரு புலவன் காலக் கழிவு நோக்காது நெடிதாராய்ந்து தன் வாணாளில் ஒரு நூற்கு உண்மையுரை எழுதி முடிப்பினும் போதியதே" (உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, இலக்கியக் கட்டுரைகள், பக்.28-29).

பண்டிதமணியின் சொற்களிலேயே சுட்டுவதானால், நெடிதாராய்ந்து அவர் தம் வாழ்நாளில் திருவாசகத்திற்கு எழுதிய உண்மை உரையே 'கதிர்மணி விளக்கம்' ஆகும்.

'கதிர்மணி விளக்கம்' உருவான வரலாறு

பண்டிதமணிக்கு நடுவண் அரசினர் 1942-ஆம் ஆண்டில் 'மகாமகோபாத்தியாய' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தனர். இப்பட்டம் பெற்றமைக்காக 18.7.1943-இல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாவில் பண்டிதமணி பாராட்டப் பெற்றார். மறுநாள் நடைபெற்ற பாவநாசம் உயர்நிலைப் பள்ளி மாணவர் சங்கத் தொடக்க விழாவில் பண்டிதமணியைப் பாராட்டிய அன்பர்கள், "பண்டிதமணி எழுதி வரும் கௌடலீய மொழிபெயர்ப்பு எவரும் செய்யக்கூடியது; ஆனால் அவர் மட்டுமே செய்யக்கூடிய திருவாசக உரைப்பணியைத் தான் தமிழுலகம் எதிர்பார்க்-கின்றது" என வலியுறுத்திப் பேசினர். பண்டிதமணியின் உள்ளத்திலும் அவ்வேண்டுகோளை ஏற்றுச் செயல்பட வேண்டும் என்ற எண்ணம் கருக்கொண்டது. 'கதிர்மணி விளக்கம்' உருவாக இந்நிகழ்ச்சியே அடித்தளமாக அமைந்தது என்பர் முனைவர் க.தியாகராசன் (பண்டிதமணியின் தமிழ்ப்பணி, ப.182).

பண்டிதமணி 'கதிர்மணி விளக்கம் திருச்சதகம்' பகுதிக்கு எழுதிய முன்னுரையில் தரும் ஒப்புதல் வாக்குமூலமும் இங்கே நினைவுகூரத்தக்கதாகும்: "இத்தகைய அருமருந்தன்ன திருவாசகத்தை, யான் சிறு பருவம் தொட்டே சிறப்பு முறையில் பயின்று வந்ததோடு, பற்பல முறையாக ஆராய்ந்து கண்ட உண்மைகளை, அறிஞர்அவைக்களங்களில் சொற்பொழி-வாகவும் நிகழ்த்தியதுண்டு. அஃதறிந்த தமிழன்பர்கள் என் சிறுமை உணர்ந்தும், அன்பு காரணமாக என்னை அதற்கு உரை எழுதும்படி தூண்டி வந்தனர். கலையறிவும், அநுபவ உணர்வும் நிரம்பப் பெற்ற பெரியவர்கள் மேற்கொள்ளத்தக்க பணியை, அத்துணைத் தகுதியில்லாத சிறியேன் மேற்கொண்டதற்குக் காரணம், எனக்கு ஆற்றல் உண்டென்று நினைந்த அன்பர்களின் கட்டளையை மறுக்க இயலாமையும், என் அவாவுமேயாம்" (பக்.13-14).

தமிழன்பர்களின் அன்புக் கட்டளையை ஏற்றும், உள்ளார்ந்த தமது அவாவின் தூண்டுதலாலும் திருவாசகத்-திற்கு உரை எழுத முற்பட்ட பண்டிதமணி, காலப் போக்கில் அதைத் தம் வாழ்நாள் பணியாகவே கருதினார். நோயுற்ற காலத்தும் அவரது சிந்தை திருவாசகத்திற்கு உரை எழுதுவதி லேயே சென்றது. "'தம் புலமையின் கடமை திருவாசகவுரையே' என்று நோய் மலி காலத்தும் ஆராக் காதலால் ஒருமைப்பட்ட பண்டிதமணி திருவெம்பாவை உரையை முடித்த பின்னும் திருவம்மானையின் சில பாடல்களுக்கும் ஆனந்தக் களிப்பாக உரை வரைந்து கொண்டிருந்தார்" (தினமணி, 16.10.1981, ப.2) என அறிஞர் வ.சுப.மாணிக்கம் தம் 'பண்டிதமணியின் தொண்டுகள்' என்னும் கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது இங்கே மனங்கொளத் தக்கதாகும்.

திருவாசகத்திற்கு விரிவுரை வரையும் பணியை முதலில் மேற்கொண்டவர் மறைமலையடிகள். அவர் திருவாசகத்தில் சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப் பகுதி, போற்றித் திருவகவல் ஆகிய முதல் நான்கு பகுதிகளுக்கு மட்டும் விரிவுரை எழுதி வெளியிட்டுள்ளார். கா.சுப்பிரமணிய பிள்ளை திருவாசகம் முழுமைக்கும் எளிய முறையில் சுருங்கிய அளவில் உரை எழுதி வெளியிட்டுள்ளார். பண்டிதமணி, மறைமலை யடிகள் உரை எழுதிய பகுதிகளை விட்டுவிட்டு, திருச்சதகத்தில் இருந்து தொடங்கி உரை வரைந்துள்ளார். அவர் திருவாசகத்தின் ஐந்தாவது பகுதியாகிய 'திருச்சதகம்' நூறு

பாடல்களுக்கும், ஆறாவது பகுதியாகிய 'நீத்தல் விண்ணப்பம்' ஐம்பது பாடல்களுக்கும், ஏழாவது பகுதியாகிய 'திருவெம்பாவை' இருபது பாடல்களுக்கும் பேருரை கண்டுள்ளார். அவரே தம் உரைக்குக் 'கதிர்மணி விளக்கம் என்னும் பேருரை' எனப் பெயர் கொடுத்துள்ளார்.

"திருவாதவூர் அடிகள் அருளிச் செய்த திருவாசகத் திருமறைக்கண் உள்ள திருச்சதகத்திற்குப் பாண்டி வள நாட்டில், பூங்குன்ற நாட்டுத் தலைநகராகிய மகிபாலன்பட்டி, மகாமகோபாத்தியாய,முதுபெரும் புலவர், பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் இயற்றிய கதிர்மணி விளக்கம் என்னும் பேருரை முற்றுப் பெற்றது" (ப.398) என்னும் குறிப்பு பண்டிதமணியின் 'திருச்சதகம்' உரையின் முடிவில் காணப்படுகின்றது. இத்தகைய குறிப்பினை அவரது 'நீத்தல் விண்ணப்பம்' உரையின் முடிவிலும் 'திருவெம்பாவை' உரையின் முடிவிலும் காண முடிகின்றது.

உரை முறை

"ஒவ்வொரு திருப்பாட்டிற்கும் கருத்துரைத்தல், கண்ணழித்தல், பொழிப்புத் திரட்டல், அகலங்கூறல் என்னும் நான்கு வகையாகக் கொண்டு உரை விளக்கம் செய்யப்படும். அவற்றுள் கருத்துரைத்தலாவது, திருப்பாட்டை அடுத்து அதன் திரண்ட கருத்தையும் முன்னைத் திருப்பாட்டோடு உள்ள இயைபையும் சுருக்கிக் கூறுதலாகும். கண்ணழித்தல் என்பது, பதப்பொருள் சொல்லுதல். பொழிப்புத் திரட்டல் என்பது, மூல பாடத்தின் பதங்களை விட்டு அவற்றிற்குச் சொல்லிய பொருள்களைத் திரட்டிக் காட்டுதல். இவ்விரண்டு வகையும் பதப்பொருள் கூறுமுகமாக அமையும் ஆதலின், விரிவஞ்சிப் பொழிப்புத் திரட்டலைத் தனியே கூறினேம் அல்லேம். அகலங் கூறலாவது, திருப்பாட்டின் பொருளைத் தூய்மை செய்தற்கு வினாவிடை உள்ளுறுத்தும், ஆற்றன் முதலியவற்றாலும் குறிப்பாலும் சொற்களின் அமைந்து கிடக்கும் பொருள் நயங்களை விளக்கியும், இன்றியமையாத இடங்களில் மேற்கோள் காட்டியும் விளக்கிக் கூறுதலாகும். இம்மூன்றும் முறையே கருத்துரை, பதவுரை, விளக்கவுரை என உரிய இடங்களில் எடுத்தாளப்படும்" (ப23) எனப் பண்டிதமணி திருச்சதகத்திற்கு எழுதிய 'உரைத் தொடக்க'த்தில் தம் உரை முறை குறித்து விளக்கியுள்ளார். இவ்வுரை முறையினையே

அவர் 'நீத்தல் விண்ணப்பம்', 'திருவெம்பாவை' ஆகிய பகுதிகளுக்கு எழுதிய 'கதிர்மணி விளக்கப் பேருரை'களிலும் கையாண்டுள்ளார்.

"கருத்துரை பாட்டைத் தெளிவுபடுத்துகின்றது; பதவுரை சொல்லின் பொருளை எடுத்துக் காட்டுகின்றது; விளக்கவுரை சொல்லின் நயத்தையும் பொருளின் நுட்பத்தையும் விளக்கிக் காட்டுகின்றது. இதுதான் உரையாசிரியர்கள் கையாள வேண்டிய சரியான முறை. இம்முறையில் தமிழ் இலக்கிய நூல்களுக்கெல்லாம் உரைகள் வெளிவந்தால்தான் தமிழ் மறுமலர்ச்சியின் பயனைத் தமிழ் மக்கள் அடையலாம்" (முகவுரை, திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம், கதிர்மணி விளக்கம், பக்.10-11) என அறிஞர் ஆர்.கே.சண்முகம் செட்டியார் பண்டிதமணியின் உரைமுறையினையும் திறத்தினையும் போற்றிக் கூறியுள்ளார். அவரது மதிப்பீட்டில் திருவாசகத்தைத் தமிழ் மக்கள் பொருள் தெரிந்து படிக்கும் வண்ணம் உதவியவர் பண்டிதமணி ஆவார்.

இனி, திருவெம்பாவைப் பாடல் ஒன்றினைக் கொண்டு பண்டிதமணியின் உரை நெறியினை விரிவாகக் காண்போம்.

"முன்னைத் திருப்பாட்டில் இறைவனது அருமையில் எளிய அழகில், நெஞ்சத்தால் நினைந்து உருகுதலாகிய எளிமையைப் பெண்மக்கள் வாயிலாகப் புலப்படுத்தருளிய அடிகள், இத்திருப்பாட்டில் அப்பெருமான் திருமேனியில் தம் கண்கள் ஈடுபட்டு இன்புறும் எளிமையை அவ்வாறே அருளிச் செய்தனர்" (திருவாசகம் - திருவெம்பாவை, கதிர்மணி விளக்கம், ப.35) என்பது பண்டிதமணி 'மாலறியா நான்முகனும் காணா மலையினை' எனத் தொடங்கும் திருவெம்பாவையின் ஐந்தாம் பாடலுக்கு எழுதியுள்ள 'கருத்துரை' ஆகும். இதில் அவர் பாடலின் திரண்ட கருத்தினையும், முன்னைய பாடலோடு இப்பாடலுக்கு உள்ள இயைபினையும் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

'பதவுரை' என்னும் இரண்டாம் பகுதியில் பண்டிதமணி பாடலின் சொற்பொருளைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

'விளக்கவுரை' என்னும் மூன்றாம் பகுதியில் பண்டிதமணி பாடலில் பொதிந்துள்ள பல்வேறு நயங்களையும் நுட்பங்களையும் விரிவாக எடுத்துக்காட்டியுள்ளார். காட்டாக, 'மால்

அறியா நான்முகனும் காணா மலையினை' என்பதற்குப் பண்டிதமணி இப்பகுதியில் வரைந்துள்ள நயக்குறிப்பு வருமாறு :

'பாதாள மேழினுங்கீழ்ச் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருண்முடியே'

என்னும்படி ஒளிமலையாக வெளிப்பட்ட இறைவனுடைய அடியையும் முடியையும் முறையே திருமால் விலங்குருக் கொண்டு நிலம் அகழ்ந்தும், நான்முகன் பறவையுருக் கொண்டு விண்ணிற் பறந்து சென்றும் அறியவியலாமல் வலியிழந்து நின்றனரென்பது புராணக் கதை. இந்நிகழ்ச்சி திருவண்ணாமலையைப் பற்றியதென்ப. இஃது இறைவனது பழம்பொருட்டன்மையைப் புலப்படுப்பதாகும். இனி மயக்க வுணர்வுடையோரால் அறியப்படாதவன் என்பதும், மனத்தை ஒருமுகப்படுத்தாமல் பல முகமாகச் செலவிடுவோரால் காணப்படாதவன் என்பதும் ஆகிய குறிப்புப் பொருள் தோன்ற, 'மாலறியா நான்முகனுங் காணா மலையினை' யென்றாரெனினுமாம். மலையாக வெளிப்பட்டும் அறிந்திலர் என்பது ஒரு நயம்" (ப.36). இத்தகைய நுண்ணிய நயங்கள் பலவற்றைப் பாடலுக்கு எழுதிய 'விளக்கவுரை'யில் புலப்படுத்தியுள்ளார் பண்டிதமணி.

இங்ஙனம் பல்வகை நயமும் நுட்பமும் பொருந்திய பண்டிதமணியின் 'கதிர்மணி விளக்க'த்தினை 'ஒப்புயர்வற்ற உரை' (மதிப்புரைச் சுருக்கத் திரட்டு, திருவாசகம் - திருவெம்பாவை, கதிர்மணி விளக்கம், ப.xxv) எனப் போற்றுகின்றார் மூதறிஞர் ராஜாஜி.

சொற்பொருள் விளக்கம் கூறுதல்

பண்டைய உரையாசிரியர்களை அடியொற்றி அருமையும் எளிமையும் அழகும் விளங்கப் பண்டிதமணி சொற்பொருள் விளக்கம் கூறுகின்றார். தாம் அங்ஙனம் பொருள் கூறுவதற்கான காரணத்தையும் சுட்டுவது அவரது தனிப்பண்பு. இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்த பண்டிதமணியின் சில சொற்பொருள் விளக்கங்கள் வருமாறு :

"(திருவெம்பாவை என்னும் பெயரில் இடம்பெற்றுள்ள) திருவென்பது தெய்வத் தன்மையென்னும் பொருளுடைய மங்கல அடைமொழியாகும்."

"புரளுதல் - விழிப்புண்டாதற்குத் தொடங்கும் முதற்செயல். அஃது ஈண்டு இலக்கணைச் சொல்லாக நின்ற எழுதலைக் குறிக்கும்."

"நேரிழை - தகுதியான அணிகலன். ஈண்டுத் தகுதி கன்னிமைக்குரியதாகும். இது நேரிழையீர் என்பதற்கும் ஒக்கும்."

"சித்தம் அழகியார் - நெஞ்சிற்கு அழகு தூய்மையாதலின் தூய நெஞ்சுடையார் 'சித்தம் அழகியார்' எனப்பட்டனர்"

(திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம், கதிர்மணி விளக்கம், பக்.1,16,20,28).

சொல்லுக்குப் பொருள் கூறும்போது, தம் கருத்துக்கு அரணாகப் பொருந்திய இலக்கியச் சான்றையோ, பண்டைய உரையாசிரியரின் குறிப்பையோ அடுத்துக் காட்டுவது பண்டித மணியின் உரைநெறி. "முனைவன் என்பது இயல்பாகவே பாசங்களின் நீங்கிய முற்றறிவுடைய இறைவனைக் குறிக்கும். 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்' (மரபியல், நூற்பா 94) என்பர் தொல்காப்பியனார்" (திருவாசகம் - திருச்சதகம், கதிர்மணி விளக்கம், ப.85) என்றும், "வளர்தல் - கண் வளர்தல்; துயிலுதல். 'ஆலிலையின் மேலன்று நீ வளர்ந்தது' (திவ்யப் பிரபந்தம் - 43 இயற்பா 1-69) என்புழி அப்பொருட்டாதல் அறிக" (திருவாசகம் - திருவெம்பாவை, கதிர்மணி விளக்கம், ப.14) என்றும், "பொருள் - மெய்ப்பொருள். 'பொருளல்லவற்றைப் பொருளென்று உணரும்' என்புழிப் பொருள் என்னும் சொற்கு மெய்ப்பொருள் என்று பரி மேலழகர் கூறிய உரையானும் உணர்க" (திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம், கதிர்மணி விளக்கம், ப.78) என்றும் கதிர்மணி விளக்கப் பேருரையில் இடம்பெற்றுள்ள பகுதிகள் இவ்வகை யில் குறிப்பிடத்தக்கவை. பண்டிதமணியின் பழுத்த தமிழ்ப் புலமையை இத்தகைய பகுதிகள் வாயிலாக அறிகின்றோம்.

சொற்களின் நயங்களையும் நுட்பங்களையும் எடுத்துரைப்பதில் பண்டிதமணிக்கு விருப்பம் மிகுதி. சான்றாக, 'அப்பனே எனக்கு அமுதனே' எனத் தொடங்கும் திருச்சதகப் பாடலில் (98) இடம் பெற்றுள்ள 'அமுதன்' என்ற சொல்லில் பண்டிதமணி காணும் நுண்பொருள் வருமாறு :

"எனக்கு அமுதனே - எனக்குச் சாவா மருந்தாக வுள்ளவனே... அமிர்தம் என்னும் சொல், சாவைத் தவிர்ப்பது

என்னும் பொருளதாகலின், சாவா மருந்து எனப்பட்டது; சாதற்கு ஏதுவாகிய பிணி, மூப்பு முதலியவற்றைப் போக்குமே யொழிய, உண்மையில் சாதலைத் தவிர்ப்பதன்று. 'விண்ணோ ரமுதுண்டும் சாவ' (வேட்டுவ வரி) என்று சிலப்பதிகாரம் கூறும்" (திருவாசகம் - திருச்சதகம், கதிர்மணி விளக்கம், பக்.387-388).

'நீத்தல் விண்ணப்ப'த்தில் வரும் ஒரு பாடலில் (பா.3) மாணிக்கவாசகர், இறைவனை "என்னை வளர்ப்பவனே" என விளிக்கின்றார். பண்டிதமணி இங்கே 'வளர்ப்பவன்' என்னும் சொல்லில் காணும் நயம் வருமாறு : "அடிகள் விரும்பியது, உள்ளொளியாகிய உணர்வு வளர்ச்சியேயன்றி ஊனுடலின் வளர்ச்சியன்று. 'ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்கி' என்பது அடிகள் திருவாக்கு. உலகத்தவர் உண்டி முதலிய வற்றால் எதனைப் பெருக்க விரும்புகின்றார்களோ அவ்வுடல் உருகிச் சுருங்க வேண்டும் என்பதும், உள்ளுணர்வு அருளமுத நுகர்ச்சியால் பெருக வேண்டும் என்பதுமே அடிகள் விருப்பமாகும். ஆதலின், 'என்னை வளர்ப்பவனே' என்பதற்கு 'என் உணர்வை வளர்ப்பவனே' என்பது பொருளாகும்." (திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம், கதிர்மணி விளக்கம், ப.32).

"அவனருளாலே அவன்தாள் வணங்கி" (சிவபுராணம், வரி 18) என்பது போல், ஒரு கவிஞரை அவரது வாக்கினைக் கொண்டே அளந்தறிய முற்படுவது போற்றுதற்கு உரியதாகும்.

உருக்கும் திருவாசகத்திற்கு உள்ளொளி பெருக்கும் உரை

"நம் பண்டிதமணி அவர்கள் இன்று திருவாசகத்திற்குக் கதிருரை ஒன்று எழுதி வருவது தமிழின் நல்ல காலமே ஆம். திருவாசகத்தினைப் பற்றி அவர் செய்த சொற்பொழிவு-களையும் 'இருதலைக் கொள்ளியின் உள்எறும்பு ஒத்து' என்பது முதலிய பகுதிகளுக்கு அவர் கூறிய நயங்களையும் கேட்டவர்கள் 'இவர் உரை ஒன்று எழுதி வெளியிட மாட்டாரா?' என்று விரும்பிய விருப்பம் எல்லாம் இன்று நிறைவேறி வருகிறது. இது கண்டு எந்தத் தமிழன் மனந்தான் மகிழாது?" (அணிந்துரை, திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம், கதிர்மணி விளக்கம், ப.14) என மொழிவர் அறிஞர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார். இங்ஙனம் படிப்பவர் மனத்தை

மகிழவும் நெகிழவும் வைக்கும் இடங்கள் பண்டிதமணியின் திருவாசகப் பேருரை விளக்கத்தில் பரக்கக் காணப்படுகின்றன.

இறைவன் வலிய வந்து தம்மை ஆட்கொண்ட பின், அவனது அருமை அறியாமைக்கு மாணிக்கவாசகர் திருச்சதகப் பாடல் ஒன்றில் கையாண்டுள்ள உவமை நினைந்து நினைந்து மகிழத்தக்கதாகும். அவ்வுவமை வருமாறு :

"மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ணம் என்றலால்
அரியை என்றுனைக் கருது கின்றிலேன்"

திருச்சதகத்தில் 'ஆனந்தாதீதம்' என்னும் பதிகத்தில் (பா.92) இடம்பெற்றுள்ள இவ்வுவமைக்குப் பண்டிதமணி வரைந்துள்ள நுண்ணிய உரை விளக்கம் இதோ :

"மழ என்பது குழந்தையை உணர்த்தும். 'வானுந்து மாமதி வேண்டியழு மழப்போலும்' என்னும் திருக்கோவையிலும் (147)இப்பொருட்டாதல் காண்க. அறியாப் பருவத்துக் குழந்தையின் கையில், அதன் மகிழ்ச்சி கருதிப் பொன்னால் ஆக்கப்பட்ட விலையுயர்ந்த ஒரு கிண்ணம் கொடுக்கப்-பட்டால், அதன் அருமையை அக்குழந்தை அறியாவாறு போல என்பார், 'மழக்கை யிலங்கு பொற்கிண்ணம் என்றலால்' என்றார். இவ் எடுத்துக்காட்டிற் பிறிதோர் உண்மையும் புலனாம். அது, பொற் கிண்ணத்தின் அருமை அறியாத அம்மழவிளங் குழந்தை, அதனைக் கை நழுவ விட்டால், அது வீழ்ந்து சிதைந்து விடுமே என்னும் கவலை, தாய் தந்தையர்க்கும் ஏற்பட்டு, அங்ஙனம் விழாவாறு அக்குழந்தை செல்லும் இடன் எல்லாம் தாமும் சென்று, நழுவ விடாமல் தாங்கித் துணைநின்று பாதுகாத்தல் போல, ஆண்டவன் தன்னைத் தமக்குத் தந்த அளவில் அமையாமல், பேணிக் கோடற் பொருட்டுத் தாம் செல்லுழியெல்லாம் புறம் போந்து பாதுகாக்கும் கடப்பாடும் உடையனாவன் என்பதாம். இது கருதியே பிறிதோரிடத்து அடிகள், 'தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த செல்வமே' (திருவாசகம், பிடித்து பத்து, 9) என்று அருளிச் செய்வாராயினர். ஆண்டவன், தம் புறம்புறந் திரிதற்கு ஏது, அடிகளுக்குத் தான் அருளிய அருளமுதத்தை அடிகள் நழுவவிடாமல் துய்த்து இன்புறுதற் பொருட்டு

என்பது" (திருவாசகம் - திருச்சதகம், கதிர்மணி விளக்கம், பக்.364-365).

இதேபோல், 'செங்க ணவன்பால்' எனத் தொடங்கும் திருவெம்பாவைப் பாடலின்(17) விளக்கவுரையில் பண்டிதமணி காட்டியுள்ள நயம், அவரது புத்திநுட்பத்திற்கும் புலமைத் திறத்திற்கும் கட்டியம் கூறுவதாகும். அந்நயம் வருமாறு :

"இது நீராடுங்கால் ஒருத்தியை நோக்கிக் கன்னியர் பலருங் கூறியதாக அருளிச் செய்யப்பட்டது. இப்பகுதியில் மகளிரை முன்னிலைப்படுத்திய பிற இடங்களிலெல்லாம் 'வாட்டடங்-கண் மாதே' (1), 'நேரிழையாய்' (2), 'முத்தன்ன வெண்ணகையாய்' (3), 'ஒண்ணித்தில நகையாய்' (4), 'தேன் வாய்ப் படிறீ' (5), 'வாருருவப் பூண்முலையீர்' (6) என்று அவர்தம் முன்னழகு சுட்டப்பட்டன. அவ்வாறாகவும் ஈண்டு 'கொங்குண் கருங்குழலி' ('மணம் தங்கிய அரிய கூந்தலையுடைய பெண்ணே') எனப் பின்னழகைச் சுட்டிக் கூறியது விளிக்கப்பட்டவள் இறைவனுடைய அருட்பெருக்கையும் பேருபகாரத்தையும் விளையாட்டு நிலையில் புறக்கணிப்பது போல் திரும்பி நின்றாளாக, அந்நிலையில் அவள் கூந்தலழகைப் புகழ்வது போலச் சுட்டிக் கூறி வற்புறுத்திய படியாம்" (திருவாசகம் - திருவெம்பாவை, கதிர்மணி விளக்கம், ப.80). இங்கே பண்டிதமணி, மகளிரது இயற்கைப் பண்பினை மனத்திலே கொண்டு அழகியதொரு விளக்கத்தினை அளித்துள்ளார். இப்பகுதியைப் படிப்பவர் மனக்கண் முன்னே, விளையாட்டு நிலையில் புறக்கணிப்பது போல் திரும்பி நிற்கும் ஒரு பெண்ணின் அழகிய ஓவியம் வந்து நிற்பது திண்ணம்.

உண்மைப் பொருளை உள்ளவாறு உரைத்தல்

"திருவாசகத் திருப்பாடல்களுக்கு உரை கண்டார் பலராவர். அவ்வுரைகளைக் கொண்டு நூலின் உண்மைப் பொருளைப் பெரும்பாலும் உள்ளவாறு அறிதற்கியலாமை-யால் 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்' என்று அடிகள் ஆணையிட்டருளியபடி, அவனருளே கண்ணாகக் கொண்டும், அடிகள் திருவுருவத்தை இடையறாது நினைவுகூர்ந்தும் கூடிய வரை பொருள் காண முயன்றேன். அம்முயற்சி திருவருளால் ஓரளவிற் பயனுடையதாயிற்று"

எனப் பண்டிதமணி 'நீத்தல் விண்ணப்பம்' உரைக்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பு திருவருளின் மேல் அவருக்கு இருக்கும் ஆழ்ந்த பற்றையும், நூலாசிரியரான மாணிக்கவாசகர்பால் அவர் கொண்டிருக்கும் பெருமதிப்பையும் பறைசாற்றுவதாகும் 'மாணிக்கவாசகர்' என்ற தலைப்பில் திருச்சிராப்பள்ளி வானொலியில் ஆற்றிய உரையில் பண்டிதமணி, "திருவாசகப் பாடல்கள் மாணிக்கவாசக அடிகளுடைய சிவாநுபவ நிறைவில் பொங்கித் ததும்பி வெளிப்பட்ட அமுத வெள்ளமெனின் மிகையாகாது" (உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, இலக்கியக் கட்டுரைகள், ப.98) எனக் குறிப்பிட்டிருப்பதும் இங்கே நினைவுகூரத்தக்கதாகும்.

திருவாச்கத்தின் அருமை பெருமைகளைக் குறித்துத் தனிநூல் ஒன்று எழுத வேண்டும் என்ற வேட்கை பண்டிதமணிக்கு இருந்தது. "இன்னும் இத்திருவாசகத்தின் அருமை பெருமைகள் அளப்பரியனவாம். இதனைப் பற்றித் தனித்து ஓர் உரைநடை நூல் எழுத எண்ணியிருக்கின்றேம் ஆதலின், ஈண்டு இம்மட்டில் அமைகின்றாம்" (திருவாசகம் - திருச்சதகம், கதிர்மணி விளக்கம், உரைத் தொடக்கம், பக்.17-18) என்றும், "தசகாரியவுண்மை இத்திருச்சதகத்தில் அமைந்திருத்தலைத் தனியே ஆராய்ந்து திருவாசகத் தேன் என்னும் நூலில் விளக்கிக் கூறுவாம்" என்றும் அவர் தம் விருப்பத்தை இரு இடங்களில் பதிவு செய்துள்ளார். எனினும் அவர் காலத்தில் அவ்விருப்பம் நிறைவேறாமலே போனது நம் தவக்குறையே ஆகும்.

இனி, 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்' என்பதற்கு ஏற்பத் திருவாசகப் பாடலின் உண்மைப் பொருளைப் பண்டிதமணி உள்ளவாறு உரைத்துள்ள பாங்கிற்கு ஓர் எடுத்துக்காட்டினைக் காண்போம்.

பிறப்பு, இறப்பு என்னும் இரண்டினுள் பிறப்பே பெரிதும் அஞ்சத்தக்கதாகும் இறப்பில் வினையெச்சம் உளதாயின், அவ்வுயிர்க்கு மீண்டும் பிறத்தலும், அஃது இலதாயின் பிறவாமையும் உண்டாம் ஆதலின் பிறப்பிற்கு அஞ்சும் அத்துணை அளவு இறப்பிற்கு அஞ்ச வேண்டியதில்லை என்பது கண்கூடு. இவ்வுண்மையை உளங்கொண்ட மணிவாசகப் பெருமான், பெரிதும் அஞ்சத்தக்கதாகிய பிறப்பிற்கே

அஞ்சமாட்டேன் எனின், அத்துணை அஞ்சத்தகாதது ஆகிய இறப்பைப் பற்றி யான் செய்யக்கூடியது யாதுளது என்பார்.

"யானேதும் பிறப்பஞ்சேன், இறப்பதனுக்கு என் கடவேன்?"

(திருச்சதகம், பா.12)

என்கிறார். இங்கே 'இறப்பதற்கு என் கடவேன்?' என்னும் தொடர் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். இதற்கு 'இறப்பதற்கே அஞ்சுகின்றேன்' என்று பொருள் கூறுவாரும் உளர். பண்டிதமணி அன்னோர் கருத்தினை மறுத்து, 'இறப்பதனுக்கு என் கடவேன்' என்னும் தொடரின் மெய்ப்பொருளை நிலைநிறுத்துகின்ற பாங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

"இத்தொடர் 'இறத்தலைக் குறித்து யான் செய்யத் தக்கது யாதுளது? அஃதொரு பொருளன்று' என்னும் பொருளதாம். இஃது இப்பொருட்டாதலை, 'வளையார் பசியின் வருந்தார் பிணியின் மதனன் அம்புக்கு, இளையார் தனங் கண்டிரங்கி நில்லாரிப் பிறப்பினில் வந்து, அளையாம் நரகினுக்கு என் கடவார்' என்னும் பட்டினத்து அடிகள் திருவாக்கினும் காண்க. 'நரகினுக்கு என் கடவார்' என்பது 'நரகத்தைக் குறித்து அவர் செய்யக்கடவது யாது? ஒன்றுமின்று; அது குறித்து அஞ்சமாட்டார்' என்பதே கருத்தாதலறிக. இங்ஙனமின்றி, 'இறப்பதனுக்கென் கடவேன்' என்பதற்கு 'இறப்பதற்கே அஞ்சுகின்றேன்' என்று பொருள் கூறின் அஃது 'பிறப்பினோ டிறப்பு மஞ்சேன்' என்னும் அடிகள் கருத்தோடு முரணுதலான், பொருத்தமின்று என்பது உணர்க" (திருவாசகம் - திருச்சதகம், கதிர்மணி விளக்கம், ப.43) எனப் பிறர் கருத்தினை மறுத்து, தம் கருத்தினை நிலைநாட்டியுள்ளார் பண்டிதமணி. இங்கே, 'அடிகள் கருத்தோடு முரணுதலான் பொருத்தமின்று' என ஆசிரியர் கூறியிருப்பது மனங்கொளத்தக்கது. 'அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும், ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்' என்னும் பாரதியாரின் கூற்று இவ்வகையில் ஒப்புநோக்கத்தக்கது.

சைவ சமய உண்மைகளை எடுத்துரைத்தல்

"திருவாசகத்தை ஒத்த ஞானப் பனுவல் வேறு எம்மொழியிலும் காண்பதற்கு அரிதாம்" (திருவாசகம் - திருச்சதகம், கதிர்மணி விளக்கம், முன்னுரை, ப.12) என்பது

பண்டிதமணியின் அழுத்தமான கருத்து. இக்கருத்திற்கு அரணாக அவர் தம் திருவாசக உரை விளக்க நூல்களில் ஆங்காங்கே எடுத்துக்காட்டியுள்ள அனுபவ உண்மைகள் - சைவ சமய விளக்கங்கள் - பலவாகும். அவை திருவாசகத்தை அவர் எந்த அளவிற்குச் சைவ சித்தாந்த நோக்கில் எழுத்தெண்ணிப் பயின்றுள்ளார் என்பதைத் தெள்ளிதின் காட்டுகின்றன.

"சைவத்தின் ஒழுக்கங் காட்டிச்
சமயங்கள் கடந்து நிற்கும்
தெய்வத்தின் விழுப்பங் காட்டித்
தெளியாரும் ஒப்ப வேண்டி
வையத்தின் வழக்கங் காட்டி
வகுத்த நல்லுரையைக் கண்டேம்
கையொத்துத் தொழுது சொல்வேம்
கதிர்மணி விளக்கம் வாழ்க" **(மாமலர்கள், ப.26)**

என்பது செம்மல் வ.சுப.மாணிக்கத்தின் பாராட்டு

"பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருதினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலர்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த
பொங்கு மடுவில்..."

என்பது திருவெம்பாவையில் இடம்பெறும் பதின்மூன்றாம் பாடல். இப்பாடலுக்கு எழுதிய உரை விளக்கத்தில் சைவ சித்தாந்த முறைப்படி ஆணவ முதலிய பாசங்களை ஒழிப்பதற்கு இறைவன் ஞானாசிரியனாக எழுந்தருளிப் பக்குவமுள்ள உயிர்களுக்குச் செய்யும் தீக்கைக் கிரியைகளைக் குறித்துள்ளார் பண்டிதமணி. நால்வகை தீக்கைகளைப் பற்றிய அவரது நுண்ணிய விளக்கங்கள் இதோ:

"சிவநெறித் தீக்கைகள் பல திறப்படும் அவற்றுள் உபலக்கணமாகச் சில தீக்கைக் குறிப்புக்கள் ஈண்டுள்ளன. 'பைங்குவளைக் கார்மலர்' எஃ்பது நயன தீக்கையைக் குறிக்கும். நயன தீக்கையாவது, மாந்திரிகன் பாம்பினாற் கடிக்கப்பட்ட-வனைக் கருட பாவனையாலே பார்த்து நஞ்சையொழித்தல் போல ஆசிரியன் திருநோக்கத்தால் பாசத்தை யொழித்த-லாகும். கண்ணப்ப நாயனாரை ஆண்டவன் ஆட்கொண்டதும்

இந்நெறியே... 'செங்கமலப் பைம்போது' என்றது, மானசிக தீக்கையைக் குறிக்கும். மானசீக தீக்கையாவது, பாவனையினால் ஆசிரியன் மாணவனது இதய கமலத்தில் புகுந்து அவன் அறிவை வாங்கித் தன் இதய கமலத்தில் கலந்ததாகக் கொண்டு பின் அவன்பால் நிலைப்படுத்தலாம். இஃது ஆமை தன் சினையை நினைத்த அளவிற் காப்பது போலப் பாவனை-யினாற் காப்பதாம். ஈண்டுத் தாமரை மலர். ஆசிரியனுடைய இதய கமலத்தைக் குறித்தல் அறிக. 'அங்கங் குருகினம்' என்பது பரிச தீக்கையைக் குறிப்பதாகும். பரிச தீக்கையாவது, பறவை தனது சினையைச் சிறகால் தழுவிக் காத்தல் போல ஆசிரியன் தன் கையினால் மாணவனது தலை முதல் எங்கும் பரிசித்துப் பாசத்தை யொழித்துக் காத்தலாம். இதனைச் சிவ ஹஸ்த மஸ்த கசை யோகம் என்ப. குருகு-கோழி முதலிய பறவையைக் குறிக்கும். அங்கம்-சிறகு. இனம்-குஞ்சு. ஆகவே பறவைகள் சிறகாற் பார்ப்பைத் தழுவுதல் போல்வதென்பது குறிப்பு. 'அரவம்' - ஒலி; இது வாசிக தீக்கையைக் குறிக்கும். வாசிகமாவது, திருவைந்தெழுத்தை உபதேசித்து நலம் புரிதல். இங்ஙனம் மனம் வாக்குக் காயம் கண் முதலியவற்றாலாம் தீக்கையால் பாசத்தை யொழிப்பவராகிய பக்குவமுள்ள வுயிர்கள் அம்மையப்பராகிய தம்மிடத்து வந்த சேர்தலினால் என உமையொரு பாகற்குக் கொள்ளல் வேண்டும். இவ்வேதுக்களால் எங்கள் பெருமாட்டியாகிய அம்மையையும் எங்கள் பெருமானாகிய அப்பனையும் போல் இயைந்த பொய்கையென்றார். ஈண்டு, அம்மையை முற்கூறியது. மெய்யருளால் தாயுடன் சென்று தந்தையையடைய வேண்டுமென்னும் நுண்பொருள் புலப்படவெண்க" (திருவாசகம் - திருவெம்பாவை, கதிர்மணி விளக்கம், பக்.64-66).

உலகியல் விளக்கம் காட்டி உரை வரைதல்

> **"வையகம் போற்றுதிரு வாசகத்தின் உட்பொருளைக்**
> **கையிற் கனியாகக் காட்டினனால் – செய்யதமிழ்ப்**
> **பேரா சிரியர் பெருமான் கதிரேசன்**
> **ஆராய்ந்து முற்றும் அறிந்து"**

என்பது கவிமணியின் பாராட்டு. இங்ஙனம் திருவாசகத்தின் உட்பொருளைப் பலரும் எளிதிற் புரிந்து கொள்ளும் வண்ணம் செய்வதற்குப் பண்டிதமணியார் கையாண்ட ஒரு முறை உலகியல் விளக்கமாகும். "பண்டிதமணியார் திருவாசக

உரையின் ஒரு தனி வீறு உலகியல் பற்றிய விளக்கம் ஆகும்" ('திருவாசகமும் பண்டிதமணியும்', இலக்கியச் சாறு, ப.87) எனக் கூறுவர் அறிஞர் வ.சுப.மாணிக்கம். "பொருள் புலப்பாட்டிற்காகவும் தெளிவுக்காகவும் அன்றாட உலகியலில் காணப்படும் வழக்குகளைப் பயன்படுத்திக் கொள்ளும் போக்கு பண்டிதமணியிடம் சிறப்பாகக் காணப்படுகின்றது. இப்போக்கு அவரது சமயக் கட்டுரைகளிலும் திருவாசக உரை விளக்கங்களிலும் மிகுதியாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்" (ப.36) என்பர் 'பண்டிதமணியின் நடை நயம்' என்ற நூலாசிரியர் அறிஞர் இரா.மோகன்.

பதச்சோறாக, பண்டிதமணியின் திருவாசகக் கதிர்மணி விளக்கப் பேருரையில் பழுத்த இலக்கியச் சுவையும் பரந்த உலகியலறிவும் வெளிப்படும் ஓர் இடத்தை ஈண்டுக் காண்போம். திருவெம்பாவையில் வரும் பத்தொன்பதாவது பாடலில் பாவை நோன்பு மேற்கொண்ட கன்னிப் பெண்கள் சிலர் தமக்குக் கணவராகும் தன்மையுடையார் இன்ன தகுதியினராதல் வேண்டும் எனத் தாயினும் இனிய பெருமானிடம் விண்ணப்பம் செய்து கொள்ளுகின்றனர்.

"எங்கள் பெருமான் உனக்குஒன்று உரைப்போம் கேள்
எம்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க
எம்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எம்கண் மற்றொன்றும் காணற்க
இங்குஇப் பரிசே எமக்குஎம்கோன் நல்குதியேல்
எங்குஎழில்என் ஞாயிறு எமக்குஏலோர் எம்பாவாய்"

இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம்' என்னும் அடிக்குப் பண்டிதமணி வரைந்துள்ள உரை விளக்கம் வருமாறு :

"இவர்கள் (விண்ணப்பம் செய்து கொள்ளும் கன்னியர்) கூறிய செய்திகள் பலவாகும். அவ்வாறாகவும் 'ஒன்று உரைப்போம்' என்றது, இறைவன் எளிதிற் செவியேற்றற்கென்க. மிகவும் தகுதி வாய்ந்த பெரியோரிடத்து உரியவன் ஒருவன் தன் குறை பற்றிப் பல சொல்ல முற்படுங்கால் காலச் செலவும், தன் அரிய செயற்கு இடையறவும் கருதிப் பல சொற் கேட்டலில் அப்பெரியோன் புறக்கணிக்கக் கூடுமென்று அஞ்சிக் கூறுபவன் 'ஒருவார்த்தை தெரிவித்துக் கொள்வேன்; இடந்தரல் வேண்டும்' என்று நயம்பட வுரைத்துப் பின் விரைவிற்

பலவற்றையுங் கூறுதலை உலகியலிற் காண்கின்றோம். அம்முறையை மேற்கொண்டே 'ஒன்றுரைப்போம்' என்றனர் என்பது... 'எம் கொங்கை நின்னன்பரல்லார் தோள் சேரற்க' என்றதனால் இம்மைப் பயனும், 'எம்கை உமக்கல்லா-தெப்பணியும் செய்யற்க' என்றதனால் மறுமைப் பயனும், 'கங்குல் பகல் எம் கண் மற்றொன்றுங் காணற்க' என்றதனால் வீட்டின்பமும் வேண்டினாரென்பது குறிப்பிற் புலப்படுமாறு அறிக" (திருவாசகம் - திருவெம்பாவை, கதிர்மணி விளக்கம், பக்90-91).

கவிமணியின் புகழாரம்

"புத்தி நுட்பங் கண்டேன்உன்
புலமை கண்டேன் சிவநெறிசேர்
பக்தி கண்டேன் செந்தமிழின்
பாகின் இனிய சுவைகண்டேன்
சித்தம் மகிழ்ந்து நண்பாநீ
செய்த கதிர்மா மணிவிளக்கை
எய்த்த நாளில் வைப்பாக
எண்ணிப் போற்றி வாழ்வேனே"

(மதிப்புரைச் சுருக்கத் திரட்டு, திருவாசகம் திருவெம்பாவை, கதிர்மணி விளக்கம், ப.xxvi)

என்னும் கவிமணியின் வாக்கு, பண்டிதமணியின் திருவாசக உரைச் சிறப்புக்குக் கட்டியம் கூறுவது மட்டுமன்று; 'கதிர்மணி விளக்கம்' என்னும் பண்டிதமணியின் திருவாசகப் பேருரையை மனம் கலந்து பயிலும் எவரும் கூறும் அனுபவ மொழியும் ஆகும்.

5

சீர்மிகு மொழிபெயர்ப்பாளர்

"ஒரு நல்ல மொழிபெயர்ப்பாளனின் திறம் என்னவென்றால் படிப்பவனுக்கு மொழிபெயர்ப்பிலும் மூலத்தின் அழகு குன்றாமலும் இது மற்றொன்றின் மொழிபெயர்ப்பு என்பது வெளிப்பட்டு நின்று துன்புறுத்தாமலும் மொழிபெயர்ப்பதுதான். பண்டிதமணியார் இதில் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றுள்ளார் என்றே கூற வேண்டும்."

- ஆ. பழநி*

கவியரசர் பாரதியாரின் கருத்தில் 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' எனில் நாம் இன்றியமையாது மேற்கொள்ளத் தக்க பணிகள் இரண்டு. அவையாவன :

1. பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல்.
2. இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்றல்.

இவ்விரு பணிகளுள் மொழிபெயர்ப்பின் அருமைப்பாட்டினையும் இன்றியமையாமையையும் பண்டிதமணி நன்றாகவே உணர்ந்திருந்தார். 'தமிழும் தமிழ்ப் பணியும்' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் அவர் இதுபற்றிக் குறிப்பிட்டிருப்பது வருமாறு :

"நம் அருந்தமிழ் நன்னிலைப்படுதற்குச் செயற்பால காரியங்களைச் சுருக்கிக் கூறுவேன். உலகத்து வழங்கும் பல மொழிகளிலும் உள்ள அரிய பல கலைகளெல்லாம் தமிழ் மொழியில் வரல் வேண்டும். ஆங்கில மொழியிலும்

* பண்டிதமணியின் நாடகத் தமிழ், ப 279.

வடமொழியிலுமிருந்து மொழிபெயர்க்க வேண்டிய சிறந்த நூல்கள் பலவுள்ளன... நம் தமிழ்மொழியின் ஆக்கத்திற்கு ஒருதலையாக வேண்டுவனவற்றுள் இம்மொழிபெயர்ப்புச் செயலும் ஒன்றாம்'' (உரைநடைக்கோவை: இரண்டாம் பகுதி, இலக்கியக் கட்டுரைகள், பக்.25-26).

இங்ஙனம் நம் தமிழ்மொழியின் ஆக்கத்திற்கு இனிச் செய்ய வேண்டிய மொழிபெயர்ப்புப் பணி குறித்துக் கருத்துரைத்ததோடு பண்டிதமணி நின்றுவிடவில்லை; 'அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்' என்னும் வான்புகழ் வள்ளுவர் வாய்மொழிக்கு ஏற்பத் தாமே நேரடியாக வடமொழியினின்று அரிய பல நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியில் முனைப்புடன் ஈடுபட்டார்; "வடமொழிக்கண்ணுள்ள அளவை நூல்களும், சுவையாராய்ச்சி நூல்களும், பெருங்காப்பியங்களை ஆராய்தற்குக் கருவியாகவுள்ள நூல்களும், பொருணூல்களும், அறிவு நூல்களும், பிறவும் மொழிபெயர்க்கப்படல் வேண்டும். இச்செயற்கு வடமொழியோடு தமிழ் பயின்றார் பலர் வேண்டும்'' (உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, இலக்கியக் கட்டுரைகள், ப.26) என எழுதியதற்கு இணங்க அவர் தாமே வடமொழியில் உள்ள சிறந்த நூல்களை அவ்வப்போது தமிழில் மொழிபெயர்த்துத் தந்தார்.

மொழிபெயர்ப்புக் கலை குறித்தும் பண்டிதமணி திட்டவட்டமான- தெளிவான - கருத்தினைக் கொண்டிருந்தார். "அமிழ்தினு மினிய தமிழ்மொழியை அணிசெய்து நிற்கும் நூல்கள் முதனூல் வழிநூல் என இருதிறத்து ளடங்குவனவாம். வழிநூல், தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த் ததர்ப்பட யாத்தல் என நான்கு வகைப்படுமென்ப. இவற்றுள் இறுதியதாகிய மொழிபெயர்த் ததர்ப்பட யாத்தலென்பது வேற்று மொழியிலுள்ள பொருளை அது கிடந்தவாற்றானே தமிழ் நூலாகச் செய்வதாம். மொழிபெயர்த்த லென்றதனானே பொருள் பிறழாமைச் செய்ய வேண்டுமன்பது போதரும். தமிழ் மொழியின் ஆக்கங் கருதிய ஆசிரியன் அதற்கு வேற்றுமொழிப் பொருளைத் தமிழில் மொழிபெயர்த்துரைத்தலையும் ஒன்றாக எண்ணி அதனை வழியின் வகையுட்படுத்துரைப்பாராயின், இம்மொழிபெயர்ப்பின் இன்றியமையாமையைப் பற்றிப் பிற கூற வேண்டுவதென்? மொழிபெயர்க்கப்படும் நூல்

பெயர்த்துரைக்கப்படும் மொழிக்கண்ணுள்ள குறையை நிரப்புவதாக இருத்தல் வேண்டும். அதுவே அதன் பயனாகும்" (சுக்கிர நீதி, முகவுரை, ப.1) எனச் 'சுக்கிர நீதி'க்கு எழுதிய முகவுரையில் பண்டிதமணி மொழிபெயர்ப்பின் இன்றியமையாமையையும் பயன்பாட்டையும் தெள்ளிதின் உணர்த்தியுள்ளார்.

1. பண்டிதமணியின் மொழிபெயர்ப்பு நூல்கள்

பண்டிதமணி வடமொழியில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்த்துத் தந்துள்ள நூல்கள் ஐந்து. அவையாவன :

1. *சுலோசனை (1922)*
2. *உதயன சரிதம் (1924)*
3. *சுக்கிர நீதி (1926)*
4. *மண்ணியல் சிறுதேர் (1933)*
5. *கௌடலீயம் - பொருணூல் (1955)*

இவற்றுடன் 'பிரதாப ருத்திரீயம்', 'மாலதி மாதவம்' என்னும் இரு நூல்களையும் பண்டிதமணி மொழிபெயர்த்திருப்பதாகவும், ஆயின் அவை நூல் வடிவம் பெறவில்லை என்றும் கூறுவர் அறிஞர்.

இனி, இம்மொழிபெயர்ப்பு நூல்கள் குறித்து நிரலே சுருங்கக் காண்போம்.

1. 'சுலோசனை'

'சுலோசனை' என்னும் இக்கதை நூல் வடமொழியில் இருந்து தமிழில் மொழிபெயர்க்கப் பெற்றது; இராமாயணத் தொடர்பு உடையது; சுலோசனை என்னும் கற்புக்கரசியைப் பற்றியது; அவலச் சுவை ததும்பி நிற்பது. சுலோசனையின் அருங்கற்பும், பெருங்குணங்களும், அறிவுடைமையும், தலைவன் பிரிவால் துன்புறும் நிகழ்ச்சிகளும் படிப்பார்க்கு வியப்பும் உருக்கமும் ஊட்ட வல்லனவாம். உண்மைக் கற்பின் நிலை இத்தகையது என்று இதனால் தெள்ளிதின் உணரலாம் சுலோசனையின் கணவனான இந்திரஜித்தின், அறுபட்ட கையும் தலையும், எழுதுவதும் பேசுவதும் கற்பின் ஆற்றலைப் புலப்படுத்துவனவாகும்.

"கற்பிற் சிறந்த கனங்குழையார் தம்முள்ளே
சொற்புகழின் மிக்காள் சுலோசனையே — பொற்பிற்
றிகழுடலைத் தீப்பெய்து சென்றனளா லன்பன்
புகுமிடத்தைச் சார்ந்தின் புற" **(ப.134)**

என்பது பண்டிதமணி இம்மொழிபெயர்ப்பு நூலின் முடிவில் படைத்துத் தந்திருக்கும் முத்தாய்ப்பான வெண்பா ஆகும்.

"இதன் (சுலோசனையின்) நடையும் கருத்துக்களும் நூதனமாகப் பெயர்த்துரைக்கப் பெற்ற மொழிகளும் மிக்க இன்பம் பயக்கின்றன. இப்புத்தகம் என்போலியர்க்கு ஒரு புது விருந்தாகவே காணப்படுகின்றது. வடமொழியிலிருந்து பெயர்த்துரைக்கப் பெற்ற நூல்களுள் இது சிறந்து விளங்குகின்றது என்று சொல்லத் தட்டில்லை. பிரசங்க ஆற்றல், செய்யுள் செய்யும் வன்மை, நூலாராய்ச்சித் திறன் முதலியவை அமைந்திருத்தல் போலவே மொழிபெயர்க்கும் ஆற்றலும் தங்கள்பால் நன்கு அமைந்திருக்கின்றதென்பதை இந்நூலாற் கண்டேன்" (சுலோசனை, மதிப்புரைகள், ப.4) என உ.வே.சாமிநாதையர் இம்மொழிபெயர்ப்பு நூலைப் பாராட்டிப் பண்டிதமணிக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அல்லொலி கலவாமல் வடமொழிப் பெயர்களுக்கும் தமிழுருவம் தந்த இலக்கிய வனப்பு மிளிரப் பண்டிதமணி எழுதியுள்ள பெருமிதமான தமிழ் நடைக்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு :

"இந்திரசித்து அவள் (சுலோசனையின்) சொற்களைக் கேட்டு, 'மருள்விழியாய்! நிகழ்ந்த செய்திகளனைத்தும் உணர்ந்திருந்தும் இங்ஙனங் கேட்டலென்னை? பன்னாள் வளர்க்கப்பட்டதும், மிக இனியதுமாகிய நமது காதற் கொடியை யான் என்றும் மறவேன். நின்பால் எது பற்றியும் எனக்குக் கோபமின்று. காலத்தின் மாறுபாட்டை அறிந்திருக்கிறாயன்றோ? என் தந்தை சானகியைக் கவர்ந்தமையாற் பெரிய கேடுகளின் றொடர்ச்சி யுண்டாயது... இராமலக்குமணர்களுடைய ஆண்மையை அறியாதவனாகவே அவ்விராவணனும் மூவுலகத்திலும் வெற்றியைத் தரும் ஒரு வேள்வியை நிகும்பலையிற் செய்தற்கு இன்று என்னை ஏவினான். நின்னைக் காண்டலிலவாவும் மனத்தினையுடைய யான் வழியிடையே ஈண்டு போதரலானேன். ஆதலின் எனக்கு

விடை தருவாயாக. கவலையை ஒழிக்க. மிக விரைந்து திரும்புவேன்' என்று இவ்வாறு கூறினான்" (சுலோசனை, ப.105).

இராமன், சானகி, இலக்குமணன், கும்பகன்னன், இராவணன், இந்திரசித்து என்றாற் போல் இராமாயண மாந்தர்களின் பெயர்களைத் தமிழ்மை தவழக் கையாண்டிருப்பது பண்டிதமணியின் தனித்தன்மை ஆகும்.

2. 'உதயன சரிதம்'

'உதயன சரிதம்' என்னும் இந்நூல் வற்ச நாட்டைச் சார்ந்த கௌசாம்பி நகரத்தில் பாண்டவ குலத்தில், சகச்சிரானீகன் என்னும் மன்னனுக்கு மிருகாவதிபால் தோன்றிய உதயனனது வரலாற்றை விரித்தும், அவன் புதல்வன் நரவாகனதத்தன் வரலாற்றைச் சுருக்கியும் கூறுவதாகும். இந்நூல் தமிழ்ப் பெருங்காப்பியங்களுள் ஒன்றாகிய பெருங்கதைக்குத் தோற்றுவாயாக அமைந்துள்ளது. "'உதயனன்' என்பது பிராகிருதத்தில் 'உதயணன்' என்று வரும். தமிழிலுள்ள பெருங்கதை முதலியவற்றுள், பிராகிருதத்துள்ள வண்ணமே 'உதயணன்' என்று கூறப்பட்டுள்ளது. இச்சரிதம் வடமொழி-யினின்று மொழிபெயர்க்கப் படுதலின், வடமொழியிலுள்ள படியே 'உதயணன்' என்று கண்டு வழங்கப்பட்டுள்ளது" (உதயன சரிதம், முன்னுரை, ப.14) எனப் பண்டிதமணி இந்நூலின் முன்னுரையில் எழுதியிருக்கும் பெயர் விளக்கக் குறிப்பு, அவரது தமிழ் உணர்வைப் புலப்படுத்துவதாகும்.

இந்நூலில் இடையிடையே வாய்ப்பு நேரும் இடங்களில் உலகத்தாரை நோக்கிப் புலப்படுத்தும் நீதி வாக்கியங்களும், ஒவ்வொரு பகுதியின் இறுதியில் கதையின் சாரத்தைச் சுருக்கித் தெரிவித்திருக்கும் வெண்பாக்களும், உரிய இடங்களில் சிவபெருமானுடைய திருவருளின் பெருமையைப் புலப்படுத்தியுள்ள பகுதிகளும் பயின்று மகிழத்தக்கனவாகும். பதற்சோறாக, 'வாசவதத்தை திருமணம்' என்னும் ஆறாம் வகுப்பின் முடிவில் பண்டிதமணி படைத்திருக்கும் அழகிய வெண்பாவை இங்கே சுட்டிக் காட்டலாம்.

"ஐம்பொறிக்கு மின்ப மளிக்கு மமுதமென
நம்பு மடவரலை நன்றுமணந் – திம்பரிடைக்
கற்பு முறையிற் கலந்தின்ப மெய்தினான்
பொற்பு மதனிரதி போல்" **(உதயன சரிதம், ப.33)**

செய்யுள் நடையாகவே நூல்கள் இயற்றும் ஆற்றல் இருந்தும் வசன நடையாக இச்சரிதத்தைப் பண்டிதமணி இயற்றியதற்குக் காரணம் எல்லோரிடத்தும் உள்ள அன்பின் மிகுதி என்றே எண்ணத் தோன்றுகிறது.

“வடமொழிச் சொற்றொடர்களைத் தூய செந்தமிழ் நலங்கனியும் வண்ணம் மொழிபெயர்த்துள்ள தங்கள் புலமைத் திறன் கற்போருள்ளத்தைக் கவரவல்லது. மொழிபெயர்ப் பானமைந்த உரைநடை நூல்களுள் இந்நூல் தலைநின்று விளங்குந் தகுதியுடையது” (உதயன சரிதம், அபிப்பிராய பத்திரங்கள், ப.11) என்பது பேராசிரியர் கா.சுப்பிரமணிய பிள்ளை இந்நூலுக்குச் சூட்டியுள்ள புகழாரம் ஆகும்.

‘சுலோசனை’யும் (1922), ‘உதயன சரித’மும் (1924) மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின் வெளியீடுகள்; வடமொழிக் காப்பியம் தழுவிய கதைகள்; பண்டிதமணியின் முதல் மொழிபெயர்ப்புகள். பண்டிதமணி நூற்றாண்டின் போது இவை இரண்டையும் சேர்த்து ஒரு நூல் வடிவில் ‘உதயன சரிதமும் சுலோசனையும்’ என்னும் தலைப்பில் வெளியிடப் பெற்றுள்ளன. “அல்லொலி கலவாமை, சொல்லாக்கம், வடமொழிப் பெயர்களைத் தமிழுருவாக்கல், பெருமிதத் தமிழ்நடை, புணர்ச்சித் தொடர்கள், தொடர் நெடுமை, இலக்கிய வனப்பு என்ற நெறிகளை இந்நூலால் அறியலாம். மொழிபெயர் கலைஞர்கட்குப் பண்டிதமணியின் மொழிபெயர் ஆக்கங்கள் பாட நூல்களாகும் என்பது தெளிவு. இந்நெறிகளைப் ‘பண்டிதமணியம்’ என்று பெயரிடலாம்” (விழாப் பதிப்புரை, ப.6) எனப் பதிப்புரையில் சுட்டுவர் அறிஞர் வ.சுப.மாணிக்கம்.

3. ‘சுக்கிர நீதி’

பண்டிதமணி வடமொழியில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்த்துத் தந்த நூல்களுள் முதன்மையாகக் கருதத்தக்கது ‘சுக்கிர நீதி’. இந்நீதி நூலினை மொழி-பெயர்த்ததற்கான காரணத்தைப் பண்டிதமணியே முகவுரையில் அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்துள்ளார். அவர் கூறும் காரணம் வருமாறு :

“திருக்குறள் முதலிய நீதி நூல்களுட் பொருட் பகுதி கூறப்பட்டிருப்பினும் பொருளையே சிறப்பாக விதந்தெடுத்துக்

கூறுந் தனிநூலிற் போல அதன்கண் விளக்கமாகக் காண்டற்கியலாது. பொருணூல் தனியே தமிழில் இல்லாத இக்குறையை நிரப்ப எண்ணிய பொழுது வடமொழிக் கண்ணுள்ள பொருணூல்கள் நினைவிற்றோன்றின. வடமொழிக் கட் பொருணூலியற்றினார் வியாழன், வெள்ளி, சாணக்கியன் முதலியோராவர். அவர் இயற்றிய நூல்களுள், பாருகற்பத்தியம், ஔசநசம், கௌடிலீயம் என்னும் இம்மூன்றும் சிறந்தனவாக ஆன்றோரரான் மேற்கொள்ளப்பட்டன. இவற்றுள் ஔசநசம் என்பது சுக்கிரரால் இயற்றப்பட்டது. அது விரிந்து பரந்த நூலாதலின் அதன் சுருக்கமாகத் தொகுக்கப்பட்டது சுக்கிர நீதியாகும். ஆகவே கருத்து வகையில் ஔசநசத்தின் சாரமாக இஃது அமைந்துள்ளதென்பது போதரும். அதுபற்றியே இதற்குச் சுக்கிர நீதி சாரம் என்னும் பெயரும் நிலவுவதாகும். பொருணூலியற்றிய ஆசிரியர்களுள்ளே சுக்கிரர் தலைவராக மதிக்கப்பட்டனர் என்பதைக் கௌடிலீயமென்னும் பொருணூற் றொடக்கத்தில் 'சுக்கிரற்கும் பிருகற்பதிக்கும் வணக்கம்' என்று அதன் ஆசிரியராகிய சாணக்கியரும், 'வெள்ளியும் பொன்னும் என்போர் விதிமுறை' என்று கம்ப நாடரும் முறைப்படுத்த முதற்கட் கூறுமாற்றான் நன்குணர்தல் கூடும்'' *(சுக்கிர நீதி, முகவுரை, பக்.1-2).*

இம்மொழிபெயர்ப்பு நூல் மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை வெளியீடாக 1926-ஆம் ஆண்டில் வெளிவந்தது. இரண்டாம் பதிப்பு 1982-ஆம் ஆண்டில் பண்டிதமணி நூற்றாண்டு விழாவின்போது வெளிவந்தது. 'சிறப்புப் பாயிரம்', 'ஆராய்ச்சி மதிப்புரை' 'அபிப்பிராயங்கள்' என்னும் பெயர்களில் உ.வே.சாமிநாதையர் உள்ளிட்ட சான்றோர் பெருமக்கள் நூல் பற்றிய தங்களின் மதிப்பீடுகளைத் தந்துள்ளனர். "இந்நூன் மூலம் எத்துணை நயமுடைத்தோ அத்துணை நயமுடைத்து இம்மொழிபெயர்ப்புமெனக் கொள்க. உரைநடையில் மொழிபெயர்ப்பு வடிவிலுள்ள நூல்களனைத்திற்கும் இதுவே தலைமணி நூலாக விளங்குகின்றது. ஆசிரியர் சிவஞான சுவாமிகளது மொழிபெயர்ப்பு நூல்கள் தமிழிலே ஏற்பட்ட காலத்திற்குப் பின் இச் 'சுக்கிர நீதி' மொழிபெயர்ப்பே மிகவும் போற்றத்தக்கதாக அமைந்துள்ளது. இதற்குக் காரணம் இதன் ஆசிரியராகிய பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியாரவர்களது இணையற்ற தென்மொழி வடமொழித் தேர்ச்சியேயாம்

இக்காலத்தில் இவரைப் போல இரு மொழியிலும் நுண்மாணுழைபுலமுள்ள கலைஞரைக் காண்டல் அரிது. தமிழில் இன்னும் மொழிபெயர்ப்பு இயற்றக் கருதுபவர்கள் இவ்வாசிரியரையே தங்கட்குத் தக்கதோர் வழிகாட்டியாகக் கருதற்பாலர்" (சுக்கிரநீதி, ஆராய்ச்சி மதிப்புரை, ப.28) என்பது பேராசிரியர் கா.சுப்பிரமணிய பிள்ளையின் ஆராய்ச்சி மதிப்புரை. "முதனூலிற் கண்டதனை முகந்து கொண்டு தமிழ் மொழியிற் குறையாது கொடுப்பதுடன், அசையேனுங் கூடாமல் அளந்தெடுத்துதவுமிவர் சொற்செட்டும் பொருணிறைவும் வரன்முறை வணிகர் வளத்தழகை வலியுறுத்தி நிற்கும். பொருந்துமிடந்தொறும் இந்நூனீதி-களுக்கு இயைபும் நெருக்கமுமுடைய தமிழ்ப் பொருணூல் முதுமொழிகளையும், இறவாக் குறளடிகளையுந் தொடுத்திணைத்தெடுத்துக் காட்டிச் செல்லுஞ் செவ்வி மிகப் பாராட்டற்பாற்று" (சுக்கிர நீதி, ஆராய்ச்சி மதிப்புரை, பக்.35-36) என்பது நாவலர் ச.சோமசுந்தர பாரதியாரின் நெஞ்சார்ந்த பாராட்டு. இங்ஙனம் சான்றோர்கள் பலரும் ஒருமித்த குரலில் போற்றும் வண்ணம் பண்டிதமணியின் 'சுக்கிர நீதி' மொழி-பெயர்ப்பானது சிறந்த தமிழ்நடையில் மொழிபெயர்ப்பார்க்-கெல்லாம் வழிகாட்டும் இயல்பினதாய் மிளிர்கின்றது. மொழிபெயர்ப்பின் கீழே தந்துள்ள விளக்கக் குறிப்புகளில் இருந்தே பண்டிதமணியின் அறிவு ஆராய்ச்சித் திறனை நன்கு உணர்ந்து கொள்ள முடிகின்றது.

திருக்குறட் பொருட்பாலினை ஆராய்தற்குத் தக்கதோர் கருவி நூலாகச் 'சுக்கிர நீதி' விளங்குகின்றது. திருக்குறள் சுருக்கமாகக் கூறியுள்ள உண்மைகளுக்குச் 'சுக்கிர நீதி'யுள் விளக்கமான உதாரணங்கள் கிடைக்கின்றன. திருக்குறட் கருத்துக்களும், பரிமேலழகர் உரைக் கருத்துக்களும் 'சுக்கிர நீதி'யுள் பல இடத்தும் காணப்படுகின்றன. திருக்குறளையும் 'சுக்கிர நீதி'யையும் ஒப்பிட்டு ஆராய்வதற்கு நிறைய இடமுள்ளது. ஓர் எடுத்துக்காட்டு : அரசன் கடுஞ்சொல்லனாய் இருத்தல் கூடாது என்று 'சுக்கிர நீதி' நன்கு எடுத்துரைக்கின்றது. ஆயின், காட்சிக்கு எளியனாதல் வேண்டும் என்று அது குறிப்பிடவில்லை. இவ்விரண்டும் ஒருங்கே திருக்குறள் 'இறைமாட்சி'யுள் 'காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல், மீக்கூறு மன்னன் நிலம்' எனக் கூறப்பட்டுள்ளது. இதுபோல் ஒத்தும் உறழ்ந்தும் காண்பதற்கு

உரிய இடங்கள் பலவற்றைப் பண்டிதமணி ஆங்காங்கே சுட்டிக்காட்டியுள்ளார்.

4. 'மண்ணியல் சிறுதேர்'

'மண்ணியல் சிறுதேர்' என்னும் நூல், வடமொழியில் அமைந்த 'மிருச்சகடிகம்' என்னும் நாடகத்தின் மொழி பெயர்ப்பு ஆகும். 'தமிழில் போதிய நாடக நூல்கள் இல்லை' என்னும் குறையைப் போக்குவதற்காகப் பண்டிதமணியால் மொழிபெயர்க்கப் பெற்ற நூல் இது. இதனைப் பண்டித மணியே தம் முகவுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :

"நம் அமிழ்தனைய தமிழ்மொழி, இயல் இசை நாடகம் என முத்திறப்படுத்தப்பட்டு நிகழ்ந்த முறையை நோக்குவோமாயின், இதன்கண் அவ்விலக்கணங்கள் பண்டைக் காலத்தில் எத்துணை விரிவாக அமைந்திருந்தன என்பது புலனாகும். இற்றை ஞான்று நம் தீந்தமிழில் நாடகப் பகுதிகள் ஒரு சிலவன்றி முழுதும் காண்டற்கில்லை. ஒரு மொழியில் ஒரு காலத்தில் ஒரு பகுதி விரிவாக அமைந்து பிறிதொரு காலத்தில் அப்பகுதி எக்காரணத்தாலோ குறைந்து விடுமாயின், அக்குறையை நிறைவிக்க வேண்டுவது அம்மொழிப் பற்றுடையார்க்குரிய கடமையாகுமன்றோ! இக்குறிக்கோளைக் கடைப்பிடித்தே தமிழில் நாடகக் கலையின் வளர்ச்சி கருதி வடமொழியிலுள்ளதொரு பெரிய நாடகத்தைத் தமிழாக்க முற்பட்டேன்" (மண்ணியல் சிறுதேர், முகவுரை, ப.4).

'மண்ணியல் சிறுதேர்' என்னும் இந்நாடகத்திற்கு முதனூல் வடமொழியில் 'சூத்திரகன்' என்னும் அரசரால் இயற்றப்பட்ட 'மிருச்ச கடிகம்' என்பதாகும். மிருத்-மண்; சகடிகா-சிறுதேர்; மண்ணில் இயற்றப்பெற்ற சிறுதேர்; சிறுவர் விளையாடுவதற்கு உரியது. அதனை உடையது இந்நாடகமாதலின் இதனை 'மிருச்சகடிகம்' என்பர் நாடக ஆசிரியர். "பேரறிவாளராகிய சூத்திரகன் உலகுக்குப் பெருந்திருவாக மிருச்சகடிகத்தைத் தந்துள்ளார். ஜூலியஸ் சீசர் நாடகத்தைப் பற்றிப் பாராட்டும்போது, இந்நாடகத்தை எழுதி வேறு எதையும் அதற்குப் பின் எழுதாதிருந்தாலுங்கூட சேக்ஸ்பியர் அவர் காலத்தில் முதல் நாடக ஆசிரியராக மதிக்கப்பட்டிருப்பார் என்கிறார் ஓர் அறிஞர். சூத்திரகன் ஒரே நாடகத்தைத் தான் இயற்றினார். அவர் காலத்தில் மட்டுமல்லாமல் இக்காலத்திலும் தலைசிறந்த நாடக

ஆசிரியர்களுள் ஒருவர் என்னும் பெயர் விளங்கும் வண்ணம் அதை இயற்றினார்... ஒன்றே செய்தார்; அதுவும் நன்றே செய்தார்" (மண்ணியல் சிறுதேர் - ஒரு மதிப்பீடு, ப.142) என்பது 'மண்ணியல் சிறுதேர்' பற்றிய கவிஞர் மீராவின் மதிப்பீடு.

முதனூலில் அமைந்த சுலோகங்களின் எண்ணிக்கை 382 ஆகும். அவை தமிழில் 371 செய்யுட்களாகப் பண்டிதமணியால் பெயர்த்தியற்றப்பட்டுள்ளன. நடிப்பதற்கும் படிப்பதற்கும் தகுதி வாய்ந்த நாடகமாகப் பத்து அங்கங்கள் கொண்டதாய் இதனை உருவாக்கியுள்ளார் பண்டிதமணி. "சங்கப் புலவரும் சைவச் சான்றோரும் சேர்த்து வைத்த செழும் பொருணிதியை ஈட்டி யியற்றி அவையறிந்தீயும் வண்மை சான்ற வணிக மணியெனத் தமிழகம் போற்றும் பண்டிதமணியவர்கள் இம்மொழிபெயர்ப்பினை நோக்கக் கவிமணியெனவும் விளங்குகின்றார்கள். தமிழ் நலங் கனிந்த செவ்விய பாடல்களாகிய நவமணிக் குவையைத் தாங்கி இம் 'மண்ணியல் சிறுதேர்' நடக்கின்றது... பக்கந்தோறும் காணப்படும் அடிக்குறிப்புக்கள் நூல் பொருளைத் தூய்மை செய்து நுணுகி யுணர்வதற்கும், நூல் நயத்தினைக் கண்டு மகிழ்வுறுதற்கும் கருவியாக அமைந்து நின்றன. உரைநடை தெள்ளிதினியன்ற சொற்களானமைந்து உள்ளுந்தோறும் இனிமை பயப்பது" (மண்ணியல் சிறுதேர், அணிந்துரை, பக்.22-23) என்பது சுவாமி விபுலானந்தர் இம்மொழிபெயர்ப்பு நாடகத்திற்குத் தந்திருக்கும் மதிப்புரை.

'மண்ணியல் சிறுதேர்' பண்டிதமணி மொழிபெயர்ப்புத் திறனோடு செய்யுள் இயற்றும் திறனும் கைவரப் பெற்றவர் என்பதைப் புலப்படுத்தி நிற்கின்றது. சான்றாக,

"சீர்த்தி மிகும்வசந்த சேனையெனும் பெண்மணியும்
ஆர்த்தகுணச் சாருதத்த அண்ணலும் – போர்த்தபெருந்
துன்பமெலாம் உண்மைத் துணையறத் தினாற்போக்கி
இன்பநெறி நின்றார் இவண்" **(மண்ணியல் சிறுதேர், ப.55)**

என மண்ணியல் சிறுதேர்க் கதைச் சுருக்கத்தினையே ஓர் அழகிய வெண்பா வடிவில் பண்டிதமணி படைத்துக் காட்டியிருப்பதை இங்கே சுட்டிக் காட்டலாம்.

பண்டிதமணியின் மொழிபெயர்ப்புப் பணியில் மணிமுடியாக விளங்குவது 'மண்ணியல் சிறுதேர்' ஆகும். வடமொழியில் சூத்திரக மன்னரால் இயற்றப்பட்ட இந்த

நாடகக் காப்பியத்தினைப் பண்டிதமணி மூலத்தின் சுவையும் அழகும் குன்றாமல் மொழிபெயர்த்து ஆக்கி இருக்கும் சிறப்பினைத் தமிழறிஞர்கள் மட்டுமன்றி, வடமொழி வல்லாரும் வானளாவப் போற்றுகின்றனர்.

"நம் பண்டிதமணி ஆரியம் போல் தமிழும் தமிழே போல் ஆரியமும் விரும்பிப் பயின்ற வித்தகரென்பது இம் மண்ணியல் சிறுதேரைப் படிப்பவருக்கு விசதமாகும். இயலொழுக்காய் முதனூல் இதுவே எனத்தக்க எழில் வளமும் நடை நலமும் சுவை பலவும் செறிந்தொளிரும் செவ்வியுடையது இந்நூல்" (மண்ணியல் சிறுதேர், ஆராய்ச்சி மதிப்புரை, ப.28) என்பது நாவலர் ச.சோமசுந்தர பாரதியாரின் பாராட்டு. ச.சோ.பாரதியார் போன்ற தமிழறிஞர்கள் மட்டுமன்றி வடமொழியில் பழுத்த புலமை பெற்ற வல்லுநர்களும் பண்டிதமணியின் மொழிபெயர்ப்புத் திறனை விதந்து கூறியுள்ளனர். இவ்வகையில் இராமேசுவரம் வடமொழிக் கலாசாலை முதல்வர் சி.சுப்பிரமணிய அய்யரின் கருத்து இங்கே மனங்கொளத் தக்கதாகும். அக்கருத்து வருமாறு :

"வடமொழி நாடகங்களின் தமிழ் மொழி பெயர்ப்புக்-களில் பெரும்பாலும் செய்யுட்களை வசன நடையிலேயே எழுதிவிடுதல் இதுவரை நிகழ்ந்து வந்த வழக்கம். ஆனால் மண்ணியல் சிறுதேர் மொழிபெயர்ப்பாளராம் பண்டிதமணி அவர்கள் மேற்கூறிய வழக்கத்தை மேற்கொள்ளாது செய்யுட்களைச் செய்யுளாகவே அமைத்துள்ளார். இதனால் முதனூலுக்குரிய இலக்கியப் பெருமை சற்றும் குன்றாமல் மொழிபெயர்ப்புக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்நூல் வழிநூலாயினும் முதனூல் போலவே விளங்குகின்றது.

நூலின் பல்வேறு பகுதிகள் முதனூலோடு ஒப்பிட்டுத் துருவித் துருவிப் பார்க்கப்பட்டன பார்க்கப் பார்க்க மொழிபெயர்ப்பின் அருமை மேன்மேலும் விளங்கலாயிற்று. கருத்திலோ, அமைப்பிலோ, நடையிலோ, சுவையிலோ சற்றும் பிறழாமல் முதனூலின் பிரதிபிம்பம் போல் விளங்குகின்றது என்று துணிவுடன் கூறலாம். வடமொழியில் தெளிவு குன்றிக் கிடக்கும் சில இடங்களில் இத்தமிழ் நூல் தெளிவு மலிந்து காணப்படுகின்றது. இவற்றால் இது முதனூலினும் மேம்பாடுடையதாய்க் கருதற்பாலது" (மேற்கோள் : ஆ.பழநி, பண்டிதமணியின் நாடகத் தமிழ், ப.282). புலவர் ஆ.பழநி

'பண்டிதமணியின் நாடகத் தமிழ்' என்னும் தம் நூலில் முத்தாய்ப்பாகக் குறிப்பிடுவது போல், "இந் நாடகத்துள் வரும் பாத்திரங்களின் பெயரைத் தமிழ்ப் பெயர்களாக மாற்றிவிட்டு மிகச் சிலவாய இடங்களில் காணப்படும் வடமொழி மரபைக் காட்டும் உரையாடற் பகுதியையும் மாற்றிவிட்டால் இது தனியே தமிழில் யாக்கப்பட்ட நாடகமாக மாறிவிடும். அந்த அளவிற்கு இம் மொழிபெயர்ப்பில் 'தமிழ்மை' தவழ்கின்றது. இவ்வாறு தமிழ்மை தவழச் செய்தது பண்டிதமணியார்க்குரிய தனிச் சிறப்பாகும்" (ப.284).

5. 'கௌடலீயம் - பொருணூல்'

'கௌடலீயம் - பொருணூல்' என்னும் இம் மொழிபெயர்ப்பு நூலுக்கு முதனூலாக விளங்குவது 'கௌடலிய அர்த்த சாஸ்திரம்' என்ற வடமொழி நூலாகும். இந்நூல், 'அதிகரணம்', 'பிரகரணம்', 'அத்தியாயம்' என்ற மூவகைப் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டதாகத் திகழ்கின்றது. 'அதிகாரம்' எனத் தமிழில் கூறப்படுவது போல், அதிகரணம் என்ற இவ் வடமொழிப் பெயரும், பல உட்பிரிவுகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு பெரும்பிரிவினை உணர்த்துவதாகும். இந்நூலில் நூற்றெண்பது பிரகரணங்கள் (சூத்திரங்கள்) - நூற்றைம்பது அத்தியாயங்கள் - பதினைந்து அதிகரணங்கள் உள்ளன.

கௌடலீயத்தின் முதல் மூன்று அதிகரணங்களையே பண்டிதமணி மொழிபெயர்த்துள்ளார்; அதற்கு மேல் அவரது உடல் நலக் குறைவால் மொழிபெயர்ப்புப் பணி தடைப்பட்டது. நான்கு முதல் பதினைந்து வரையிலான அதிகரணங்களைப் பண்டிதமணியை அடியொற்றி வித்துவான் பி.ஸ்ரீ.இராமானுஜாச்சாரி மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

"ஒருவரையும் எள்ளலாகாது; எல்லோருடைய கொள்கை-களையும் கேட்டல் வேண்டும்; ஒருவன் சிறுவனாயினும் அவன் சொல் பொருளுடையதாயின் அறிவுடையான் ஏற்றுக் கொள்ளக் கடவன் என்பன விசாலாக்கர் கொள்கைகளாம்" (முதல் அதிகரணம், பதினோராம் பிரகரணம், பதினைந்தாம் அத்தியாயம்) என்னும் சுலோகத்திற்கு எழுதிய குறிப்புரையில் பண்டிதமணி இதனோடு ஒப்புமை உடைய திருக்குறளையும் பரிமேலழகர் உரை விளக்கத்தையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

**"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"**

என்னும் திருக்குறளுக்கு, 'குணங்கள் மூன்றும் மாறிமாறி வருதல் யாவருக்கும் உண்மையின் உயர்ந்த பொருள் இழிந்தார் வாயினும், இழிந்த பொருள் உயர்ந்தார் வாயினும், உறுதிப்பொருள் பகைவர் வாயினும், கெடுபொருள் நட்டார் வாயினும் ஒரோ வழிக் கேட்கப்படுதலான் 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் என்றார்' என்று பரிமேலழகர் எழுதிய உரைக் குறிப்பில் இக்கருத்துத் தெளிவுறுத்தப்பட்டிருத்தல் அறிக" (கௌடலீயம் பொருணூல், ப.86) என்பது பண்டிதமணி அடிக்குறிப்பில் தந்திருக்கும் அரிய ஒப்பீட்டு விளக்கம் ஆகும்.

II. பண்டிதமணி – மொழிபெயர்ப்பாளராக

இனி, ஒரு மொழிபெயர்ப்பாளர் என்ற நிலையில் பண்டிதமணியிடம் குடிகொண்டிருக்கும் தனிச்சிறப்புகள் யாவை எனக் காண்போம்.

1. நேர் மொழிபெயர்ப்பாகச் செய்தல்

ஒரு மொழிபெயர்ப்பாளர் தம் மொழிபெயர்ப்பின்போது இரு வகையான நெறிமுறைகளைப் பின்பற்றலாம்; ஒன்று, நேர் மொழிபெயர்ப்பாகச் செய்யலாம்; இன்னொன்று, கருத்துத் தோன்றுமாறு மொழிபெயர்க்கலாம். இவற்றுள் பண்டிதமணி மூலநூல் கருத்தின் தனித்தன்மைக்கு ஊறு நேரா வண்ணம் நேர் மொழிபெயர்ப்பாகச் செய்துள்ளார்; மூலநூல் கருத்திற்கு விளக்கம் தேவைப்படுமாயின், அதனை அடிக்குறிப்பில் தரும் நெறிமுறையினைப் பின்பற்றியுள்ளார். ஓர் எடுத்துக்காட்டு :

'மண்ணியல் சிறுதேர்' நாடகத்தில் ஒரு காட்சி; நான்காம் அங்கத்தின் தொடக்கம். வசந்தசேனை தோழி மதனிகையிடம் தான் வரைந்த சாருதத்தனது ஓவியத்தைக் காட்டி, "ஏடி! மதனிகே! மாட்சி மிக்க சாருதத்தரது இவ் ஓவிய உருவம் நன்கு ஒத்திருக்கின்றதா?" (மண்ணியல் சிறுதேர், ப.156) என்று வினவுகின்றாள். இதனை மூலத்தில் உள்ளவாறே மொழிபெயர்த்து விடுகிறார் பண்டிதமணி. ஆனால், இவ்வோவிய உருவம் எதனை ஒத்திருப்பதாக வசந்தசேனை கேட்கின்றாள் என்ற ஐயம் படிப்பவர் உள்ளத்தில் எழும். ஆதலின் அந்த ஐயத்தினை நீக்கும் வகையில் அடிக்குறிப்பில் 'அவர் உருவத்தை ஒத்திருக்கின்றதா என்பது கருத்து' (ப.156) என்று குறித்துள்ளார்

பண்டிதமணி. இங்கே பண்டிதமணி 'மாட்சி மிக்க சாருதத்தரது இவ் ஓவிய உருவம் அவரை நன்கு ஒத்திருக்கின்றதா?' என்று 'அவரை' என்னும் ஒரு சொல்லை இடையில் பெய்து மொழி-பெயர்த்திருப்பாரேயானால் அடிக்குறிப்பே தேவையில்லாமல் போயிருக்கும். ஆனால் அவ்வாறு மூலத்தில் இடம்பெறாத ஒரு சொல்லைச் சேர்த்து மொழிபெயர்க்கப் பண்டிதமணியின் மனம் இடம் தரவில்லை. இங்ஙனம் அவர் தம் மொழி பெயர்ப்பில் தேவைப்படும் இடங்களில் அடிக்குறிப்பின் வாயிலாகப் பொருள் புலப்படுத்தும் நெறியை மேற் கொண்டுள்ளார். இதனை அவர் தம் மொழிபெயர்ப்புக் கொள்கையாகவே பின்பற்றியுள்ளார்.

2. சொற்களின் நயமும் நுட்பமும் உணர்த்தல்

மூல நூலில் இடம்பெற்றுள்ள சில சொற்கள் நயமும் நுட்பமும் கொண்டனவாக இருக்கும். அவை உணர்த்தும் நயத்தையும் நுட்பத்தையும் மொழிபெயர்ப்பில் காட்ட இயலாத சூழலில் அதனை அடிக்குறிப்பில் சுட்டி மொழிபெயர்ப்பிற்குக் கூடுதல் வண்ணமும் வனப்பும் சேர்ப்பதைப் பண்டிதமணியிடம் பரக்கக் காணமுடிகின்றது.

'உதயன சரித'த்தில் ஓர் இடம். உதயனன் பிறப்பைச் சொல்லும் முதல் வகுப்பு. இதில் உதயனனின் தந்தையான சகச்சிரானீகன், கௌசாம்பி நகரத்தை எய்தி விட்புல நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் அமைச்சர்களுக்குத் தெரிவிக்கிறான். அதன்பின் அயோத்தியின் தலைவனாகிய கிருதவன்மன்பால் தூதனைப் போக்குகிறான். இங்கே 'தூதன்' என்னும் சொல்லுக்குப் பண்டிதமணி அடிக்குறிப்பில் தந்திருக்கும் நயமான, நுண்ணிய விளக்கம் வருமாறு:

"தூதர் : தலை, இடை, கடையென மூவகைப்படுவர். இவருட் சந்தி விக்கிரகங்கட்கு வேற்று வேந்தரிடைச் செல்லுங்-கால், தானே வகுத்துக் கூறுபவன் தலையாவான். கூறியது கூறுவோன் இடையாவான். ஓலை கொடுத்து நிற்போன் கடையாவான். இம்முறை வடநூலுட் கூறப்படுவதாகும். திருக்குறள் தூது என்னும் அதிகாரத்தில் 'கடனறிந்து' என்னுந் திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரையையும் நோக்குக. இச் சரிதத்திற் பின்னும் தூதன் என வருமிடங்கடோறும் இவ்-வாறு பகுத்துணர்க" (உதயன சரிதமும் சுலோசனையும், ப.3).

இதுபோல அடிக்குறிப்பில் பண்டிதமணி காட்டிச் செல்லும் நயங்களும் நுட்பங்களும் மிகப் பலவாகும்.

3. இழிவழக்குகளை அறவே விலக்கல்

மூல மொழியில் இயல்பானவையாகத் தோன்றும் சில சொல்லாட்சிகள் இலக்கு மொழியில் குற்றமுடையனவாக. இழிவழக்குகளாக - அமையலாம். அவற்றை அப்படியே மொழிபெயர்த்தால் இலக்குமொழி வாசகர்கள் படிக்கும்போது முகம் சுளிக்க நேரலாம். ஆதலின் அத்தகைய இழிவழக்குகளை அறவே விலக்குவது என்பது மொழிபெயர்ப்பாளர் பின்பற்ற வேண்டிய ஓர் அடிப்படையான நெறிமுறை ஆகும்.

'மண்ணியல் சிறுதேர்' நாடகத்தின் முதல் அங்கத்தில் சூத்திரதாரனும் நடியும் தோன்றுகின்றனர். அப்போது சூத்திரதாரன், "காரிய நிமித்தமும், நாடக நிகழ்ச்சியும் பற்றிப் பாகத மொழியிற் பேச வேண்டியவனாகின்றேன்" (மண்ணியல் சிறுதேர், ப.65) என்கின்றான். இப்பகுதிக்கு எழுதிய அடிக்குறிப்பில் பண்டிதமணி, "தூய வடமொழியிற் பேச இயலாதவர்கள் பிராகிருதத்திற் பேசுதல் இயல்பு. தமிழ் இயற்கை மொழியாதலானும், இதன்கண் இழிசன வழக்கு விதியின்மையானும், பயில்வார்க்கு மொழி நயமுந் தோன்றச் செந்தமிழ் மொழியிலேயே எழுதப்படும்" (ப.65) எனச் சுட்டுகின்றார். இதனால் இலக்குமொழியின் மரபுக்கும் தனித்தன்மைக்கும் ஏற்பப் பண்டிதமணி தம் மொழிபெயர்ப்பின் நடையில் உரிய மாற்றத்தைச் செய்திருப்பது புலனாகும். 'மண்ணியல் சிறுதேர்' நாடகத்தின் தொடக்கத்தில் வரும் சூத்திரதாரனின் கூற்றினையும் இழிசன மொழியில் எழுதாமல், "அந்தோ! அந்தோ! நெடுநேரம் இசை பாடினமையான், உலர்ந்த தாமரைத் தண்டு போல என் உடலுறுப்புக்கள் உணவு வேட்கையால் வாடுகின்றன" என்றாற்போல் செந்தமிழ் நடையிலேயே எழுதிச் சென்றுள்ளார் பண்டிதமணி. இங்ஙனம் விலக்க வேண்டியனவற்றை விலக்கியிருப்பது பண்டிதமணியின் மொழிபெயர்ப்பில் காணலாகும் பிறிதொரு சிறப்பியல்பு ஆகும்.

4. ஒப்புமைப் பகுதிகளை எடுத்துக்காட்டல்

தாம் மொழிபெயர்க்கும் பகுதியுடன் ஒப்புமை உடைய தமிழ் இலக்கியக் கருத்துக்கள் காணப்படுமாயின், அவற்றை அடிக்குறிப்பில் எடுத்துக்காட்டுதலைப் பண்டிதமணியின் மொழிபெயர்ப்பில் பரவலாகக் காண முடிகின்றது. அறக் கருத்துக்களை ஒப்பீட்டு நோக்கில் கற்று மகிழ அவை நமக்கு உற்றுழி உதவுகின்றன.

"இவ்வுலகத்தில் அந்தணராதலும், அரசராதலும், வணிகராதலும், சூத்திரராதலும், மிலேச்சராதலும் பிறப்பினாலில்லை; குணஞ் செயல்களாலேயே வேறுபடுக்கப்பட்டனர்" (சுக்கிர நீதி, முதல் அத்தியாயம், ப.6) என்பது 'சுக்கிர நீதி' முதல் அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ள ஓர் அரிய கருத்து. அடிக்குறிப்பில் பண்டிதமணி இதனோடு ஒப்புமை உடைய இரு குறட்பாக்களைப் பொருத்தமாக எடுத்துக்காட்டியுள்ளார். "இக் கருத்தை 'பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யான்', 'பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங், கருமமே கட்டளைக் கல்' என்னுந் திருக்குறள்களிலுங் காண்க" (சுக்கிர நீதி, முதல் அத்தியாயம், ப.6) என்னும் பண்டிதமணியின் விளக்கக் குறிப்பு அவரது ஆழங்காற்பட்ட இலக்கியப் புலமையைப் பறைசாற்றுவதாகும்.

இதே போல் பண்டிதமணியின் 'கௌடலீயம் - பொருணூல்' மொழிபெயர்ப்பில் இருந்தும் ஓர் ஒப்புமைப் பகுதியை இங்கே எடுத்துக்காட்டலாம். "மக்களைத் தன்வயப்-படுத்துவதற்குத் தண்டத்தை ஒத்த கருவி வேறொன்றில்லை என்ப ஒரு சாராசிரியர். அதனை மறுத்துக் கௌடலியர் கூறுவன: 'கொடுந்தண்டம் மக்களை நடுக்கமுறுத்தும். குறைந்த தண்டம் அவமதிக்கப்படும். தகுதியான தண்டம் நன்கு மதிக்கப்படும்'" (கௌடலீயம் - பொருணூல், நான்காம் அத்தியாயம், முதல் அதிகரணம், முதற் பிரகரணம்) என்பது 'கௌடலீயம்' கூறும் தண்ட நீதி. இதற்கு எழுதிய அடிக்குறிப்பில் பண்டிதமணி திருக்குறளில் இருந்தும், பரிமேலழகர் உரையில் இருந்தும் பொருத்தமான இடங்களை மேற்கோள்களாக எடுத்துக்காட்டியுள்ளார். அப்பகுதிகள் வருமாறு:

"கொடுந்தண்டம் மக்களை நடுக்கமுறுத்துமுகமாக அரசற்கும் கேடு விளைப்பதாகும். இதனை,

'கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் மேய்க்கும் அரம்' **(குறள் 567)**

என்பதனாலும் உணர்க.

தகுதியான தண்டம் - காலம், இடம், குற்றம் இவற்றிற்குத் தகப் பிரயோகிக்கப்பவது.

'ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை'

என்னும் திருக்குறளில் தேர்ந்து என்பதற்கு 'அக்குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலாரோடும் ஆராய்ந்து' என்று பரிமேலழகர் எழுதிய உரைக்குறிப்பு ஈண்டு நோக்கத்தக்கது" (கௌடலீயம் - பொருணூல், ப.35).

இவ்வாறு ஒப்புமைப் பகுதிகளை அடிக்குறிப்பில் ஆங்காங்கே எடுத்துக்காட்டுவது பண்டிதமணியின் மொழி-பெயர்ப்பில் காணப்படும் பிறிதொரு சிறப்புப் பண்பாகும்.

பண்டிதமணி பொதுவாக ஒரு மொழிபெயர்ப்பாளர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் யாவற்றையும் கையாண்டு மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ளார். மேலும், தமிழ்மை தவழச் செய்தல், நேர் மொழிபெயர்ப்பாகச் செய்தல், விளக்கமின்றேல் அடிக்குறிப்பில் விளக்கம் தருதல், நுண்ணிய நயப் பொருளை உணர்த்தல், இழிவழக்குகளை அறவே விலக்கல், ஒப்புமைப் பகுதியினை எடுத்துக்காட்டல் என்றாற்போல் தமக்கே உரிய சிறப்புப் பண்புகளையும் மொழிபெயர்ப்பில் ஆங்காங்கே வெளிப்படுத்தியுள்ளார். எனவேதான் அவரது மொழிபெயர்ப்பு முயற்சிகள் யாவும் ஏனையோரது மொழிபெயர்ப்புக்களைக் காட்டிலும் சிறப்பானவையாக விளங்கக் காண்கிறோம்.

III. சீர்மிகு மொழிபெயர்ப்பாளர்

"ஒரு நல்ல மொழிபெயர்ப்பு என்பது பசுவானது பசும்புல்லைத் தின்று தீம்பாலாகப் பொழிவது போன்றதாகும். ஆவானது வைக்கோலைத் தின்று அதனைச் செரிக்காமல் வைக்கோல் துண்டுகள் இடையிடை விரவி வரக் கழிவது போன்றன நல்ல மொழிபெயர்ப்பாக மாட்டா" (மேற்கோள்:

ஆ.பழநி, பண்டிதமணியின் நாடகத் தமிழ், ப.280) என்பர் எழுத்தாளர் புதுமைப்பித்தன். படைப்பிலக்கியம், மொழி-பெயர்ப்பு என்னும் இரு துறைகளிலும் முத்திரை பதித்த அவரது கருத்து ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும். கதை நூலோ, நீதி நூலோ, நாடக நூலோ எதுவாயினும், மொழி-பெயர்ப்பைப் பொறுத்த வரையில் பண்டிதமணி ஆவானது பசும்புல்லைத் தின்று நன்கு செரித்துத் தீம்பாலாகத் தருவது போன்று சீர்மிகு மொழிபெயர்ப்பாளராகச் செயல்படு-கின்றார். புதுமைப்பித்தனின் சம காலத்தவரும் தேர்ந்த மொழிபெயர்ப்பாளருமான கு.ப.ராஜகோபாலன் கூறுவது போல், "மொழிபெயர்ப்பே ஒரு முறையில் கடினமான இலக்கிய வேலை. அது முதல் நூல் எழுதுவதைக் காட்டிலும் அதிகமான தொல்லை கொடுப்பது. சீமை ஓட்டைப் பிரித்து விட்டுக் கீற்று வைக்கும் வேலை போன்றது. ஒரு கட்டுக் கோப்பைக் கலைத்து மற்றொரு கட்டுக்கோப்பை ஏற்றுவதில் எப்பொழுதுமே பூரண வெற்றி கொள்ள முடியாது. அடிக்கு அடி நிர்பந்தம். எல்லைக்கோட்டைத் தாண்டினால் மொழிபெயர்ப்பாவதில்லை. வியாக்கியானம் தூண்டாமல் வார்த்தைக்கு வார்த்தை போட்டால் கருத்து விளங்குவதில்லை. நடையும் சரளமாவதில்லை. இவைகளின் நடுவில் நீந்திக்கொண்டு போய்க் கரையேற வேண்டும்" (மேற்கோள்: மு.கோவிந்தராசன், மொழித் திறன்களும் சில சிக்கல்களும், ப.215). பண்டிதமணி அரிதினும் அரிதாய இம் மொழி-பெயர்ப்புப் பணியில் பல வகையான தொல்லைகளையும் பிரச்சினைகளையும் எதிர்கொண்டாலும் அவற்றைப் பக்குவத்தோடும் பொறுமையோடும் சமாளித்து, அவற்றின் நடுவில் விடாமுயற்சியுடன் நீந்திக் கொண்டு சென்று கரையேறி உள்ளார். எனவே அவர் வாழையடி வாழையென வரும் மொழிபெயர்ப்பாளர் வரிசையில் தனி மதிப்போடும் மரியாதையோடும் கட்டப்பெறுகின்றார்.

6

பண்டிதமணி என்ற ஆளுமை

"இருமொழி வல்ல ரானார்
இனியசொல் வல்ல ரானார்
உரைசெய உரிய ரானார்
உயர்கவி தருவ ரானார்
பொருள்நயம் தெரிய லானார்
புகழும்நூல் வரைய லானார்
வருமிவை திங்கள் எழில்
எவ்வணம் வாய்த்த வம்மா!"

– முடியரசன்*

"பண்டிதமணி தமிழ் ஞாயிறு ஆவார். அஞ்ஞாயிறு பண்டிதமணி என்ற பட்டத்தை இளங்காலை ஒளியாகக் கொண்டு மேலெழுந்தது. எல்லாக் கழகங்களும் 'பண்டிதமணி' என்ற பட்டத்தை ஒப்புக்கொண்டு பாராட்டின. நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபிலே பிறந்ததால் தன்னம்பிக்கை, தன்முயற்சி என்ற இரண்டின் வழியாகப் பண்டிதமணி முன்னேறினார். தஞ்சைப் பெரிய கோயிலைப் போல, தாஜ்மகாலைப் போல, புலவர்களிடையே பண்டிதமணி நிலைபெற்று விளங்கினார். மணிவாசகருக்கு உரைக்கோயில் கட்டிய பெருமை படைத்தவர்" (பண்டிதமணி திரு மு.கதிரேசச் செட்டியார் அவர்கள் திருவுருவச் சிலை திறப்பு விழா மலர், ப.80) எனப் பண்டிதமணிக்குப் புகழாரம் சூட்டியவர் 'உரைவேந்தர்' ஔவை சு.துரைசாமிப் பிள்ளை ஆவார் இங்ஙனம் சான்றோர்கள் ஒருமித்த குரலில் உளமாரப் போற்றும் வண்ணம் உயரிய வாழ்வினை வாழ்ந்து காட்டிய பண்டிதமணியிடம் குடிகொண்டிருந்த ஆளுமைப் பண்புகள் யாவை என இவ்வியலில் சுருங்கக் காண்போம்.

---

*ஊன்றுகோல், ப.11.

1. 'மகிபாலன்பட்டி மாணிக்கம்'

பண்டிதமணி பிறந்த ஊர் செட்டி நாட்டில் உள்ள மகிபாலன்பட்டி. இதன் பழைய பெயர் பூங்குன்றம். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற பொதுமை நெறியைப் பாடிய கணியன் பூங்குன்றனார் வாழ்ந்த ஊர் இது. மகிபாலன்பட்டி என்பது பிற்காலத்தில் - சோழ மன்னர் காலத்தில் - ஏற்பட்ட பெயர். அறிஞர் பி.ஸ்ரீ. 'நான் அறிந்த தமிழ் மணிகள்' என்னும் நூலில் குறிப்பிடுவது போல், "மகிபாலன்பட்டியில் இரண்டு மாணிக்கங்கள் என்று சொல்லும் படி நம் கதிரேசனாரும் வாழ்ந்து புலமையொளி பரப்பினார்" (ப.67).

பண்டிதமணியின் பிறந்த ஊரான மகிபாலன்பட்டி தன் சுற்றுப்புறச் சூழல் நலத்தால் தமிழ்த் தென்றல் திரு.வி.க.வின் உள்ளத்தையும் ஈர்த்துள்ளது. "பண்டிதமணி - மஹாமஹோபாத்தியாயர் - கதிரேசச் செட்டியார் ஊராகிய மகிபாலன்பட்டிக்கு யான் இரண்டு முறை சென்றிருக்கிறேன். அவ்வூரின் அமைதி என் நெஞ்சைக் கொள்ளை கொண்டது. அஃது எவரையும் புலவராக்கும் - பாவலராக்கும் - பண்புடையது. அத்தகைய அமைதிப் பதியில் காவியங்களுடன் உறவாடி அவைகளில் ஒன்றிச் சமாதி யோகஞ் செய்யும் வாய்ப்புப் பண்டிதமணிக்குக் கிட்டியது" (பகுதி - 1, ப.188) எனத் திரு.வி.க. தம் வாழ்க்கைக் குறிப்புகளில் பண்டிதமணியின் சொந்த ஊரின் பண்பினைப் பற்றிப் பாராட்டி எழுதியுள்ளார்; 'அமைதிப் பதி' என மகிபாலன்பட்டியைச் சுட்டியுள்ளார்.

பிறந்த ஊருக்குப் பெருமை சேர்த்ததோடு நின்றுவிட-வில்லை பண்டிதமணி; மகிபாலன்பட்டிக்குப் போக்கு வரவு வசதிகள் ஏற்படுவதற்கும் பல்லாற்றாற்றானும் துணைநின்றார் அவர்.

2. 'கற்ற பெரியோன் கதிரேசன்'

"நெற்றி நிறைந்த நீறுடையான்,
நெஞ்சில் பஞ்சாக் கரமுடையான்;
முற்றி முதிரும் அன்பாலே
மூவர் தமிழும் பயில்நாவான்;
சுற்றம் தழுவும் குணசீலன்
தூய நெறிகண் டொழுகிடுவான்;

கற்ற பெரியோன் கதிரேசன்
கடவு ளருளால் வாழியவே!"

(மலரும் மாலையும், ப.215)

என்பது பண்டிதமணி குறித்துக் கவிமணி பாடியுள்ள வாழ்த்துக் கவிதை. பண்டிதமணியின் புற அழகையும் அக அழகையும் ஒருங்கே காட்டும் அழகிய சொல்லோவியம் இது.

அறிஞர் பிஸ்ரீ. தாம் அறிந்த பண்டிதமணியை நினைவுச் சித்திர முறையில் பின்வருமாறு அறிமுகப்படுத்தியுள்ளார்:

"கதிரேசனாரின் தோற்றம், தொடக்கத்திலேயே இவரது கலை நலத்திற்கும் குண நலத்திற்கும் ஓர் அறிகுறி போல் என்னுள்ளத்தில் பதிந்தது. மூலக் கச்சமாய்க் கட்டியிருந்த வெண்ணிற ஆடையும் விசிறி மடிப்பு அங்கவஸ்திரமும், சொற்பொழிவு மேடைகளிலும் உரையாடல்களிலும் இவர் புலப்படுத்திய அறிவுத் திறனுக்கும் அழகான புதைபொருட் செல்வத்திற்கும் நினைவுக் குறிகளாய்த் தோன்றின. கையில் ஒரு கம்பு; வெள்ளிப் பூண் கட்டியது தம் சொற்பொழிவுகளிலும் தலைமையுரைகளிலும் இவர் போலிப் புலவர்களை மதியாது தயைதாட்சணியமும் காட்டாது நடந்து கொள்ளக் கூடியவர் என்பதை அப்பிரம்பு நினைவூட்டியது. தவறான கருத்துக்களைக் கண்டிப்பது போல், உண்மைப் புலவர்களுக்கு நீதி செலுத்தும் செங்கோலையும் அது என் நினைவிற்குக் கொணர்ந்தது. 'அன்பே சிவம்' என்ற கொள்கையை நிறைய நெஞ்சில் வைத்துக் கொண்டு. 'நெற்றி நிறைந்த நீறுடையான்' என்ற கவிமணியின் வாக்கிற்கு இணங்கக் காட்சியளித்தவர், உண்மைப் புலவர்களை உள்ளபடியே மதிக்காமலிருக்க முடியுமா?" (நான் அறிந்த தமிழ் மணிகள், ப.64).

பண்டிதமணியின் தலைமையில் பேசுவதென்றால் அக்காலத்தில் சொற்பொழிவாளர்கள் அஞ்சுவார்கள்; நன்கு தயாரித்துக்கொண்டு வந்து கவனமாகப் பேசுவார்கள். ஒரு பிழை கண்டாலும் பண்டிதமணி கண்டிக்காமல் விட மாட்டார். ஆயிரக்கணக்கான மக்கள் முன் பேசும்போது தவறான கருத்தை விதைத்து விடக்கூடாது என்பதே பண்டிதமணியின் கருத்து. அதே நேரத்தில் ஒரு சொற்பொழிவாளர் நன்றாகவும் நயமாகவும் பேசினார் என்றால் அவரை நெஞ்சாரப் பாராட்டவும் தயங்கமாட்டார்

பண்டிதமணி. ஓய்வு பெற்ற பேராசிரியர் புலவர் முத்து இராசாக் கண்ணனார் ஒருமுறை பண்டிதமணியின் தலைமையில் புதுவை இளைஞர் கழகக் கூட்டத்தில் ‘அமெரிக்க நாட்டில் ஆங்கிலக் கவிஞர்’ என்ற தலைப்பில் பேசினார். அன்று தலைவராகத் திகழ்ந்த பண்டிதமணி தம் முடிவுரையில் இப்படிச் சுவையாகக் குறிப்பிட்டார். “மிகச் சாமர்த்தியமாக நான் கேட்க ஒரு பேச்சு இன்று நண்பர் இராசாக்கண்ணன் அவர்களால் நிகழ்த்தப் பெற்றது. இடைவேளை உண்டாக்கும் இடைவேலை எனக்கு இல்லாமற் செய்துவிட்டார்” (சோமலெ, பண்டிதமணி, பக்92-93).

3. தாய் தந்தையரை மறவாமல் சமமாகப் போற்றும் மைந்தன்

‘மாதா பிதா குரு தெய்வம்,’ ‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்’, ‘தாயிற் சிறந்ததொரு கோவிலும் இல்லை’, ‘தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை’ என்னும் முதுமொழிகளுக்கு ஏற்பப் பண்டிதமணி தமது வாழ்நாளில் தாய்க்கும் தந்தைக்கும் சமமான - உரிய - இடத்தினை அளித்துப் பெருமைப்படுத்தியுள்ளார். ‘என் அரிய தந்தை’ எனத் தந்தையாரைப் பெருமையோடும் பெருமிதத்தோடும் சுட்டும் பண்டிதமணி, ‘நெடிதுநாள் புரந்த அன்னை’ எனத் தாயாரை நன்றியோடும் நிறைந்த நெஞ்சோடும் நினைவுகூர்ந்துள்ளார். இங்ஙனம் பண்டிதமணி தாய் - தந்தை இருவர்க்கும் தம் உள்ளத்தில் மட்டுமன்றி, எழுத்திலும் சமமான இடத்தினை அளித்திருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

பண்டிதமணி திருவைந்தெழுத்துப் போல ஐந்து கட்டுரைகளைக் கொண்ட ‘உரைநடைக் கோவை’யின் முதற் பகுதியினைத் தமது தந்தையார் முத்துக்கருப்பன் செட்டியார்க்கு உரிமைப்படுத்தியுள்ளார். “கற்றுவல்ல பெரியோர் அவைகளில் சிறியேனாகிய யானுங் கலந்து பயன் எய்துதற் குரிய நல்லறிவு பெறுதற்குக் காரணிகராகிய என் அரிய தந்தை யார் அவர்களின் அருட்பெருக்கை நினைந்து நினைந்து உருகு தற்கு அறிகுறியாக இந்நூலை வெளியிட்டு அவருக்கு இதனை உரிமைப்படுத்துகின்றேன்” என்பது பண்டிதமணி இந்நூலில் தந்தையைக் குறித்து எழுதியிருக்கும் உரிமையுரை ஆகும்.

"செந்தமி ழமிர்தத் திவலையும் உலகிற்
றிகழ்வட மொழிமணி சிலவும்
முந்துறப் பெறுதற் கறிவொளி யுதவி
முன்னுமென் சிறுபரு வத்தே
நந்தலில் புகழை நிறுவியெம் இறைவன்
நல்லடி யடைந்தவென் அரிய
தந்தையின் அருளை நினைவுறீஇ யுருகுந்
தன்மைக்கீ தறிகுறி யாமால்" **(ப.vi)**

எனத் தமது தந்தையாரின் அருளை நினைந்து, நெகிழ்ந்து, உணர்ந்து, உருகிப் பண்டிதமணி படைத்திருக்கும் கவிதை பயில்வார் உள்ளத்தைத் தொடுவதாகும்.

'உரைநடைக் கோவை'யின் இரண்டாம் பகுதி எட்டு இலக்கியக் கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டது. இதனைப் பண்டிதமணி ஈன்று புறந்தந்து பல்லாற்றானும் பேணி வளர்த்த தமது அன்னையார்க்கு உரிமையாக்கியுள்ளார். "அறிவு வளர்வதற்கு இடனாகவுள்ள என் உடலை நன்கு பேணி வளர்த்து, எனக்கு உறுதுணையாம்படி அவ்வப்பொழுது கிடைத்த அறிவுடையார் பலரையும் உபசரித்து, யான் கலைநலம் பெறுதற்குப் பெரிதும் துணையாக இருந்தவர்களும், புலவர் குழுவிற் சிறியேனும் ஒருவனாக இருக்கும் நிலை கண்டு உளமகிழ்ந்து நீண்ட நாளாக என்னைப் பாதுகாத்து வந்தவர்களும் ஆகிய என் இனிய அன்னையார் அவர்களின் அருட்பெருக்கை உன்னியுன்னி உருகுதற்கு அடையாளமாக இந்நூல் வெளியிட்டு அவ்வருட்கு இதனை உரிமைப்படுத்து கின்றேன்" என்பது பண்டிதமணி இந்நூலில் அன்னையாரைப் பற்றி எழுதியிருக்கும் உரிமையுரை ஆகும்.

"என்னையீன் றெடுத்தென் உடல்நலம் பேணி
இருந்தமிழ்ப் புலவர்தங் குழுவில்
துன்னியான் இருப்பக் கண்டுள மகிழ்ந்து
சொலற்கரும் உதவிகள் புரிந்து
முன்னை யான்செய்த நல்வினைப் பேற்றின்
முதிர்ச்சியால் நெடிதுநாட் புரந்த
அன்னை யினருளை நினைவுறீஇ யுருகற்
கமையடை யாளமீ தாமால்" (ப.3)

எனத் தமது அன்னையாரைக் குறித்துப் பண்டிதமணி புனைந்திருக்கும் கவிதை பயில்வார் உள்ளத்தை உருக்குவதாகும்.

4. இடும்பைக்கு இடும்பை செய்த வீரர்

பண்டிதமணி மூன்று வயதில் இளம்பிள்ளை வாதத்தால் தாக்கப் பெற்றார்; குடும்பச் சூழல் முறையான கல்வியைப் பெற அவருக்குத் துணை நிற்கவில்லை; பதினோரு வயதில் அவர் இலங்கை சென்று ஒரு கடையில் பணியில் சேர வேண்டிய நெருக்கடி நேர்ந்தது. பதினான்கு வயதில் பண்டிதமணியின் தந்தையார் காலமானார். அதே ஆண்டில் அவரது இடது காலும் இடது கையும் வலுக்குறைந்தன. திருமணம் தள்ளிக் கொண்டே போய் 32-ஆவது வயதில்தான் நிகழ்ந்தது. இடையில் பீமகவி என்பவர் பண்டிதமணி மீது வழக்குத் தொடர்ந்தார். முதுமையில் மனைவியார் உயிர் நீத்தார். இவ்வளவு துன்பங்கள் வாழ்வில் அணிவகுத்து வந்தும், அவற்றால் பண்டிதமணி சிறிதும் நிலைகுலைந்துவிடவில்லை; நெஞ்சம் துவண்டு விடவும் இல்லை.

> **"இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு**
> **இடும்பை படாஅ தவர்"** **(623)**

என்னும் குறளுக்கு ஓர் உயிருள்ள இலக்கியமாய் விளங்கினார் பண்டிதமணி. அவர் உள்ள உறுதியால் தமது உடற்குறையை வென்றார்; தன்முயற்சியால் தமிழும் வடமொழியும் கற்றார். ஏழு மாதங்கள்கூடப் பள்ளிக்கூடத்தில் அவர் கல்வி பயிலவில்லை என்றாலும், பிற்காலத்தில் ஒரு புகழ் பெற்ற பல்கலைக்கழகத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றும் உயர்வினைப் பெற்றார்; கல்லூரி, பல்கலைக்கழகம் போன்ற எந்தக் கல்வி நிறுவனத்திலும் முறையாகச் சேர்ந்து பயின்று எந்தப் பட்டமும் பெறவில்லை என்றாலும், பின்னாளில் அவர் 'பண்டிதமணி' , 'முதுபெரும் புலவர்', 'சைவ சித்தாந்த வித்தகர்', 'மகாமகோபாத்தியாயர்' ஆகிய மிக உயரிய பட்டங்களைத் தம் வாழ்நாள் பணிகளுக்காகப் பெற்றார். இவ்வளவு உயர்வுகளையும் பண்டிதமணி தம் வாழ்நாளில் பெறுவதற்குக் காரணமாக இருந்தது அவரிடம் குடிகொண்டிருந்த ஆளுமைப் பண்பே ஆகும்.

கவிஞர் வாலி 'இவர்கள் இன்னமும் இருக்கின்றார்கள்' என்னும் நூலில் பண்டிதமணி பற்றிக் கூறுவது இங்கே மனங்கொளத்தக்கதாகும். பண்டிதமணி பற்றிய கவிஞரின் வைர வரிகள் வருமாறு :

**"இளம்பிள்ளை வாதத்தால்
இருந்தது – அந்த
ஒண்டமிழ்ப் புலவர்க்கு
ஒருகால் ஊனம்; இல்லை –
ஒண்டமிழ்ப் புலமையில்
ஒருகாலும் ஊனம்!
வடமொழியும்
வண்ணத் தமிழும் –
வீற்றிருந்தன
விரல் நுனியில்
நற்கருத்தும்
நகைச்சுவையும் –
குமிழியிட்டிருந்தன
குரல் நுனியில்!" (ப.85)**

5. அனைவர்க்கும் உவகை ஊட்டும் உள்ளத்தினர்

பிறரைத் துன்புறுத்தியோ, பிறர் பொருளை வஞ்சித்தோ வருவன எல்லாம் உவகை ஆகா. யாருக்கும் அல்லல் தராத, யாரையும் அல்லற்படுத்தாத உவகையே, உண்மையான உவகை ஆகும். இந்நுட்பத்தினைக் கருத்தில் கொண்டே 'அல்லல் நீத்த உவகை' (மெய்ப்பாட்டியல், நூற்பா 11) என்னும் சிறப்புத் தொடரால் உவகையைச் சுட்டுவர் தொல்காப்பியர். பண்டிதமணி தம் வாழ்நாளில் எப்போதும் - எந்நிலையிலும் - பிறரை மகிழ்விக்கும் பண்பாளராகவே விளங்கியுள்ளார்; பிறருக்குத் துயரம் தராமல், தமக்குச் சிறிது துயரம் வந்தாலும் குற்றம் இல்லை என்று பொறுமையுடன் ஏற்றுக் கொண்டு அவர் பலமுறை தம்முடன் இருந்தவர்களுக்கு உவகை ஊட்டியுள்ளார். இதனை மெய்ப்பிக்கும் நிகழ்ச்சி ஒன்றினைப் பண்டிதமணியிடம் பயின்ற மாணவரான பேராசிரியர் அ.சிதம்பரநாதன் 'பண்டிதமணி கதிரேசன் செட்டியார்' என்னும் தமது வானொலி உரையில் குறிப்பிட்டுள்ளார்.

பண்டிதமணி வகுப்பில் தம் மாணவர்களிடம் ஒரு செய்தியைச் சொல்வது உண்டு. அதை ஒரு கதை போலவும் தாம் கண்ட கனவு போலவும் கூறுவது அவர் வழக்கம். அஃதாவது, அவர் கடவுளை நோக்கி ஏதோ ஒரு வரம் வேண்டி உறங்கிக் கொண்டிருந்ததாகவும், அப்பொழுது கடவுள் அவருடைய கனவில் தோன்றி, "உமக்குத் தந்தம் போம்" என்று கூறியதாகவும், மறுநாள் பார்த்தால் இருந்த பல்கூடப் போய்விட்டதாகவும் பலரும் நகைக்கும்படி கூறுவது உண்டு. தாம் பற்கள் இழந்துள்ள நிலையை வைத்து, அதை ஒரு பெருங்குறையாகக் கருதாமல், அது காரணமாகவே பிறரை மகிழ்விக்கும் பெற்றியாளராய் விளங்கினார் பண்டிதமணி என்தபற்கு இந்நிகழ்ச்சி நல்லதொரு சான்றாகும். உண்மையில் எவ்வளவு சிறந்த உவகையர் அவர் என்பதை இதனால் நாம் உய்த்துணரலாம் (சபைக் கட்டுரைகள், பக்.73-74).

பண்டிதமணி ஒருமுறை திருவாவடுதுறை ஆதீனத்தின் மகாசன்னிதானத்தைக் காண்பதற்குச் சென்றிருந்தார். ஆதீன வழக்கப்படி அவர் சன்னிதானத்தை வணங்குவதற்காகக் கீழே குனிந்தார். அப்போது அவர் ஊன்றியிருந்த கம்பு வழுக்கவே பண்டிதமணி கீழே விழுந்துவிட்டார். உடனே மகா சன்னிதானம் தம் இடத்தினின்றும் எழுந்து, கீழே விழுந்த பண்டிதமணியைத் தாங்குவதற்காக வந்தார். அப்போது உடனே, "பக்தர்களாகிய நாங்கள் தவறுவதும் (தவறு செய்வதும்) மகா சன்னிதானங்கள் தாங்குவதும் (அடைக்கலம் கொடுப்பதும்) இயல்புதானே?" என்று சொன்னாராம் பண்டிதமணி. தம் ஊன்றுகோல் வழுக்கி, நிலை தடுமாறிக் கீழே விழுந்த நிலையிலும் பண்டிதமணி துயரம் கொள்ளவில்லை. மாறாக, உவகைச் சுவை மிளிர உரையாடவே செய்தார். உண்மையில் ஊழி பெயரினும் தாம் பெயராச் சான்றாண்மை வாய்ந்த ஆளுமையாளர்களிடம் தான் இத்தகைய உள்ளப் பண்பினைக் காண முடியும்.

6. நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்ட பெருந்தகையாளர்

நெஞ்சில் உரத்தோடும் நேர்மைத் திறத்தோடும் எவருக்கும் அஞ்சாமல் தம் மனத்திற்குச் சரியென்று படுவதை எடுத்துரைப்பது பண்டிதமணியின் ஆளுமையில் காணப்பெற்ற ஒரு சிறப்பியல்பு ஆகும். இதனைப் புலப்படுத்தும் ஒரு சுவையான

நிகழ்ச்சியை அறிஞர் சோமலெ 'பண்டிதமணி' என்னும் தம் நூலில் பதிவு செய்துள்ளார். அந்நிகழ்ச்சி வருமாறு:

அரசியலில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த ஓர் அமைச்சர் கலந்து கொண்ட நிகழ்ச்சி அது. பண்டிதமணியும் அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் சென்றிருந்தார். அமைச்சர் உரையாற்றிய போது தமிழாசிரியர்களைக் குறை கூறினார்; "தமிழாசிரியர்களுக்குக் க, கா என்ற இரண்டுக்கு மேல் ஒன்றும் தெரியாது. 'க' என்பது கடவுள், 'கா' என்பது காதல்" என்றார். கூடியிருந்தோர் அனைவரும் கைகொட்டி ஆரவாரம் செய்தனர்; அமைச்சரைப் பாராட்டினர்.

அமைச்சருக்குப் பின்னர் அங்கே சொற்பொழிவாற்ற எழுந்தார் பண்டிதமணி. "தமிழாசிரியர்களுக்குக் க, கா என்ற இரண்டிற்கு மேல் ஒன்றும் தெரியாது என அமைச்சர் கூறுவது உண்மைதான். ஆமாம், கடவுளுக்கும் காதலுக்கும் மேலாக எப்பொருள் உள்ளது என்பதை அன்புகூர்ந்து தெளிவுபடுத்த வேண்டுகிறேன்" எனக் கூறி அமைச்சரைச் சற்றே நோக்கினார். அமைச்சர் புன்னகை பூத்தவாறே அமர்ந்திருந்தார். பிறகு பண்டிதமணி தம் பேச்சைத் தொடர்ந்தார்: "அமைச்சர் என்ன? யாராலும் கடவுளுக்கும் காதலுக்கும் மேலாக ஒரு பொருள் உண்டு என அறிந்து சொல்ல முடியாது. இவை இரண்டையும் விஞ்சி ஒரு பொருள் உண்டென ஆங்கிலம் படித்தவர்களும் அரசியல் நிபுணர்களும் அறிந்து சொல்ல முடியாது தான். இத்தகைய அறியாதார் கூட்டத்தில் இங்கே வீற்றிருக்கும் அமைச்சரும் ஒருவர்" என்று முழங்கினார். அவையினர் மீண்டும் பலத்த கரவொலி எழுப்பினர். 'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' என இறைவனிடம் வாதாடிய நக்கீரர் போல் அஞ்சாமல் அமைச்சரையே கண்டித்துப் பேசிய பண்டிதமணியின் திறனை அனைவரும் வியந்தனர் (பக்76-77).

இதே போல் தலைமை ஏற்று நடத்தும் நிகழ்ச்சி ஆயினும் சரி, ஒரு சொற்பொழிவாளராகக் கலந்து கொண்டு உரையாற்றும் நிகழ்ச்சி ஆயினும் சரி, பண்டிதமணி தமக்கு மாறுபாடான கருத்து மொழியப்படுமாயின், அதற்கு எதிரான தம் கருத்தினை எந்த வித அச்சமோ தயக்கமோ இன்றி வெளிப்படுத்தத் தயங்க மாட்டார்.

பண்டிதமணி ஒருமுறை தூத்துக்கடி சைவ சித்தாந்தச் சபையின் ஆண்டு விழாவில் கம்ப ராமாயணம் பற்றிச் சொற்

பொழிவாற்றச் சென்றிருந்தார். மூன்றாம் நாள் நிகழ்ச்சியில் பண்டிதமணியின் சொற்பொழிவு என அழைப்பில் காட்டப்பட்டிருந்தது. முதல் இரண்டு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்ற சில புலவர்கள், 'சைவ சித்தாந்த சபையில் கம்ப ராமாயணமா? இங்கே வைனவத்திற்கு இடமில்லை' எனப் பேசிய தகவல் பண்டிதமணிக்குத் தெரியவந்தது. குறிப்பாக ஒரு பெரும் புலவர், இந்த இயக்கத்திற்கு முன்னின்று ஊக்கம் அளித்ததையும் பண்டிதமணி அறிந்தார்.

மூன்றாம் நாள் பண்டிதமணி தமது சொற்பொழிவைத் தொடங்குவதற்கு முன், எதிரே அமர்ந்திருந்த அந்தப் பெரும் புலவரை நோக்கி, "புலவர் ஐயா! உங்களுக்கு என் உரையில் ஏதோ ஆட்சேபம் இருப்பதாக அறிந்தேன். தயவு செய்து அதனை மேடையில் வந்து கூறுங்கள்!" எனக் கூறிவிட்டு அமர்ந்துவிட்டார்.

எதிர்பாராத நிலையில் மேடைக்குத் தம்மை அழைத்த-தால், உணர்ச்சி வசப்பட்ட பெரும் புலவர், "கம்பராமாயணம் வைணவ நூல்; அதன் சிறப்பைச் சைவ சித்தாந்த சபையில் பேசுவது மன்னிக்க முடியாத குற்றம்!" என ஓங்கிய குரலில் உரைத்துவிட்டு, எதிரே சென்று அமர்ந்தார்.

பண்டிதமணி புன்னகைப் பொலிவுடன் எழுந்து, தமது விளக்கத்தை அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்தார். "சைவ சபைப் பந்தலில் கம்ப ராமாயணத்தைப் பற்றிப் பேசுவது குற்றமாகாது. இராமர், சிவனடியார்களில் முதல் அடியார். அன்று அவர் இராமேசுவரத்தில் பூசித்த லிங்கமே, இன்று இராமலிங்கமாக விளங்குகிறது, இல்லையா? அவரைப் பற்றி இந்தப் பந்தலில் பேசுவது குற்றமாயின் வேறு எந்தச் சிவனடியாரைப் பற்றியேனும் இங்கே பேசுவ்து முறையாகுமா?" என்று பண்டிதமணி கேட்கக் கூடியிருந்த பெருமக்கள் கரவொலி எழுப்பிப் 'பேசுங்கள்! பேசுங்கள்!' எனக் குரல் கொடுத்தனர்.

பண்டிதமணி தலைமை வகித்த பிறிதொரு நிகழ்ச்சியில் முருகப் பெருமானிடம் ஈடுபாடு கொண்ட ஒரு பெரும் புலவர், பாரதத்தில் இருந்து மேற்கோள் ஒன்றினைக் கூறி, "பரமேசுவரன், பார்வதி முதலியோரும், தேவாதி தேவர்கள் அனைவரும் வந்திருந்தனர். ஆனால் முருகன் தான் எல்லோரையும் விடப் பெரியவனாக இருந்தான்" என விளக்கி

உரைத்தார். விடுவாரா பண்டிதமணி? "ஆம்! முருகன் தான் பெரியவனாக இருந்திருப்பான். பெரிய கூட்டம். முருகன் ஒரு குழந்தை எனவே பரமேசுவரன் குழந்தையைத் தோள் மேல் தூக்கி வைத்திருப்பார். முருகன் எல்லோருக்கும் பெரியவனாகக் காட்சி அளித்ததில் ஏதும் வியப்பில்லை தானே?" எனப் பண்டிதமணி கண்ணைச் சிமிட்டியவாறே கூறியதும், கூட்டத்திலிருந்த அனைவரும் குதூகலத்துடன் அதனை ரசித்து மகிழ்ந்தனர்; பெரும் புலவரின் கருத்தைப் பண்டிதமணி திருத்திய பாங்கினை உணர்ந்து நெகிழ்ந்தனர்.

"மகாமகோபாத்தியாயர் பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் என்றால் தமிழ்நாட்டில் அழுத பிள்ளை வாய் மூடாது. அது பாட்டுக்கு அழுது கொண்டிருக்கும். ஆனால் தமிழ்ப் புலவர்கள் கூட்டங்களில் இப்பெயரைச் சொன்ன மாத்திரத்தில் மரியாதைக்கு அறிகுறியாக அமைதி நிலவும்" (மேற்கோள்: சோமலெ, பண்டிதமணி, ப.76) என எழுத்தாளர் கல்கி தமக்கே உரிய பாணியில் பண்டிதமணியின் ஆளுமைப் பண்பினைப் புலப்படுத்தியிருப்பது இங்கே மனங்கொளத்தக்கதாகும்.

7. நெஞ்சத் தாமரையில் குடிகொண்டிருக்கும் தெய்வம்

பண்டிதமணி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையில் விரிவுரையாளராகவும் பேராசிரியராகவும் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராகவும் பன்னிரண்டு ஆண்டுகள் (1934-1946) பணியாற்றினார். ஓர் ஆசிரியர் என்ற முறையில் பண்டிதமணி மாணவர்கள் இடையே தனிச்சிறப்பையும் நன்மதிப்பையும் பெற்றிருந்தார். பண்டிதமணியிடம் மாணவராகப் பயின்றவர்கள் நூற்றுக்கணக்கானவர் ஆவர் அவர்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தவர் பிற்காலத்தில் ஒரு கல்லூரியில் முதல்வராகவும், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் தம் வாழ்நாளில் முன்னேற்றம் கண்ட வ.சுப.மாணிக்கம் ஆவார் வ.சுப.மாணிக்கம் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பொறுப்பில் இருந்த போதுதான் பண்டிதமணி நூற்றாண்டு வந்தது; அதை ஒட்டிச் செயற்குழு ஒன்றினை உருவாக்கிய வ.சுப.மாணிக்கம், பண்டிதமணியின் நூல்கள் அனைத்தையும் அழகிய வடிவில் மறுபதிப்புகள் வருமாறு செய்தார்: தக்க அறிஞர்களைக்

கொண்டு தம் ஆசிரியப் பெருந்தகை பண்டிதமணியைப் பற்றிச் சீரிய நூல்கள் வெளிவருவதற்கும் பாடுபட்டார். இங்ஙனம் அறிஞர் வ.சுப.மாணிக்கம் தம்மை உருவாக்கிய ஆசிரியப் பெருந்தகையான பண்டிதமணி மு.கதிரேசனார்க்கு நிலையான பணிகளைச் செய்து தம் நன்றியறிதலைப் புலப்படுத்தினார். 'தந்தது உன்தன்னை! கொண்டது என்தன்னை! சங்கரா! ஆர்கொலோ சதுரர்?' (திருவாசகம், கோயில் திருப்பதிகம், பாடல் 10) என மாணிக்கவாசகர் இறைவனிடம் வினவியது போல் தான் நமக்கும் வினவத் தோன்றுகின்றது. மாணவரின் படிப்புக்கும் பதவிக்கும் உற்றுழியெல்லாம் உதவி செய்த ஆசிரியரைப் போற்றுவதா? உயர்ந்த பொறுப்பில் வீற்றிருந்த போது ஆசிரியரின் பெயருக்கும் புகழுக்கும் என்றென்றும் பெருமையும் பெருமிதமும் சேர்க்கும் வண்ணம் செயல்பட்ட மாணவரைப் போற்றுவதா? 'வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே' என்பது தான் உண்மை!

பேராசிரியர் வ.சுப.மாணிக்கம் 'என் ஆசிரியர்' என்ற தலைப்பில் சிறுபள்ளியில் இருந்து பல்கலைக்கழகம் வரை தமக்குக் கற்பித்த ஆசிரியர் பலரின் தகுதிகளையும் அவர்களுடன் தமக்கு இருந்த உறவுகளையும் குறித்து ஓர் அருமையான கட்டுரையினை எழுதியுள்ளார். அதில் பண்டிதமணி பற்றி அவர் கூறியிருப்பது வருமாறு:

"ஆசிரியராகவும், அறிவுத் தந்தையாகவும், வாழ்வின் ஞாயிறாகவும், என் வாழ்வுப் பயிர் விளையும் தமிழ் நன்-செய்யாகவும், என் நெஞ்சத் தாமரையில் குடிகொண்டிருக்கும் தெய்வமாகவும் இப்பெருமகனைப் (பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் அவர்களை) போற்றுகின்றேன்" (ஒப்பியல் நோக்கு, ப.183).

தமிழ் வித்துவான் வகுப்பில் இறுதி ஆண்டு பயிலும் போது மாணவ நிலையில் ஆசிரியரான பண்டிதமணியுடன் தமக்கு ஏற்பட்ட ஒரு நெகிழ்ச்சியான அனுபவம் குறித்தும் வ.சுப. மாணிக்கம் அக்கட்டுரையில் நினைவுகூர்ந்துள்ளார். அந்த அனுபவம் வருமாறு:

"வித்துவான் இறுதி நிலையில் சொல்லதிகாரச் சேனாவரையர் உரையைப் பண்டிதமணி பாடம் நடத்தினார். அவ்வுரையை நான் படிப்பேன் எல்லா வரிக்கும் விளக்கம் சொல்லுவது அவர்தம் வழக்கமன்று. சிக்கலான இடங்

களையே விளக்கிச் சொல்வார்கள். கூர்மையுடைய மாணவர் களே அவர்தம் சொல்முறையைப் பின்பற்றிப் புரிந்து கொள்ள முடியும். அப்பாடத்தில் 96 விழுக்காடு நான் பெற்றேன். இவ்வுரையில் இவ்வளவு மதிப்பெண் வாங்கியிருக்கிறாய் என்று என்னிடம் அள்ளூற மொழிந்தனர். நான்கு மதிப்பெண் ஏன் குறைந்தது என்று பணிவோடு கேட்டேன். விடைத்தாளில் ஓரிரு இடங்களைச் சுட்டிக்காட்டி இவ்விடங்களில் எழுதிய விளக்கம் போதாது என்று கூறினார்கள். இங்ஙனம் மாணவர்தம் விடைத்தாளைப் படித்துக் குறைவான இடத்தைக் கோடிட்டுத் திருத்தும் ஆசிரிய வுலகை இனிக் காண முடியுமா என்று ஏங்குகின்றேன்" (ஒப்பியல் நோக்கு, பக்.183-184). இங்ஙனம் வ.சுப.மாணிக்கம் போன்ற நூற்றுக்கணக்கான மாணவர்களின் நெஞ்சங்களிலே மலையினும் மாணப் பெரிய இடத்தினைப் பெற்றிருந்தார் பண்டிதமணி.

8. நயமும் நகைச்சுவையும் இழையோடும் பண்பாளர்

பண்டிதமணிக்கு நல்ல நகைச்சுவை உணர்வு உண்டு. அவர் நகைச்சுவையோடு குலுங்கச் சிரித்துப் பேசுவார். அவரது சொற்பொழிவுகளில் நயமும் நகைச்சுவையும் இழையோடும்; அதே போல் அவரது தனிப்பட்ட உரையாடல்களிலும் நயமும் நகைச்சுவையும் களிநடம் புரியும். அவரோடு நெருங்கிப் பழகியவர்கள் அன்றாடம் அவரது பேச்சில் தவழும் நகைச்சுவையில் ஊறத் திளைத்து மகிழ்வார்கள். அவரிடம் வேலை பார்த்தவர்கள் பலர், தம் வேலையின் அலுப்புத் தெரியாமல் மனம் மகிழ்வதற்கு இந் நகைச்சுவைப் பேச்சு துணையுரியும். பண்டிதமணி எந்த நேரத்திலும் புன்சிரிப்போடு தான் பேசுவார்; பிறரையும் சிரிக்க வைத்து மகிழ்விப்பார். ஏறத்தாழ ஐந்தாண்டுக் காலம் பண்டிதமணிக்குப் பணிவிடை செய்யும் வாய்ப்புப் பெற்ற சிராம. நாகப்பன் 'பண்டிதமணி-யாரின் நகைச்சுவை' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் தம் நினைவில் நின்று மகிழ்விக்கும் பண்டிதமணியின் நகைச்சுவைகள் ஒரு சிலவற்றைப் பதிவு செய்துள்ளார். பதச்சோறாக அவற்றுள் ஒன்றினை இங்கே காணலாம்.

பண்டிதமணி நடக்க முடியாத சூழ்நிலையில் இருந்ததால், வீட்டில் இருந்து கொண்டே படித்தார். ஒருமுறை அவர் திருக்குறள் முழுவதும் மனப்பாடமாகப் படித்து விட்டு, அதை அப்படியே தக்கார் ஒருவரிடம் ஒப்பித்துச் சரிபார்த்துக்

கொள்ள விரும்பினார். வேறு எவரும் அதற்குத் தமது ஊரில் அகப்படாததால், ஓரளவு தமிழறிந்த நண்பர் ஒருவரிடம், "இதில் உள்ள பாட்டுக்கள் எல்லாவற்றையும் இதில் உள்ள படியே ஒப்பிக்கின்றேன். சரிபார்த்துச் சொல்லுங்கள். எதுவும் பிழை கண்டால், நன்றாக நறுக்கென்று என் தலையில் ஒரு பிழைக்கு ஒரு கொட்டு வீதம் கொட்டிவிடுங்கள். சிநேகித முறையில் தாட்சண்யம் பார்க்க வேண்டாம், நன்றாகக் கொட்டி விடுங்கள்" என்று கேட்டுக்கொண்டு முதல் குறளை ஒப்பிக்கத் தொடங்கினாராம். "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்றாராம். ஒப்பித்து முடிக்கும் முன்னேயே, தலையில் 'நறுக்கென்று' ஒரு கொட்டு விழுந்ததாம். பண்டிதமணிக்கு ஒன்றும் புரியவில்லையாம். 'என்ன பிழையாகச் சொல்லி விட்டோம்?' என்று ஆச்சரியப் பட்டு, "இதில் என்ன ஐயா பிழை? ஏன் கொட்டினீர்கள்?" என்று கேட்டாராம். அதற்கு அந்த நண்பர், "நீ சொன்ன பாடல் புத்தகத்தில், அகர முதல 'வெ'ழுத்தெல்லாம் என்று 'வெ' அச்சுப் போட்டிருக்கிறது. நீ சொன்னதில் 'எழுத்தெல்லாம்' என்று 'எ' உச்சரிப்பு வருகிறது. புத்தகத்தில் உள்ளபடி சொல்லாததால் தான் தலையில் கொட்டினேன் என்றாராம். பண்டிதமணி சிரித்துக் கொண்டே, "உங்க கிட்டே ஒப்பித்தால் 1330 குறளுக்கும் 1330 கொட்டு வாங்க வேண்டும். அதற்கு என் தலை தாங்காது" என்று சொல்லி, அவரை மிகவும் சமாதானப்படுத்தி வீட்டுக்கு அனுப்பி வைத்தாராம். இவ்வாறு, 'ஒழுங்கானபடி சரி பார்த்துக் கேட்பதற்குக்கூட அந்தக் காலத்தில் ஆள் அகப்படாது' என்று கூறிச் சிரிப்பாராம் பண்டிதமணி (பண்டிதமணி திரு. மு.கதிரேசச் செட்டியார் அவர்கள் திருவுருவச் சிலை திறப்பு மலர், ப.74).

பண்டிதணியின் இயல்பான நகைச்சுவை உணர்வைப் பறைசாற்றும் பிறிதொரு நிகழ்ச்சி: 'கம்பர் யார்?' என்ற கிளர்ச்சி தமிழகத்தில் வேகமாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்ற நேரம். அப்போது பண்டிதமணி, "கம்பை உடையவன் கம்பன்; அவ்வகையில் பார்க்கும்போது யானே கம்பன்" என்று வேடிக்கையாகச் சொன்னாராம் (சோமலெ, பண்டிதமணி, ப.29).

எத்தகைய கடுமையான சூழ்நிலையிலும் நயமும் நகைச்சுவையும் தவழப் பேசுவது என்பது பண்டிதமணியின் ஆளுமையில் காணப்பெற்ற ஒரு தனிச்சிறப்பு. இதனைப்

புலப்படுத்தும் ஒரு சுவையான நிகழ்ச்சி வருமாறு; சிறிது தொலைவில் உள்ள இடங்களுக்கும் தம் உடல்நிலை காரணமாக மாட்டு வண்டியிலேயே செல்வது பண்டிதமணி யின் வழக்கம். அண்ணாமலை நகரில் இருந்தபோது அவரிடம் ஓர் ஒற்றை மாட்டு வண்டி இருந்தது. அதில் அவர் ஏறிக்கொண்டு நாள்தோறும் மாலை நேரத்தில் உலாவிவரச் செல்வார். அம்முறையில் பண்டிதமணி ஒரு நாள் நண்பர் ஒருவரையும் வண்டியில் உடனழைத்துச் சென்றார். வண்டி போகும்போது முன்பக்கமாக உட்கார்ந்து கொண்டு 'இப்படிப் போ, அப்படிப் போ!' என்று கூறி, வண்டிக்காரனுக்கே வழிகாட்டிக் கொண்டு சென்றார். உடன் வந்தவரோடு ஒரு சிறிதும் பேசவில்லை. அதனால், அந்த நண்பரின் மனம் புண்பட்டது. அப்போது பண்டிதமணி, "வண்டியில் பூட்டப் பெற்றிருக்கும் மாடு புதிது; வண்டிக்காரனும் புதிய ஆள்; அவன் மாட்டை ஓட்டுகிறான்; நான் அவனை ஓட்டுகிறேன். எனவே, என் கருத்தனைத்தும் அப்பக்கமே திரும்பி விட்டது" என்றாராம் (சோமலெ, பண்டிதமணி, ப.27).

இதே போல் எந்தச் சூழலிலும் பரபரப்பும் படபடப்பும் இல்லாமல் செயற்படும் பண்பும் பண்டிதமணியிடம் சிறப்பாகப் பொருந்தி இருந்தது. ஒருமுறை பண்டிதமணியிடம் பெருமதிப்புடைய செல்வர் ஒருவர் தம் வீட்டுக்கு அவரை அழைத்தார். மோட்டார் தம் வீட்டு வாயிலில் நின்றதும், அச்செல்வர் பெருமகிழ்ச்சியடைந்து, விரைந்து சென்று மோட்டார் கதவைத் திறந்தார்; ஊன்றுகோல் முதலிய பொருள்களைத் தாமே வேகமாக வீட்டிற்குள் கொண்டுபோய் வைத்துவிட்டு வந்து, பண்டிதமணியை, 'வருக, வருக' என அன்பொழுக அழைத்தார். சிறிதும் பதறாமல் புன்னகை பூத்த முகத்துடன் பண்டிதமணி, "அந்த ஊன்றுகோலைத் தருக. இன்றேல் என்னால் அங்கு வர இயலாது" என்றாராம் (சோமலே, பண்டிதமணி, ப.30).

"இப்படி நகைச்சுவையான நிகழ்ச்சிகள் நூற்றுக்கணக்கில் பண்டிதமணியுடைய வாழ்க்கையில் உண்டு. அத்தகைய நகைச்சுவை, வாழ்க்கையை வாழ விரும்பும் எல்லோருக்கும் இன்றியமையாததாகும்" (பல்சுவைக் கட்டுரைகள், ப.93) என்னும் அறிஞர் சோமலெயின் கருத்து இங்கே நினைவுகூரத்தக்கதாகும்.

9. தமிழ்ப் பற்றினர், வடமொழி மதிப்பினர்

பண்டிதமணிக்கு இளமையிலேயே - ஒன்பது வயதிலேயே - வடமொழியின் மீது ஈடுபாடு ஏற்பட்டது. அவர் தருவை நாராயண சாத்திரியாரிடம் ஐந்து ஆண்டுகள் வடமொழி கற்றார்; வடமொழியில் இருந்து சிறந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தரும் பணியை ஆர்வத்துடன் மேற்கொண்டார். எனினும் தமிழ், வடமொழியில் இருந்து பிறந்தது எனவும், வடமொழி இன்றித் தமிழ் தனித்து இயங்க முடியாது எனவும் பிதற்றுவார் கொள்கையில் எல்லாம் பண்டிதமணிக்குச் சிறிதும் உடன்பாடு இல்லை. "நம் தமிழ்மொழி யாதும் குறைவுடையதன்று. இது மற்றொரு மொழியினின்றும் தோன்றியதென்றாதல், பிறிதொன்றன் சார்பின்றி நடைபெறாது என்றாதல் கூறுவார் உண்மையாராய்ச்சி இலராவர். ஒருசில வடசொற் கலப்பு உண்மை பற்றித் தமிழ்மொழியை வடமொழியினின்றும் தோன்றியதென்றல் பொருந்தாத ஒன்றாகும் என்பதே பண்டிதமணியின் தனிப்பட்ட கருத்தாக இருந்தது. மேலும் அவர், "ஒரு நாடு தனக்குரிய மொழியை ஆக்கமுற ஓம்பிப் பாதுகாத்தாலன்றித் தான் சிறந்த நிலை எய்துதல் அரிதாம். மொழி வளர்ச்சி கொண்டே அது வழங்கும் நாட்டின் நலத்தை யுணரலாம். எந்த நாடு தன் மொழிச் சுவையை உணர்தலிற் பின்னடைகின்றதோ அது மற்றையெல்லா வளங்களானும் பிற்பட்டதாகும்" (உரைநடைக் கோவை : இரண்டாம் பகுதி, இலக்கியக் கட்டுரைகள், ப.55) என்று தம் கருத்தினை அழுத்தமாகவும் ஆழமாகவும் புலப்படுத்தியுள்ளார்.

பண்டிதமணி வடமொழிக்கு முதன்மை கொடுப்பவர் அல்லர்; மனத்தளவில் வடமொழிச் சாய்வினரும் அல்லர்; ஒரு சிலரைப் போல் வடமொழி வெறுப்பினரும் அல்லர். வடமொழியில் இருந்து புதிய புதிய செய்திகளையும், நாடகம், நீதி நூல், கதை நூல், பொருள் நூல் போன்ற புதிய புதிய துறை சார்ந்த நூல்களையும் ஒல்லும் வகையெல்லாம் அழகிய தமிழில் மொழிபெயர்த்து வழங்கிய வடமொழி வள்ளல் அவர். பேராசிரியர் வ.சுப.மாணிக்கம் இவ்வகையில் பண்டிதமணி பற்றித் தரும் மதிப்பீடு முந்தாய்ப்பானது. அது வருமாறு:

"பண்டிதமணியின் மொழிக் கொள்கையை அறுதியிட்டுக் கூறப்புகின், தமிழ்ப் பற்றினர், வடமொழி மதிப்பினர் என்று

முடிக்கலாம். பற்று என்பது, மொழியாயினும் சமயமாயினும் ஓரிடத்துத் தான் இருக்க முடியும் என்பதும், மற்றை மொழிகளையும் மற்றைச் சமயங்களையும் பொதுப் பார்வையாக மதிக்கவேண்டும் என்பதும் அவர்தம் நூலில் நாம் காணத்தகும் முடிவு" (மேற்கோள்: மீனாட்சி இலட்சுமணன், பண்டிதமணி வரலாறும் தமிழ்ப் பணியும், பக்.86-87).

10. 'தமிழ்நாடு' இதழ் வெளியிட்ட இரங்கற் செய்தி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பண்டிதமணி தமது 73-ஆம் வயதில் 24.10.1953-இல் காலமானார். அவரது மறைவை ஒட்டித் 'தமிழ்நாடு' நாளிதழ் 28.10.1953-அன்று வெளியிட்ட இரங்கற் செய்தி பண்டிதமணியின் பல்வேறு சாதனைகளையும் பரிமாணங்களையும் புலப்படுத்துவதாய் அமைந்திருந்தது. பண்டிதமணியின் பண்பு நலன்களையும் பணிகளையும் இரத்தினச் சுருக்கமான நடையில் படம்பிடித்துக் காட்டும் வகையில் விளங்கிய அச்செய்தி வருமாறு:

"பண்டிதமணி அவர்கள் தம் சொந்த முயற்சியாலேயே இலக்கிய உலகில் முன்னுக்கு வந்தவர். பழம்பெரும் தமிழ் நூல்களின் சுவையைத் தமிழகத்திற்கு எழுத்தாலும் பேச்சாலும் எடுத்துக்காட்டித் தமிழின் சிறப்பை உயர்த்தியவர். வடமொழியைத் தெளியக் கற்றதோடமையாது அம்மொழியிலுள்ள காப்பியங்களைச் சிறிதும் சுவை குன்றாது தமிழில் ஆக்கி, வேறு யாரும் பெற முடியாத பெருமையைத் தேடிக் கொண்டவர். பாடல்களை எடுத்துக் கொண்டு நுண்பொருள் காண்பதில் பண்டிதமணி நிகரற்றவர் அவரைப் போலச் சுவைபடவும் நகைச்சுவை மலியவும் பாடம் சொல்பவர்கள் தமிழ்நாட்டில் வேறு யாருமில்லை என்றே சொல்லலாம். அவருடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருப்பதே இன்பம் பயக்கும் ஒரு செயலாகும். பண்டிதமணி எழுத்து நடை ஒரு தனிப்பட்ட இனிமையுடையது. அவரது வடநூல் மொழிபெயர்ப்புக்கள் முதல் நூலினும் மேம்பாடுடையதென்று வடமொழி வல்லுநர்களே ஒப்புக் கொண்டிருக்கின்றனர். பண்டிதமணியெழுதிய 'மண்ணியல் சிறுதேர்' என்ற மொழிபெயர்ப்பு நூலைப் பற்றிக் கூறும்போது வடமொழிக் கல்லூரித் தலைவர் ஒருவர், 'வடமொழி முதல் நூலில் தெளிவு குன்றிக் கிடக்கும் சில இடங்களில் இத் தமிழ் மொழிபெயர்ப்பு தெளிவு மலிந்து காணப்படுகிறது' என்று குறிப்பிடுகிறார்.

அவருடைய ஆன்மா சிவயோகப் பெருவாழ்வில் திளைக்கவும், தமிழகத்திற்காக அவர் கண்ட கனவுகள் நிறைவேறவும் நாம் இறைவன் திருவடியை ஏத்துவோமாக!" (பண்டிதமணி திரு.மு.கதிரேசச் செட்டியார் அவர்கள் திருவுருவச் சிலை திறப்பு விழா மலர், ப.83).

ஓர் இதழின் குரலாக மட்டுமன்றி, பண்டிதமணி என்ற ஆளுமையைப் பற்றிய ஒட்டுமொத்தத் தமிழ்கூறு நல்லுலகின் உணர்வுப் பதிவாகவும் இச் செய்தி விளங்குவது நெற்றித் திலகம்.

7

தமிழ் ஞாயிறு

"என் ஆசான் பண்டிதமணியின் தொண்டுகள் முத்திறத்தன; தமிழில் நயங்காண் துறையைக் கண்டு சொல்லாலும் எழுத்தாலும் பரப்பியவர்; புதிய வகை நூல்களை மொழிபெயர்த்து வழங்கியவர்; உருக்கும் திருவாசகத்திற்கு உள்ளொளி பெருக்கும் கதிர்மணி விளக்கம் கண்டவர்."

- வ.சுப.மாணிக்கம்*

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த தமிழ்ச் சான்றோர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தவர் பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் (1881-1953) ஆவார். முதுபெரும் புலவரான அவர் தமிழ் வளர்ச்சிக்கு அரை நூற்றாண்டுக் காலம் ஆற்றிய தொண்டுகள் செயற்கு அரியவை. பண்டிதமணி தம் ஊனக் கால் பாராது, இளமை முதலே விழுத்தண்டு ஊன்றிச் சிற்றூர், பேரூர் என எல்லா ஊர்களுக்கும் சென்று, வானம் பொய்ப்பினும் தமிழ் பொய்யா இலக்கிய மாரி பொழிந்தவர்; வடமொழியில் திறமான புலமை பெற்றிருந்தும், தம் சமயக் கட்டுரைகளைக் கூடக் கலப்புத் தமிழிலன்றி இயல்பான தமிழில் எழுதி உரைநடையை வளப்படுத்தியவர்; பிற்காலக் காப்பிய நூல்களில் பெரும் பயிற்சி பெற்றிருந்தும் சங்கத் தமிழே தமிழெனப் பெரிதும் போற்றியவர்; சைவப் பற்றும் தமிழ்ப் பற்றும் நிரம்பக் கொண்டிப்பினும், பிற சமயங்களையும் மொழிகளையும் பொதுமை நோக்குடன் கண்டு போற்றியவர்; எவ்வளவு பெரிய எதிர்ப்போ இழப்போ நேரினும், தமிழ் குறித்து அதுவும் மரபான பழந்தமிழ் குறித்து உயர் பதவியில் வீற்றிருக்கும் தமிழனே இழிவுபடுத்திப் பேசினால், அது எவ்வளவு பெரிய மேடை ஆயினும், கண்ணெதிரே இடித்துரைத்து முழங்கியவர்;

*விழாப் பதிப்புரை, பண்டிதமணியின் நடை நயம், ப.xii.

வித்தகம் பேசி வீணே காலங்கழிக்கும் வேடிக்கை மனிதர்களுக்கு இடையே வாழ்ந்திருந்தும், வடமொழிப் பெருநூல்களை அழகிய முறையில் மொழிபெயர்த்து அப்பர் பெருமான் 'உழவாரப் பணி' செய்தது போல் தமிழாரப் பணி செய்தவர்; புலவர் கூட்டம் தமிழ் இலக்கியங்களைச் சக்கையெனச் சவட்டிக் கொண்டிருந்த நிலையில், இனிய கரும்பென இலக்கியச் சாறு பிழிந்து, சுவை ததும்பத் தெள்ளூற்ற தமிழமுதை உலகம் உவந்து உண்ணச் செய்தவர்; அதனால் 'தமிழ்நயத் தந்தை' என்ற தனிப்பெரும் பாராட்டைப் பெற்றவர்.

இருபதாம் நூற்றாண்டில் தம் பழுத்த புலமைத் திறத்தால் தமிழ் மொழியைப் பல்லாற்றானும் வளர்த்த பெருமை பண்டிதமணிக்கு உண்டு. தமிழ்ப் புலவர்களுள் பெரும்பாலோர் ஒரு சில துறைகளில் மட்டும் புலமை படைத்தவர்களாக விளங்குவர்; ஆயின் பண்டிதமணியோ பல்துறை வித்தகராக விளங்கினார்; உரைநடை, கவிதை, உரை, மொழிபெயர்ப்பு, ஒப்பீடு, சொற்பொழிவு, கல்வி என்றாற்போல் பல்வேறு துறைகளிலும் முத்திரை பதித்தார். சுருங்கக் கூறின், பண்டிதமணி பல்வேறு ஆற்றல்களும் ஒருங்கே பொருந்திய ஒரு பல்கலைச் செல்வராய்த் திகழ்ந்தார்.

பண்டிதமணியின் ஆளுமை பல்வேறு தனித்தன்மைகளை உடையதாகும். ஏழு மாதங்கள் கூடப் பள்ளிக்கூடத்தில் முறையாகக் கல்வி பயிலாவிட்டாலும், பன்னிரண்டு ஆண்டுகள் பெயரும் புகழும் பெற்ற ஒரு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக வீற்றிருந்து தமிழ்ப் பணி ஆற்றிய தனிச்சிறப்பு பண்டிதமணிக்கு உரியது. விடாமுயற்சியும் மன உறுதியும் இருக்குமாயின் உடல் ஊனமுற்றவர்களும் உயர்நிலையை அடைய முடியும் என்பதற்குக் கதிரேசனாரின் வாழ்க்கை ஒரு நல்ல முன்மாதிரி ஆகும். வைரத்தைப் பட்டை தீட்டுவது போல் பண்டிதமணியின் ஆளுமையைச் செதுக்கியவர்களில் சான்றோர்களுக்குப் பெரும்பங்கு உண்டு. பண்டிதமணி சோழவந்தான் அரசஞ் சண்முகனாரிடம் தமிழ் படித்தார்; தருவை நாராயண சாத்திரியாரிடம் ஐந்து ஆண்டுகள் வடமொழி பயின்றார்; காரைக்குடி சொக்கலிங்க ஐயாவிடம் சமய அறிவு பெற்றார்; தவத்திரு ஞானியார் அடிகளிடம் சொற்பொழிவுக் கலையைக் கற்றார். இங்ஙனம் தம் அறிவிலும்

ஆற்றலிலும் ஆய்வுத் திறத்திலும் பண்பிலும் படிப்படியே மெருகேற்றிக் கொண்டு முன்னேற்றம் கண்டார் பண்டிதமணி.

பண்டிதமணியின் வளர்ச்சியிலும் வாழ்விலும் மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபைக்குப் பெரும்பங்கு உண்டு. தொடக்க நாளில் (13.05.1909) இருந்தே அவர் சன்மார்க்க சபையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். 'சிவம் சக்திதன்னை யீன்றும், சக்திதான் சிவத்தை யீன்றும், உவந்து இருவரும் புணர்ந்து உலகுயிர் அனைத்தும் ஈன்றும்' எனச் சிவஞான சித்தியார் சுட்டுவது போல், பண்டிதமணி சன்மார்க்க சபையை உருவாக்கினார்; சன்மார்க்க சபை பண்டிதமணியை உருவாக்கியது. சன்மார்க்க சபையுடன் இணைந்து பண்டிதமணி தமிழ் நாட்டிற்கும் மொழிக்கும் சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் நல்ல பல தொண்டுகளைப் புரிந்தார். சன்மார்க்க சபை விழாக்களில் தலைவராகவும், சொற்பொழிவாளராகவும் கலந்து கொள்ளாத பெரும்புலவர் எவருமே அக்காலத்தில் தமிழ்நாட்டில் இல்லை எனலாம். இக் காரணத்தால் தமிழ் கூறு நல்லுகில் பண்டிதமணி என்றால் சன்மார்க்க சபையும், சன்மார்க்க சபை என்றால் பண்டிதமணியும் நினைவுக்கு வருதல் இயல்பாயிற்று. பண்டிதமணியின் நூல்கள் சன்மார்க்க சபை வெளியீடுகளாக வெளிவந்தன. முத்தாய்ப்பாக, சன்மார்க்க சபை தனது பதினாறாம் ஆண்டு விழாவில், 27.08.1925-இல் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் தலைமையில் இருமொழிப் புலமையும் இயைந்த 'பண்டிதமணி' என்ற சீரிய பட்டத்தைக் கதிரேசனாருக்குச் சூட்டி மகிழ்ந்தது; நெஞ்சார வாழ்த்திப் பெருமைப்படுத்தியது.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை வளர்ச்சியில் பண்டிதமணிக்குச் சிறப்பான ஓர் இடம் உண்டு 'சிறந்த செந்தமிழ் நடை ஆசிரியர்' என அவர் தமிழ் உரைநடை வரலாற்றில் சுட்டப் பெறுகின்றார். பிறர் காண்பதற்கு அரிய இலக்கிய நயங்களையும் சைவ சமய உண்மைகளையும் கண்டு, அவற்றைக் கற்றறிந்தோர் ஏத்தும் சீரிய செந்தமிழ் நடையில் எழுதி உதவியதே பண்டிதமணி தமிழ் மொழிக்குச் செய்த பெருந்தொண்டாக அறிஞர்களால் மதிப்பிடப் பெறுகின்றது. பண்டிதமணியின் எழுத்தும் பேச்சும் உயர்ந்த இலக்கியத் தரம் வாய்ந்தவை; அவை படிப்போரை அல்லது கேட்போரைக்

கீழே இறக்காமல் மேலே உயர்த்தும் பண்பினைப் பெற்றவையாகும்.

பண்டிதமணி இலக்கியச் சுவையில் நயம் காணும் புதிய உத்தியைக் கண்டவர்; அறிவியல் கண்டுபிடிப்புப் போல இலக்கியக் கண்டுபிடிப்பு என்ற ஒரு புதுத்தடத்தினைப் பதித்தவர். உ.வே.சாமிநாத ஐயர் 'பதிப்புத் தந்தை' என்றால் - மறைமலையடிகள் 'உரைநடைத் தந்தை' என்றால் - பண்டிதமணி 'தமிழ் நயத் தந்தை' ஆவார். 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்பது போல் பண்டிதமணியைப் பொறுத்த வரையில் வகுப்பறை, பொது மேடை, தனிப்பட்ட உரையாடல் என 'எங்கும் நயம்!' இலக்கியக் கட்டுரை, சமயக் கட்டுரை, திருவாசக உரை என 'எதிலும் நயம்!' ஆம், இரத்தினச் சுருக்கமாக இப்படிச் சொல்லலாம்; பண்டிதமணி என்றால் நயம்; நயம் என்றால் பண்டிதமணி.

தமிழும் சைவமும் தழைக்கத் தோன்றிய பெரும்புலவர் வரிசையில் பண்டிதமணி முதன்மையானவர். தமிழை உயிராகவும் சைவத்தைக் கண்ணாகவும் போற்றிய பெருந்தகையாளர் அவர். பண்டிதமணியின் சைவ சித்தாந்தப் புலமையை அறிவதற்குத் திருவாசகத்தில் 'திருச்சதகம்', 'நீத்தல் விண்ணப்பம்', 'திருவெம்பாவை' ஆகிய பகுதிகளுக்கு அவர் எழுதிய உரைகளே தக்க சான்றுகளாக மிளிர்கின்றன. 'கதிர்மணி விளக்கம்' என்னும் தலைப்பில் பண்டிதமணி திருவாசகத்திற்கு எழுதிய பேருரையைப் பாராட்டாத தமிழறிஞர்கள் எவரும் இல்லை எனலாம். நெடிது ஆராய்ந்து பண்டிதமணி தம் வாழ்நாளில் திருவாசகத்திற்கு எழுதிய உரை 'உண்மை உரை' ஆகும்; நூலாசிரியரின் உள்ளக் கிடக்கையை நுணுகி ஆராய்ந்து தெளிவு பெற எடுத்து மொழியும் 'அனுபவ உரை' ஆகும். உருக்கும் திருவாசகத்திற்கு உஃளொளி பெருக்கும் உரை வரைந்து தமிழ் உரையாசிரியர் உலகில் நிலையான ஓர் இடத்தைப் பெற்றுள்ளார் பண்டிதமணி.

பண்டிதமணி ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளரும் ஆவார். வடமொழியில் இருந்து பல நூல்களை அவர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். 'மொழிபெயர்த்து அதர்ப்பட (பொருள் பிறழாமல் நெறிப்பட) யாத்தல்' என்னும் தொல்காப்பிய நெறியினைப் பண்டிதமணி தம் மொழி-பெயர்ப்புக்களில் பின்பற்றியுள்ளார். மொழிபெயர்ப்பாளர்-

களுக்குப் பண்டிதமணியின் மொழிபெயர்ப்புக்கள் பாட நூல்கள் போல் விளங்கி வழிகாட்டுகின்றன; மொழிபெயர்ப்பு உலகில் அவர் சீர்மிகு மொழிபெயர்ப்பாளராக மதிப்பிடப் பெறுகின்றார்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபிலே பிறந்து, தன்னம்பிக்கையாலும் விடாமுயற்சியாலும் வாழ்வில் படிப்படியாக முன்னேறிப் புகழேணியின் உச்சியைத் தொட்டவர் பண்டிதமணி. 'தமிழ் ஞாயிறு' எனச் சான்றோர்களால் போற்றப்பெறும் அவர் தமது பல்துறைப் பணிகளால் தஞ்சைப் பெரிய கோயிலைப் போல, தாஜ்மகாலைப் போல என்றென்றும் நிலைபெற்று விளங்குவார். இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை!

துணைநூற்பட்டியல்

I. நூல்கள்

1. யார் இந்த மனிதர்கள்? கல்கி. சென்னை: பாரதி பதிப்பகம், 1957.

2. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள் (இரு பகுதிகள்). திரு.வி. கலியாணசுந்தரனார். சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மறுபதிப்பு 1969.

3. சபைக் கட்டுரைகள். மேலைச்சிவபுரி: சன்மார்க்க சபை, 1962.

4. தமிழ் உரைநடை வரலாறு. செல்வநாயகம்,வி. சென்னை: குமரன் புத்தக இல்லம், மீள்பதிப்பு 2000.

5. பல்சுவைக் கட்டுரைகள். சோமலெ. சென்னை: இன்ப நிலையம், 1961.

6. மலரும் மாலையும். தேசிகவிநாயகம் பிள்ளை, சி. சென்னை: பாரி நிலையம், பதினெட்டாம் பதிப்பு 1992.

7. நான் அறிந்த தமிழ்மணிகள். பி.ஸ்ரீ. சென்னை: வானதி பதிப்பகம், 1971.

8. தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள். பெரிய பெருமாள், குன்றக்குடி. சென்னை: காமதேனு பப்ளிகேஷன்ஸ் லிட், 1996.

9. மாமலர்கள். மாணிக்கம், வ.சுப. காரைக்குடி: கதிரகம், 1978.

10. ஒப்பியல் நோக்கு. மாணிக்கம், வ.சுப. சிதம்பரம் : மணிவாசகர் நூலகம், 1975.

11. இலக்கியச் சாறு. மாணிக்கம், வ.சுப. சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2001.

12. தமிழ் இலக்கிய வரலாறு. வரதராசன், மு. சாகித்திய அகாதெமி, புதுதில்லி: பதினெட்டாம் பதிப்பு 2003.

13. *இவர்கள் இன்னமும் இருக்கின்றார்கள். வாலி. சென்னை: வானதி பதிப்பகம், 2004.*

II. மலர்கள், கலைக்களஞ்சியம் போல்வன

1. *சாமிநாதன் செட்டியார், வ.பழ.சா.அ. & விசுவநாதன் செட்டியார் (வெளியிட்டோர்). பண்டிதமணி யவர்களின் உருவப் படத்திறப்பு விழா. சென்னை: சாது அச்சுக்கூடம், 1940.*

2. *சுந்தரம் மெ. (பொறுப்பாசிரியர்). பண்டிதமணி திரு.மு.கதிரேசச் செட்டியார் அவர்கள் திருவுருவச் சிலை திறப்பு விழா மலர். மகிபாலன்பட்டி: 1974.*

3. *சோமலெ & தமிழண்ணல் (பதிப்பாசிரியர்கள்). மகிபாலன்பட்டி சி.ராம. இராமசாமிச் செட்டியார் மணிவிழா மலர். மதுரை: 04.11.1963.*

4. *தியாகராஜச் செட்டியார், கருமுத்து (தொகுப்பாசிரியர்) பண்டிதமணியின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சியும் பாராட்டும். சென்னை: ஜுபிடர் அச்சுக்கூடம், 1942.*

5. *பண்டிதமணி கருத்தரங்கச் சிறப்பு மலர். மேலைச்சிவபுரி: கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, 1997.*

6. *மெய்யப்பன், ச. (பதிப்பாசிரியர்). நகரத்தார் கலைக் களஞ்சியம். சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 1998.*

III. கட்டுரைகள்

1. *'பண்டிதமணியின் தொண்டுகள்', மாணிக்கம், வ.சுப தினமணி: 16.10.1981, ப.2.*

2. 'Pandithamani - A Gem among Scholars'. The Indian Express, Manickam, V.Sp. Friday, October 16, 1981, p.12.

3. 'Frank and Courageous'. The Indian Express. Srinivasan, T.A. Friday, October 16, 1981, p.12.

பின்னிணைப்பு 1

பண்டிதமணி வரலாற்றுக் குறிப்பு

1.	பிறப்பிடம்	:	மகிபாலன்பட்டி, இராமநாதபுரம் மாவட்டம்
2.	பிறந்த நாள்	:	16.10.1881 விசு ஆண்டு புரட்டாசித் திங்கள் 2–ஆம் நாள் வெள்ளிக்கிழமை
3.	பெற்றோர்	:	முத்துக்கருப்பன் செட்டியார் – சிவப்பி ஆச்சி
4.	திருமணம்	:	1912 சனவரி, வயது 32
5.	மனைவி	:	மீனாட்சி
6.	மக்கள்	:	ஆண் 4, பெண் 3
7.	கல்வி	:	அரசஞ் சண்முகனாரிடம் தமிழ் கற்றல் தருவை நாராயண சாத்தியாரிடம் வடமொழி பயிலல் காரைக்குடி சொக்கலிங்க ஐயாவிடம் சமய அறிவு பெறல்
8.	சன்மார்க்க சபையைத் தோற்றுவித்தல்	:	1909
9.	இலங்கைப் பயணம்	:	1933
10.	அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர் பணி	:	1934–1946
11.	மணிவிழா	:	1941 தலைமை : வள்ளல் அண்ணாமலையரசர்
12.	பெற்ற பட்டங்கள்	:	பட்டம் ஆண்டு வழங்கியது 'பண்டிதமணி' 1925 சன்மார்க்க சபை 'மகாமகோபாத்தியாய' 1942 நடுவணரசு 'சைவ சித்தாந்த வித்தகர்' 1951 குன்றக்குடி ஆதீனம் 'முதுபெரும்புலவர்' தமிழ்ப் புலவர் மாநாடு
13.	வீடு பெற்ற நாள்	:	24.10.1953 வயது 73 விசய ஆண்டு ஐப்பசித் திங்கள் 3–ஆம் நாள்

பின்னிணைப்பு 2

பண்டிதமணியின் நூல்கள்

I. கட்டுரை

1. உரைநடைக் கோவை (முதற்பகுதி): சமயக் கட்டுரைகள். மேலைச்சிவபுரி: சன்மார்க்க சபை, இரண்டாம் பதிப்பு 1982.
2. உரைநடைக் கோவை (இரண்டாம் பகுதி) : இலக்கியக் கட்டுரைகள். மேலைச்சிவபுரி: சன்மார்க்க சபை, 1984.
3. மணிமலர்த் திரட்டு (முதல் 4 கட்டுரைகள்). புதுக்கோட்டை: தமிழ் நிலையம், 1944.
4. நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம், மதுரை: விவேகபாநு அச்சியந்திர சாலை, 1911.

II. கதிர்மணி விளக்கம்

5. திருவாசகம் - திருச்சதகம். மேலைச்சிவபுரி: சன்மார்க்க சபை, நூற்றாண்டு விழாப் பதிப்பு 1985.
6. திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம். மேலைச்சிவபுரி: சன்மார்க்க சபை, மூன்றாம் பதிப்பு 1973.
7. திருவாசகம் - திருவெம்பாவை, மேலைச்சிவபுரி: சன்மார்க்க சபை, மூன்றாம் பதிப்பு 2002.

III. மொழிபெயர்ப்பு

8. உதயன சரிதமும் சுலோசனையும். மேலைச்சிவபுரி: சன்மார்க்க சபை, மறுபதிப்பு 1983.
9. சுக்கிர நீதி. மேலைச்சிவபுரி: சன்மார்க்க சபை, இரண்டாம் பதிப்பு 1982.
10. மண்ணியல் சிறுதேர். மேலைச்சிவபுரி: சன்மார்க்க சபை, மறுபதிப்பு 1988.
11. கௌடலீயம் - பொருணூல் (முதற்பகுதி: முதல் மூன்று அதிகரணங்கள்). அண்ணாமலைநகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1979.

IV. செய்யுள்

12. பதிற்றுப்பத்தந்தாதி

V. கைப்படி

13. மாலதி மாதவம் (மொழிபெயர்ப்பு)

பின்னிணைப்பு 3

பண்டிதமணியைப் பற்றிய நூல்கள்

1. பண்டிதமணியின் திருவாசக உரை. இராச கோபாலன்.இரா. திருப்பத்தூர் (பசும்பொன்): ஆரார் வெளியீடு, 1996.
2. கதிரேசனார் உரைநடைச் சிறப்பு. கோடப்பிள்ளை, த. கரூர்: கொங்குப் பதிப்பகம், 2001.
3. பண்டிதமணி பிள்ளைத்தமிழ். சுந்தரம், சொ.சொ.மீ. மேலைச்சிவபுரி: சன்மார்க்க சபை,1991.
4. பண்டிதமணி. சோமசுந்தரனார், பொ.வே. சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மறுபதிப்பு 1970.
5. பண்டிதமணி. சோமலெ. சென்னை: பூம்புகார் பிரசுரம், மூன்றாம் பதிப்பு 1977.
6. பண்டிதமணியின் தமிழ்ப் பணி. தியாகராசன்,க. அண்ணாமலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 2000.
7. பண்டிதமணி. திருநாவுக்கரசு,விசு. புதுக்கோட்டை: தமிழன்னை நிலையம், இரண்டாம் பதிப்பு 1946.
8. பண்டிதமணியின் நாடகத் தமிழ். பழநி, ஆ. மேலைச் சிவபுரி: சன்மார்க்க சபை, 1983.
9. மண்ணியல் சிறுதேர் - ஒரு மதிப்பீடு. மீரா. தஞ்சாவூர்: அன்னம், 2004.
10 பண்டிதமணி வரலாறும் தமிழ்ப் பணியும். மீனாட்சி இலட்சுமணன். சென்னை: ஏகம் பதிப்பகம், 2004.
11. ஊன்றுகோல். முடியரசன். மேலைச்சிவபுரி: சன்மார்க்க சபை, 1983.
12. இரா.பண்டிதமணியின் நடை நயம். மோகன், மேலைச் சிவபுரி: சன்மார்க்க சபை, 1983.

பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் [1881-1953] : பழுத்த புலமைத் திறத்தால் தமிழ் மொழியைப் பல்லாற்றானும் வளர்த்த பெருமைக்கு உரியவர். சீரிய செந்தமிழ் நடை ஆசிரியர்; திருவாசகத்திற்கு உள்ளொளி பெருக்கும் **'கதிர்மணி விளக்கம்'** என்னும் பேருரை கண்டவர்; இலக்கிய ஆர்வலர்களால் 'தமிழ் நயத் தந்தை' என மதிப்புடனும், மரியாதையுடனும் அழைக்கப் பெறுபவர்; வடமொழியிலிருந்து தமிழுக்கு அரிய நூல்களை மொழி பெயர்த்துத் தந்த சீர்மிகு மொழி பெயர்ப்பாளர். 'தமிழ் ஞாயிறு', 'முதுபெரும் புலவர்', 'சைவ சித்தாந்த வித்தகர்', 'மகாமகோபாத்தியாய' என்றாற் போல் உயரிய பட்டங்கள் பலவற்றைப் பெற்றவர்.

நிர்மலா மோகன்: மதுரை செந்தமிழ்க் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வருபவர்; குறம் குறவஞ்சி குளுவ நாடகம் ஆகியவற்றை ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர்; 'இந்திய இலக்கியச் சிற்பிகள்' வரிசையில் ஏற்கெனவே 'கி.வா.ஜகந்நாதன்' 'சோமலெ' ஆகிய இரு நூல்களை எழுதியவர்; 'இலக்கியத் தென்றல்', 'இலக்கிய மணிகள்', 'இலக்கிய மலர்கள்' முதலான பத்து நூல்களின் ஆசிரியர்; அமெரிக்கா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய அயல்நாடுகளுக்குச் சென்று தமிழின் பெருமையைப் பறைசாற்றியவர்; நாடறிந்த நாவலர்; 'தமிழ்ச் சுடர்', 'ஔவை விருது' முதலான பல விருதுகள் பெற்றவர்.

ISBN 812602201-9

9 798126 022013

Pandithamani
Mu. Katheresan Chettiar
(Tamil) Rs. 25